

இன்றைய காலநிலை

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



காங்கிரஸ் கட்சியை தூக்கி எறிய வேண்டும் பக். 6



மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இனப்படுகொலை நிகழக்கூடும் பக். 7



நெடுந்தீவு உதைபந்தாட்டத்தில் கிண்ணத்தை வென்றது உதயசூரியன் பக். 10



முதல்நிலை அணியாக ஆஸி. பக். 23


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 24

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 059 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 11, வெள்ளி 24.01.2014


# இலங்கை விவகாரத்தில் ஐ.நா. நேர்மை இல்லை

### *தொடர் பிரேரணைகள் குறித்து மஹிந்த அரசு கடும் சீற்றம்*

கொழும்பு, ஜனவரி 24
இலங்கைக்கு மேலதிக அழுத்தங்களைக் கொடுப்பதற்காக ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அடுத்தடுத்து பிரேரணை கள் கொண்டு வரப்படுகின் றன. நியாயபூர்வமான - நேர்மையான வழியில் இலங்கை அங்கு அணுகப்படவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்க ஒரு செயற்பாடு என இலங்கை அரசு நேற்றுக் கவலை தெரிவித்துள்ளது.

ஆசிய பவுண்டேஷனின் இயக்குநர் சபையினருக்கும், அரசுக்குமிடையே நேற்று வியாழக்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நிகழ்ந்த சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

பிரேரணைகளைக் கொண்டு வரும் தரப்புகள் இலங்கை குறித்து வெவ்வேறு பக்கங்களில் வெவ்வேறு காட்சிகளைத் தோற்றுவிக்க முயலுகின்றன. இத்தகைய பிரேரணை

21 ஆம் பக்கம் பார்க்க



## பேராற்றுக்கு குறுக்கே பெரிய பாலம்

யாழ்ப்பாணம், ஜன. 24
பண்ணைப் பாலத்தைப் போன்ற மிகப் பெரிய பாலம் மண்டைதீவுச் சந்திக்கு அண்மையாகப் பேராற்றுக்கு குறுக்காக அமைக்கப்படவுள்ளது.

தீவகத்துக்கான வீதிப் புனரமைப்பு முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், நீரோட்டம் மற்றும் மீன்பிடியைக் கருத்தில் கொண்டே இந்தப் புதிய பாலம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தையும், தீவகத்தையும் இணைக்கும் பண்ணைப் பாலத்தின் ஊடாகப் பிரதான வீதியின் முதலாவது ஒரு கிலோ மீற்றர் கடந்த ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பணிகள் கடலின் நீரோட்டத்தைக் கருத்தில் கொள்ளாமல், மீன்படுதலைக் கவனத்தில் எடுக்காமல் மேற்கொள்ளப்பட்டதாக மீனவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

வீதிக்குக் குறுக்காகப் பாலங்

21 ஆம் பக்கம் பார்க்க

## புதைகுழியில் நேற்றும் ஒரு எலும்புக்கூடு

மன்னார்.ஜன 24
மன்னார் மனிதப் புதைகுழி நேற்று வியாழக்கிழமை தோண்டப்பட்டபோது மேலும் ஒரு மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணத்தின் முன்னிலையில் நேற்றுத் தோண்டும் பணிகள் இடம்பெற்றன.

அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல். வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர் தோண்டும் பணிகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை தோண்டும் பணிகள் ஆரம்பமானபோது ஒரு எலும்புக்கூடு மட்டுமே மீட்கப்பட்டது. இதனுடன் சேர்த்து இதுவரை புதைகுழியில் இருந்து 44 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் 4 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டுப் பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. புதைகுழியைத் தோண்டும் பணிகள் இன்றும் இடம் பெறும். (த-56)



*புதைகுழியில் மீட்கப்பட்ட மண்டைஓடுகளை ஆராய்கின்றனர் அனுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி எல்.ஆர்.வைத்தியரட்ண தலைமையிலான குழுவினர். (த-56)*

## யாழ். வைத்தியசாலையுள் கஞ்சா போதைப் பாவனை

### *இருவர் வகையாக மாட்டினர்*

*யாழ்ப்பாணம் ஜன 24*
*யாழ். போதனா வைத்தியசாலையில் கஞ்சா போதைப் பொருள் புகைத்துக் கொண்டிருந்த வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 2 பேரை வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்றுமுன் தினம் இரவு கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.*

*பல மாதங்களாக இந்தச் சம்பவம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினமே இவர்கள் கையும் மெய்யுமா கப் பிடிபட்டனர் என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.*

*கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் நிறு*

21 ஆம் பக்கம் பார்க்க

## யாருடனும் பேசக்கூடாது என கமலுக்கு மன்று நிபந்தனை

### *மாகாண சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு*

யாழ்ப்பாணம், ஜன. 24
நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியேல் றெக்ஷயனின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட முன்னாள் அமைப்பாளரான கமல் என அழைக்கப்படும் கந்தசாமி கமலேந்திரன் மாகாண சபை அமர்வுகளில் பங்கேற்க ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று முறையான அனுமதியை வழங்கியது.



21 ஆம் பக்கம் பார்க்க

## கமலை வெளியே விட்டால் எனக்கு நிச்சயம் ஆபத்து

### *றெக்ஷயனின் சகோதரி கதறல்*

முல்லைத்தீவு, ஜன. 24
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியேல் றெக்ஷயன் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தாம் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறனர் என்று அவரது சகோதரி றெஜீனா நேற்றுத் தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க



## கொக்கிளாய் மீனவர்களின் படகுகள் உடைத்து நாசம்

### *இனந்தெரியாதோர் கைவரிசை*

முல்லைத்தீவு, ஜன. 24
கொக்கிளாய் புளியமுனை கிராமத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான படகுகள், வலைகள் என்பன நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு



21 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் நால்வர் விடுவிப்பு

யாழ்ப்பாணம் ஜன 24
படகு சேதமாகி நீரில் மூழ்கியதால் சுமார் 13 கிலோ மீற்றர் தூரம் நீந்தி நெடுந்தீவுக் கடற்கரையில் ஒதுங்கியதாகத் தெரிவித்துப் பொலிஸில் சரணடைந்த இந்திய மீனவர்கள் நான்கு பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த டிசம்பர் மாதம் 5ஆம் திகதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உட்பட 4 பேர் இவ்வாறு கரையொதுங்கினர். அவர்கள் புதுக்கோட்டை ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த அவர்கள் சட்டமா

21 ஆம் பக்கம் பார்க்க

## ஆலயங்களின் புனிதத்தை பாதுகாக்க இன்று பேரணி

யாழ்ப்பாணம், ஜன. 24
ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஓம் நமச்சிவாய ஆன்மீகப் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சிவ தொண்டர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## போர் முடிவடைந்த பின்னரும் வடக்கில் பிரச்சினை தீரவில்லை

### *வடமராட்சி கிழக்கில் அமெரிக்கத் தூதுவர்*

வடமராட்சி, ஜன. 24
போர் முடிவடைந்த போதும் வடக்கில் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையில் மக்கள் இப்போதும் உள்ளார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூது

21 ஆம் பக்கம் பார்க்க



மீனவர் ஒருவருக்கு படகைக் கையளிக்கிறார் அமெ.தூதுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரப் போக்கு பேராபத்தையே தரும்

### உலக நடைமுறைகளை அரசு உணர வேண்டும் என்கிறார் விக்கி

அதிகாரங்களை எப்பொழுது தனிப்பட்டவர்கள் அல்லது குடும்பங்கள் அல்லது கட்சிகள் அல்லது இராணுவம் தம் வசப்படுத்த எத்தனிக்கின்றனவோ அது ஈற்றில் கவலையையே அவர்களுக்கு உண்டாக்கும். அண்மைக் காலத்தில் அவ்வாறு சர்வாதிகாரிகளாக மாறிய பலர் இறுதியில் தமது தவறுகளை உணர்ந்து திருந்திய வரலாறுகளும் உள்ளன. தமிழ் மக்களை இன ரீதியாக படுகொலைக்கு ஆளாக்கிய அரசு என்று அகில உலகமும் கூறும் போது ஜனாதிபதி கடும் போக்கைக் கடைப்பிடிப்பது தவறானது ஆகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்குமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். வ்லி.தெற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு நிகழ்வு நேற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முதலமைச்சர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல வித பணிகளுக்கிடையில் இந்த விழாவில் கலந்துகொள்வதற்கு காரணம் உண்டு. நீங்கள் உள்ளூராட்சிவாரம்கொண்டாடும் போது உள்ளூராட்சி அமைச்சர் என்ற முறையில் நான் கலந்துகொள்வது வழமை. எமக்கு அதிகாரங்கள் இல்லை என்று நாமே கூறுவதால் எந்த நன்மையும் கிடைத்துவிடாது. கிடைத்திருக்கும் அதிகாரங்களையும் தடைகளையும் கருத்தில் எடுத்துக்கொண்டு நாம் முடியுமானவரை முன்னேற வேண்டும்.

இந்த வருடம் மார்ச் மாதத்தில் சர்வதேச ரீதியாக கேள்விக்குட்படுத்தப் போகும் இலங்கை அரசு, அடுத்த தேர்தலை மட்டும் மனதிற்கொண்டு பிழையான வழியில் போய்க்கொண்டிருக்கிறது. இது எம்மைப் பொறுத்தவரையில் சட்டத்துக்குப் புறம்பான நடைமுறையாகவே கருத முடியும்.

ஜனாதிபதி எமக்கு அளித்த வாக்குறுதிகள் பலவற்றை செயற்படுத்த வில்லை. அதற்கு மாறாகவே செயற்பட்டு வருகிறார். எனினும் இது அவருக்கே ஆபத்துக்களை கொடுக்கும். 13ஆவது திருத்தம் ஒன்றுக்கும் உதவாதது. ஒரு கையால் கொடுப்பதுபோல் கொடுத்து மறு கையால் திருப்பி எடுக்கும் தன்மை வாய்ந்தது என்று நாம் தேர்தலில் கூறியதை ஜனாதிபதி தற்போது சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தி வருகிறார். இதுவே அவருக்கும் அரசுக்கும் ஏற்பட்டுள்ள பெரும் பாதிப்பு. அதுவும் இனப்படுகொலைகளில் இலங்கை அரசு ஈடுபட்டது என்ற அவச்சொல்லுக்கு ஜெனீவாவில் முகம் கொடுத்து வரும் ஜனாதிபதி, தமிழ் மக்களுக்கு சட்டப்படி கொடுக்க வேண்டிய சொற்ப சலுகைகளையும் மறுப்பதால் அவரே இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பது போல் அமைந்துள்ளது.

அதிகார நடைமுறைகள் இப்போது வெற்றிக்குரியனவாக இருந்தாலும் எதிர் காலத்தில் ஆபத்துக்களையே தரும் - என்றார். (ஐ-86)

## சம்பில்துறை சம்புநாதருக்கு பெப். 2 இல் திருக்குடமுழுக்கு



யாழ்ப்பாணம், ஜன. 24

மாதகல் சம்பில்துறை சம்புநாதஈஸ்வரர் ஆலயத்தில் சிவதொண்டர் அமைப்பால்; சிவத்தமிழ் அன்பர்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிவபெருமானின் 21 அடி உயரத் தியானத் திருச்சொரூபத்திற்கான திருக்குடமுழுக்கு எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

செந்தமிழ் திருமுறையில் இந்த திருக்குடமுழுக்கு வைபவம் நடைபெறவுள்ளது. சுவிஸ் நாட்டின் தலைநகர் பேர்ண் மாநிலத்தில் தமிழில் வழிபாடு காணும் அருள்ஞானமிகு ஞானாம்பிகை சமேத ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் அருட்சுனைஞர்கள், செந்தமிழ் வேள்விச் சதுரர் திருவருள் மு. பெ. சத்தியவேல் முருகனாரின் மாணாக்கர்களாகிய சிவருசி. தர்மலிங்கம் சசிக்குமார், ஞானத்திரு திருச்செல்வம் முரளீதரன் ஆகியோருடன் சிவஞானச் சித்தர்பீட நிறுவுநர் திருநிறை சிவயோகநாதன் ஐயா அவர்களும் இணைந்து திருக்குட முழுக்கினைச் செந்தமிழ் திருமறையில் ஆற்றவுள்ளனர்.

அன்றைய தினம் சிவதீட்சை வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளதுடன் சிவ நற்பணி மன்றங்களின் அறப்பணிச் செயற்றிட்டங்களில் இணைந்து கொள்ள விரும்புவோர் சிவ தொண்டர்களாகவும் சிவ மங்கையர்களாகவும் உறுதிப்பிரமாணம் எடுத்துக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## மாணவி சடலமாக மீட்பு

வடமராட்சி.ஜன.24

பாடசாலை மாணவி ஒருத்தி தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, மாதனையைச் சேர்ந்த மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் முருகதாஸ் பத்மப்பிரியா (வயது 13) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-400.173)

## மதுவரி திணைக்கள பரீட்சை பிற்போடப்பட்டது

மதுவரித்திணைக்களத்துக்கு புதிய அலுவலர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த போட்டிப்பரீட்சை நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருந்தது.

எனினும் அது நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தப் போட்டிப் பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ-14)

## உள்ளூராட்சி வாரப் பரிசளிப்பு வலி.தெற்கு பிரதேச சபையில்



வலி வடக்கு ஜன 24

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு விழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. முன்னதாக மருதனார்மடம் சந்தியில் இருந்து விருந்தினர்கள் மங்கள வாத்திய சகிதம் அழைத்துவரப்பட்டு மருதனார் மடத்தில் அமைந்துள்ள பிரதேச சபை தலைமையலுவலக கேட்போர் கூடத்தில் தவிசாளா தி.பிரகாஷ் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக உள்ளூராட்சி ஆணையாளர் ம.ஜெகூ, யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஐக்சில் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வட மாகாண சபையின் உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், கஜதீபன், சுகிர்தன், திருமதி அனந்தி சசிதரன், பரம்சோதி சிவயோகராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கடந்த வருடம் இடம் பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற பிரதேச சபைக்கு உட்பட்ட மாணவன் ம.தனுராஜ், பிரதேச சபையின் தலைமையகம் அமைப்பதற்க்கு காணி அன்பளிப்புச் செய்த கொடையாளி மு.பொ.நல்லதம்பி, க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று 'ஏ' சித்திகளை பெற்ற வாழ்வக மாணவன் நாமதன், தேசிய மட்டத்தில் ஆங்கில தினப் போட்டியில் கலந்துகொண்டு முதலாம் இடம் பெற்ற உடுவில் மகளிர் கல்லூரி மாணவி ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ஐ-86)

## மாநகரச சபை ஆளும் தரப்புக்கு தனியான பத்திரிகை தேவையாம்

### சபையில் நேற்று புதிய கோரிக்கை

யாழ்ப்பாணம்.24

யாழ்.மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் செய்யும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக எந்த ஊடகங்களும் செய்தி வெளியிடுவதில்லை. எனவே அந்த தகவல்களை வெளியிடுவதற்கு தனியான பத்திரிகை ஒன்றை மாநகர சபை வெளியிட வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர் கிளேடபோசியன் நேற்று சபையில் கோரிக்கை விடுத்தார். யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதன் போது மாநகர சபையின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்த குற்றச்சாட்டை முன் வைத்தார். மாநகர சபையால் பயனுள்ள வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை ஊடகங்கள் வெளியிடுவதில்லை. எனவே மாநகர சபையின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் படங்களுடன் செய்தி வெளியிடப்பட வேண்டும் அதற்கென பத்திரிகை ஒன்றை மாநகர சபை ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். (ஐ-14-7)

## நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா நேற்றுக் காலமானார்



கொழும்பு, ஜன. 24

மேன்முறையீட்டு நீதிமன்ற ஸ்ரீஸ்கந்தராஜா கொழும்பில் நேற்றுக் காலமானார்.

2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்ட இவர் 2011 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். 1976 ஆம் ஆண்டு இவர் சட்டக் கல்லூரியில் நுழைந்து 1979 ஆம் ஆண்டு சட்டத்தரணியானார். 1981 ஆம் ஆண்டு அரச சட்டத்தரணியான இவர் 1992 ஆம் ஆண்டு சிரேஷ்ட [illegible] சட்டத்தரணியானார். 1997 ஆம் ஆண்டு [illegible] மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். (த-4)

## பருத்தித்துறைச் சந்தையில் நேற்று மரக்கறி வியாபாரிகள் போராட்டம்



பருத்தித்துறை, ஜன. 24

பருத்தித்துறை, பொதுச்சந்தை வியாபார நடவடிக்கைக்கு பொருத்தமாக இல்லையென தெரிவித்து மரக்கறி வியாபாரிகள் நேற்று கடைகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு கடைகளைத் திறக்ளளளள காது சந்தைக் கட்டடத்துக்கு வெளியே வியாபாரிகள் திரண்டனர்.

போராட்டம் குறித்து வியாபாரிகள் கருத்து தெரிவிக்கையில், 'மரக்கறி விற்பனை நிலையங்கள் மேல் மாடியில் அமைக்கப்பட்டுள்ளன எங்களால் அங்கு மரக்கறிப் பொதிகளை தூக்கிச் செல்ல முடியாதுள்ளது. எமது சிரமத்தைக் கருத்திற்கொண்டு தரைப்பகுதியில் கடைகளை அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக பழைய சந்தைப்பகுதியில் கடைகளை அமைக்க அனுமதிக்க வேண்டும். மாடிப் படிகளில் ஏறி வந்து நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வது குறைந்துள்ளது. இதனால் எமது வாழ்வாதார தொழில் பாதிக்கப்படுகிறது என்று கவலையுடன் தெரிவித்தனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு வந்த பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா ரவீந்திரன் வழங்கிய உறுதிமொழியை அடுத்துபோராட்டம் கைவிடப்பட்டது.

இது குறித்து பருத்தித்துறை நகர சபை தலைவர் தெரிவிக்கையில் வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடம் குறித்து அதிருப்தியில் அவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர் களை கீழ்ப் பகுதிக்கு மாற்று வதென்பது சாத்தியமில்லை. இந்த நிலையில் அவர்களை இடம் மாற்றாமல் அவர்களுக்கான மேலதிக தேவைகள் நிறைவு செய்து தரப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-10-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகள் ஒத்துழைக்காவிடின் மக்கள் திரண்டு போராடுவார்கள்

## *இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தாதீர்கள் என்கிறார் சுரேஷ் எம்.பி*

வலி. வடக்கு ஜன 24
வட மாகாணத்தில் அரச அதிகாரிகளுக்கு எதிரான போராட்டம் ஒன்றுக்கு வழி ஏற்படுத்தக்கூடாது. அப்படியொரு சந்தர்ப்பம் நிகழுமானால் எமது பிரதேசத்தின் அபிவிருத்தி முற்றாக பாதிப்படையும் எனவே மாகாண சபையுடன் இணைந்து அரச அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் இவ்வாறு கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.
வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார பரிசளிப்பு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,
வலி.தெற்குப் பிரதேச சபையின் இந்தக் கட்டடம் பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில்த்தான் திறந்து வைக்கப்பட்டது. நெருக்கடிக்கு மத்தியில் தான் இன்றும் செயற்பட்டு வருகின்றது. தற்போது மாகாண சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றிற்கு மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த சபைகளை நல்லமுறையில் நடத்த ஜனாதிபதியும் அமைச்சர்களும் அரச ஊழியர்களும் திறந்த மனதுடன் உதவி செய்ய வேண்டும். மாறாக தடைக்கல்லாக இருக்கக் கூடாது.
கட்டடங்களைத் திறந்து வைப்பது முதல் நிர்வாக செயற் பாடுகளை முன்னெடுப்பது வரை இந்த ஒத்துழைப்பு தேவை.
அரச ஊழியர்கள் எந்தளவுக்கு சட்டதிட்டங்களை அறிந்து வைத்துள்ளனர் என்பது பெரும் பிரச்சினையாகவுள்ளது. கடந்த காலங்களில் மாகாண சபை இயங்காத நிலையில், ஆளுநரும் அரச ஊழியர்களுமே செயற்பட்டு வந்தனர். அவர்களிடமே அதிகாரங்களும் இருந்தன. தற்போது தேர்தல்



நடைபெற்று வட மாகாண சபை அமைக்கப்பட்டு அதற்கான பிரதிநிதிகள் உள்ளபோதும் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதில் சிலர் முட்டுக்கட்டையாக உள்ளனர். மாகாண சபை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் செயற்பட ஆரம்பித்துள்ளது. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் அதற்கேற்ற வகையில் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.
வட மாகாண சபையை இலங்கை அரசு பரிசளித்தது என்று அரச ஊழியர்கள் கருதக் கூடாது. முன்னர் ஜனாதிபதி, வடக்கு மாகாண சபைக்கு பிரதம செயலாளர், ஏனைய செயலாளர்கள் நியமனம், உயர் அதிகாரிகளின் நியமனம் சம்பந்தமாக முதலமைச்சருடன் இணைந்து செயல்படுவோம் என்று கூறினார். ஆனால் இன்று அவர் அதனை மறுத்திருக்கிறார்.
அரச அதிகாரிகள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஜனாதிபதிக்கும் ஆளுநருக்கும் விசுவாசமாக செயற்படப்போகின்றீர்களா அல்லது மக்களின் பிரதிநிதிகளுக்கு ஒத்துழைத்து உங்களது கடமைகளை செய்யப் போகின்றீர்களா என்பதை முடிவெடுத்துக் கொள்வதே இந்த புரிந்து கொள்ளல் ஆகும்.
மக்களுக்கு திறந்த மனதுடன் அரச அதிகாரிகள் செயலாற்றவில்லையெனில் மக்கள் உங்களுக்கு எதிராக போர்க்கொடி ஏந்துவார்கள் அதற்கு நீங்கள் காரணமாகி விடுவீர்கள். இதனை புரிந்துகொண்டு சேவையாற்ற வேண்டும் - என்றார். (ஐ-86)

# பிழையான அரசியலே தமிழனை ஒடுக்கியது

*கன்னியுரையில் எதிரணி உறுப்பினர் ஜெயபாலன்*

யாழ்ப்பாணம்.24
இனவாதத் தலைவர்களின் பிழையான அரசியல் கொள்கைகளாலும் சிங்களத் தலைமைகளின் சூழ்ச்சிகளாலுமே தமிழினம் பல்வேறு துன்ப துயரங்களை அனுபவிக்க நேர்ந்தது. இனியும் அத்தகையதொரு நிலையை தோற்றுவிக்காது தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க நாம் முனைய வேண்டும் என்று யாழ்.மாநகர சபையின் எதிரணி உறுப்பினராகக் கடமையேற்றுள்ள வ.க.ஜெயபாலன் தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையின் மாதாந்தக்கூட்டம் நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக வ.க. ஜெயபாலன் எதிரணி உறுப்பினராக கடமைகளை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து அவர் கன்னியுரை நிகழ்த்தினார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.
தமிழ் தேசியப் போராட்டத்துக்காக அன்று தொட்டு இன்று வரை உயிர் நீத்த தமிழ்த் தலைவர்கள் தமிழ் இயக்கப் போராளிகள் இறுதி வரை வீரச் சமராடிய வீரவேங்கைகள் அனைவருக்கும் எனது வணக்கத்தை சபையில் சமர்ப்பணம் செய்கிறேன்.
இலங்கைத் தேசம் அந்நிய தேசத்தவர்களிடம் இருந்து விடுதலை பெற்ற பின்னர் பிழையான அரசியல் கொள்கைகளினாலும் சிங்களத்தலைமைகளின் சூழ்ச்சியினாலும் அல்லல்பட்டு கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளை இழந்து அவல வாழ்வுக்கு இந்த நடவடிக்கைகளே காரணமாக அமைந்தது. அன்று தமிழ்த் தலைவர்கள் தீர்க்கமான முடிவை எடுத்திருந்தால் இன்று ஈழத்தமிழருக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்காது. எனவே இனிவரும் காலத்திலாவது நமது தமிழினத்துக்கிடையே அரசியல் வேறுபாடுகளை களைந்து, முரண்பாடுகளை மறந்து இன மத பேதமின்றி அடிப்படை உரிமைகளுக்காக இலட்சியத்தை நோக்கிப் பயணிப்போம் - என்றார். (ஐ-14-7)

# பாதுகாப்பற்ற கிணற்றை புனரமைக்குமாறு உத்தரவு

தென்மராட்சி, ஜன. 24
நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் பாவனையில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றை 15 தினங்களுக்குள் பாதுகாப்பான முறையில் புனரமைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.
கடந்த 21 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சாவகச்சேரி சுகாதார பகுதியினர், சாவகச்சேரி பிரதேசசபை ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அங்கு சென்று பார்வையிட்ட குழுவினரால் அது பொதுக் கிணறு அல்ல. தனியாரின் பங்குக் கிணறு என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
இதனையடுத்து கிணற்றின் பங்குதாரர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு விசாரித்த போது இருவர் தமது காணிகளில் கிணறு கட்டிப் பயன்படுத்துவதாகக் கூறினர். இந்தக் கிணற்றை 15 தினங்களுக்குள் புனரமைப்பதுடன் அதன் சுற்றாடல் பகுதியையும் துப்புரவு செய்யுமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது. (த-9)




*மேல் மாகாணத்தில் பகல் நேரங்களில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் நேற்று முதல் பிரதான விளக்குகளை ஒளிரவிட வேண்டுமென பொலிஸார் அறிவித்துள்ளனர். இதனையடுத்து நேற்று மோட்டார் சைக்கிள்கள் பிரதான விளக்குகளை ஒளிரவிடப்பட்டவாறு பயணித்தன.*

# பிரதி மேயரை கிண்டலடித்தார் முதல்வர்

யாழ்ப்பாணம்.24
'ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லையாம்' என்று பிரதி மேயரை சபையில் கிண்டலடித்தார் முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா.
யாழ்.மாநாகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுச் சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மாநகர சபை முதல்வரால் பிரேரணைகள் முன் வைக்கப்பட்டன. இது தொடர்பில் உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தனர். இதன்போது யாழ். மாநகர சபையின் பிரதி மேயர் தனது பக்கக் கருத்துக்களை தெரிவித்துக்கொண்டிருந்தார். அப்போது இடையில் குறுக்கிட்ட முதல்வர் கிண்டலாக ஆடத்தெரியாதவனுக்கு மேடை சரியில்லை எனக் கூறினார். இதன்போது குறுக்கிட்ட பிரதி மேயர், சபையில் இவ்வாறு கூற முடியாது. உறுப்பினர்களின் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார். (ஐ-14)

# இலையான் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை

*சாவகச்சேரி உணவகங்களில்*

தென்மராட்சி, ஜன.24
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களில் இலையான்கள் அதிகரித்துக் காணப்படுவதால் அங்கு அவற்றைக் கட் டுப்படுத்த வாரம் ஒரு தடவை மருந்து விசிற வேண்டும் என்று சபையின் சுகாதாரக் குழுக் கூட் டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ள தாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்துள்ளார்.
உணவு கையாளும் நிலையங் களில் பெப்ரவரி மாதம் தொடக்கம் இலையான் களைக் கட்டுப் படுத்தும் பணிகள் ஆரம்பிக் கப்படவுள் ளதாகவும் சபையின் பொது சுகாதாரப் பரிசோதகர் மூலம் உணவு கையாளும் நிலையங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)

# மாயமாகிய பாடசாலை தண்ணீர் மோட்டர்

வலி.தென்மேற்கு, ஜன.24
ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் பொருத்தப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் மோட்டர் இரவோடிரவாக மாயமாய் மறைந்து விட்டது.
குறிப்பிட்ட மோட்டார்குறித்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நூற்றுக்கணக்கான மாண வர்கள் குடிதண்ணீரை இலகுவாகப் பெறுவதற்கு வசதியாக இது நலன்விரும்பிகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகும். திருட்டுக் குறித்து வித்தியாசாலை அதிபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்த [illegible] னர். (வ-115)

# மாநகர சபையில் 142 வெற்றிடங்கள்; அடுத்த மாதம் பூர்த்தி செய்யப்படும்

*ஆணையாளர் நேற்று அறிவிப்பு*

யாழ்ப்பாணம்.ஜன.24
யாழ்.மாநகர சபையில் உள்ள வெற்றிடங்கள் அடுத்த மாத முதற்பகுதியில் பூர்த்தியாக்கப்படும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.
நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் குறித்த விவரங்களைத் தெரிவித்த ஆணையாளர் சபையில் 142 வெற்றிடங்கள் உள்ளன என்றும் அவற்றில் வேலைத் தொழிலாளர்களுக்கு 72 வெற்றிடங்கள் உள்ளன என்றும் அடுத்த மாத முற்பகுதியில் அந்த வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (ஒ-7-14)

# நான்கு கடைகளை அகற்ற யாழ். மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியும் கஸ்தூரியார் வீதியும் இணையும் சந்திப் பகுதியில் மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அமைந்திருக்கும் வர்த்தக நிலையக் கட்டடங்களை அகற்றுவது என்று யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நேற்று வியாழக்கிழமை யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. நகரத்தை அழகு படுத்துதல் தொடர்பான தீர்மானம் ஒன்றில் நகர்ப் பகுதியில் அமைந்திருக்கும் கால்வாய்ப் பகுதிகளையும் அவற்றை அண்டியிருக்கும் நிலப் பரப்புகளையும் புனரமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக காட்டப்பட்டது. அத்துடன் நகருக்குள் நிலவும் போக்குவரத்து நெரிசலையும் தளர்த்தக் கூடியதாக மாற்றுப்பாதைகளை அமைத்துக்கொள்ளக் கூடிய தாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.
ஏற்கனவே குறித்த கடைகளை விட்டு வர்த்தகர்களை வெளியேறுமாறு ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டதாகவும் எனினும் வர்த்தகர்கள் அவ்வாறு செயற்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் மாநகர சபை குறித்த கடைகளை அகற்றுவதற்கு முடிவு செய்துள்ளது. இதற்காக குறித்த கடைகளை நடத்துபவர்களுக்கு இறுதி அறிவிப்பு ஒன்று வழங்குவதற்கும் மாநகர சபை முடிவு செய்துள்ளது. அறிவித்தல் ஒட்டப்பட்டு 14 நாள்களுக்குள் கடைகளை விட்டு வர்த்தகர்கள் வெளியேறி வெற்றுடமைகளை ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தல்களை இவர்கள் மீறும் பட்சத்தில் மாநகர சபை கட்டளைகள் சட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி கடைகளை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆளுநருக்கும் ஆணையாளருக்கும் அதிகாரம் கோரும் பிரேரணையும் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.
எனினும் எதிர் அணி உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தனர். பின்னர் வாக்கெடுப்பின் போது எதிராக 10 வாக்குகளும் ஆதரவாக 11 வாக்குகளும் பெறப்பட்ட நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஐ-7-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சொர்ணம்மா



பலாலியைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சொர்ணம்மா நேற்று (23.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்ற ஆறுமுகம் இராமலிங்கத்தின் மனைவியும் சிவப்பிரகாசம் (சவாரிப்பிரியர்) திருநாவுக்கரசு, இராஜேந்திரன், தியாகராசா (நெடுந்தூர ஓட்ட வீரர்கள்), சரோசா, நாகராணி ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயலக்ஷ்மி, நாகேஸ்வரி, மரீனா, ஸ்ரீதேவி, சுப்பிரமணியம், குலசிங்கம் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை கேணிக்கட்டு வீதியிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கேணிக்கட்டு வீதி, பண்டத்தரிப்பு.
077 1862710, 077 3028062

## மரண அறிவித்தல்

### திருமதி இராசா இராசம்மா



யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் பூந்தோட்டத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட இராசா இராசம்மா 23.01.2014 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் இராசாவின் அன்பு மனைவியும், புஸ்பவதி, வாமதேவன் (உரிமையாளர்-இராசா டீசல் என்ஜினியஸ்), தர்மராணி ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகநாதன் (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), நல்லநாதன் (ஓய்வுபெற்ற விமான நிலைய உத்தியோகத்தர்), குகானந்தராணி (ஓய்வுபெற்ற தாதி-லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஸ்ரீதரன் (லண்டன்), ஸ்ரீவரதன் (லண்டன்), ஸ்ரீதரணி, ஸ்ரீதர்சனி (ஆசிரியை- வ/பெரியகோமரசங்குளம்), காலஞ்சென்ற ஸ்ரீ முரளிதரன் மற்றும் சுஷந் (லண்டன்), சுஷானா (லண்டன்) ஆகியோ ரின் பேர்த்தியும், றுக்ஷியா, ஹரி, நிருஷன், வேணிஷா, சுகேஷ், சுவர்ஷா, ஸ்ரீஷா, சவின், அன்ஷன், கவிஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.01.2014) வியாழக் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது பூந்தோட்ட இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூந்தோட்டம், வவுனியா. (41918) (10) குடும்பத்தினர்.

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.24

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு வேலைகளுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை ஆசைப்பிள்ளை சந்தி, மிருசுவில் அம்மன் கோயிலடி, படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் ஆகிய இடங்களிலும்-

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை பண்டத்தரிப்பு, இளவாலை, சுழிபுரம், வடலியடைப்பு, மாதகல் முழுவதும் காங்கேசன் துறைப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்-

8.30 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணி வரை வைமன் வீதி, கோயில் வீதி, நல்லூர், றக்கா வீதி, கச்சேரியடி, சுண்டுக்குளி, ஆஸ்பத்திரி வீதி, கொழும்புத்துறை,மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், பாஷையூர், ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும்-

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிரை ஆஸ்பத்திரி வீதி, கே.கே. எஸ். வீதி, சத்திர சந்தி, பலாலி வீதி,மத்திய பஸ் நிலையம், யாழ். பொலிஸ் நிலைய பகுதி ஆகிய இடங்களிலும்-

8.30 மணியிலிருந்து பிற்பகல் 12.30 மணிவரை தபால் பெட்டிச் சந்தி, தலங்காவில், பலாலி வீதி, திருநெல்வேலி, பல்கலைக்கழகச் சந்தி, கந்தர்மடம், ஆரியகுளம்,முலவைச் சந்தி பிரதான வீதி, குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

J.C.B.
பைக்கோ வாடகைக்கு விடப்படும்
★ போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
★ குறைந்த கட்டணம்
தொடர்பு :077 7712482, 077 9847285
கதிரேசம்பிள்ளை கமலாதேவி எரிபொருள் நிரப்பு நிலையம்
K.K.S. றோட் சுன்னாகம்

## கணிதப்பிரிவு மாணவர்களுக்கு

கொழும்பு மாவட்ட முன்னணி ஆசிரியரான **கே.விக்னேஸ்வரன்(கொ/விவேகானந்தா கல்லூரி)** தரம் 12,13 மாணவர்களின் இம் மாத (ஜனவரி) அடைவு மட்டத்தை சோதனை செய்யும் நோக்கில் தயாரித்த தரமான வினாத் தொகுப்பும், **கொ/ றோயல் கல்லூரியின் மூத்த ஆசிரியர் எஸ். சுந்தரலிங்கம்** தரம் 10,11 மாணவர்களின் இம் மாத (ஜனவரி) அடைவு மட்டத்தை சோதனை செய்யும் நோக்கில் தயாரித்த தரமான வினாத் தொகுப்பும் மாத ஒளி அரசியில் வெளிவந்துள்ளது. உங்களின் தரத்தை பரீட்சித்துப் பார்க்க விரும்பும் மாணவர்கள் புத்தகசாலைகளிலும், பத்திரகைமுகவர்களூடாகவும் ஒளி அரசியின் ஜனவரி மாத சஞ்சிகையை பெற்று பயன் பெறலாம்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி. ஜெயதேவி கிருஸ்ணசாமி

(இளைப்பாறிய அதிபர் யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்)

அன்புக்கு அன்னையாய் ஆசிரியருக்கு அதிபராய் அகிலத்தில் சிந்மயபாரதியை சிறக்கச் செய்த செம்மலே உம் இழப்பை எண்ணி உதிரமே உறையுதம்மா உம் அன்பு நெஞ்சங்கள் உருகியே நிற்குதம்மா கண்ணாக எமைப்போற்றி காசினியில் சிறக்கச் செய்தீர் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு, சேவை, நேர்வழி இவை தவிர வேறு எதை எமக்குத் தந்தீர் ஜெயதேவி கிருஸ்ணசாமி எனும் உமது நாமம் ஜெகமெங்கும் ஒலிக்கச் செய்தீர் சிந்மய பாரதியை சீர் பெறச் செய்த எம் அன்னையே சிந்மயபாரதி உள்ளவரை உம் நாமம் நிலைத்திருக்கும் சத்திய சாயியின் வழி நின்று சத்தியத்தைப் பேணி நின்றீர் சத்தியமாய் உம் ஆன்மா சாந்தியுடன் அவர் அடியிருக்கும் நித்திலத்தில் உமது புகழ் நிச்சயமாய் நிலைத்திருக்கும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திருமதி. ஜெயதேவி கிருஸ்ணசாமி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்.
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடி தவழ
18.11.1955

இறைவனடி சேர
25.12.2013

### அமரர் ஆலாலசுந்தரம் விவேகானந்தன்



எண்ணங்கள் ஆயிரம் நெஞ்சினிலே சுமந்து
எங்கள் வாழ்வில் ஏற்றம் காணவைத்த
அண்ணாவே (ஆனந்துவே)
ஏக்கங்களை விதைத்து விட்டு
நீங்கள் மட்டும் எங்கு சென்றீர்கள்
ஒளிர்கின்ற விளக்காய்
நீர் உறவாடி நிற்கையில்
அணைகின்ற கற்பூரமென
அறியாது போனோமே
கண்ணுக்குள் உம் நினைவு
விம்பமாய் நீளுதையா
நேற்று வரை எம் முன்னே
நேசமாய் இருந்தவரே
காற்றிலும் கூட வேர்த்துப்போய் கனத்து
நிற்குதையா எம் உள்ளம்

என்றும் உம் நினைவுடன்
ஆலாலசுந்தரம் குடும்பத்தினர்

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
18. 02.1944

ஆண்டவன் அடியில்
18. 01.2009

### அமரர் தில்லையம்பலம் செல்வராசா

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், தபாற்கந்தோர் சுன்னாகம்)

எங்கள் அப்பா எங்கள் அப்பா ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஆறவில்லை எம் துயர் ஆலமரமாய் இருந்து அறிவுரைகள் கூறி
எம்மை ஏணியாக உயர்த்தி வைத்தவர்கள் அப்பாவே - கனவுகள்
கலைந்து போகலாம் ஆனால் உங்கள் நினைவுகள் என்றும் அழியாது!
ஆயிரம் கோடி உறவுகள் - இவ்வுலகில் இருந்தாலும் எங்கள் அப்பாவிற்கு ஈடாகாது!

நிலோ தொலைத் தொடர்பு நிலையம்
ஏழாலை தெற்குசுன்னாகம்
0212222166

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,மருமகள்

வெளி வந்து விட்டது
யாழ். பாரதி வெளியீடு
தரம் 1 முதல் 5வரை
*நூற்றுக்கணக்கான வர்ணப்படங்கள்
*பொக்கட் கலண்டர்
*தமிழ், சுற்றாடல், கணிதம், ஆங்கிலம், வாய்மொழி ஆங்கிலம், சிங்களம், சமயம்.நுண்ணறிவு, பொது அறிவு
அன்னை புத்தகசாலை யாழ். நகர்

## தவறிவிட்டது


சி. கோகிலகுமார் ஆகிய எனது NIC . இன்சூரன்ஸ், லைசன்ஸ் ஆகிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் .T.P 0777714558

Europeion Security Service
கட்டார்
* Security Guard - 30 - 1200 (GR)
* Light Vehicle Driver - 10 - 1200 (GR)
27.01.2014 ஆம் திகதி நேர்முகத்தேர்வு
கொழும்பில் நடைபெறும்
T.P : 077 3957291

குவைத், House Driver - 90KD - 10 பேர்
சவுதி அரேபியா -
இலவச வேலை வாய்ப்பு
Shuttering Carpenter - 10 பேர் 1300 SR
தொடர்புகளுக்கு : 077 3957291

## மரண அறிவித்தல்

### செல்லையா கமலநாதன் (கமல்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கமலநாதன் கடந்த (20.01.2014) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கலாநிதியின் (கலா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா-செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங்கம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கீர்த்தனாவின் (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புத் தந்தையும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, சண்முகலிங்கம், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் சந்திராதேவி, இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயரூபி, சிவலோகநாதன், இன்பராணி, திரவியராணி, சந்திரலீலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை நணபகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 223 0626

ஞான வைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

## மரண அறிவித்தல்

### நன்னித்தம்பி நடராஜா (ஆயுள் வேத வைத்தியர் இணுவில்)



இணுவில் சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் தற்போது சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி நடராஜா (23.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி - சிவகாமிஅம்மா (சாத்திரம்மா) தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற விசுவலிங்கம்- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி (பேபி) யின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசபிள்ளை, அருளம்பலம், பொன்னம்பலம், பரமநாதன், பாலசுப்பிரமணியம் மற்றும் சண்முகநாதன், குமாரசாமி, அம்பிகாவதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் நித்தியானந்தன் (பிரதம தபாலகம் யாழ்ப்பாணம்), ஜெகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பத்மராணி வித்தகம் (கனடா) ஆகியோரின் மாமனாரும் தங்கரத்தினம் காலஞ்சென்ற சிவ சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஜதுர்ஷன், துஷாருதன், சிவானுஷன், சங்கீதா (கனடா), ஜனார்த்தனன் (கனடா), ரவித்தனன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் ஸ்ரீவித்தியாவின் (கிருஷ்ணா) பெரியதந்தையும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்தன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி. 021 3006609,

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் நாகேஸ்வரி



4 ஆம் கட்டை கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமாகிய இராசரத் தினம் நாகேஸ்வரி நேற்று (23.01.2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வீரவாகு - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலம் சென்ற வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் இராசரத்தினத்தின் (இளைப்பாறிய தலைமை புகையிரத பாதுகாவலர்) அன்பு மனைவியும் லோகேஸ்வரன் (கோப்பாய்), லோகேந்திரன் (USA) ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜேஸ்வரி (கோப்பாய்), ஜெயந்தி (USA) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தனலட்சுமி, தனேஸ்வரி, மகாராசா காலஞ்சென்ற கனகராசா மற்றும் துரைராசா சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயூரன், வாணி, வேணி (USA), வதணி (USA) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 25.01.2014 சனிக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ம் கட்டை, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
இ.லோகேஸ்வரன் (மகன்)
T.P No:-0750479616

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24.01.2014





# பிரதேச அபிவிருத்திக்காக நடைமுறை விதிகள் மாற்றம்

## வலி.தென்மேற்கு பிரதேச சபை அதிரடி

வலி.தென்மேற்கு, ஜன.24
பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு வருமானத்தை அதிகரிக்க முன்வந்துள்ள வலி.தென்மேற்கு பிரதேச சபை இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த விதிமுறைகளை மாற்றியமைத்துள்ளது.

பொதுச் சந்தைகளிலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் கோழி இறைச்சி விற்பனை செய்வதற்கு இருந்து வந்த தடையை 1000 மீற்றராக தற்போது விஸ்தரித்துள்ளனர். இதனால் கோழிப் பண்ணைகளில் வைத்து கோழி இறைச்சியை விற்பனை செய்வோர் பெருந்தொகையான பணத்தை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வருமானத்தைக் கருத்தில் கொண்டு குடிசைக் கைத்தொழில் போல் கோழிப் பண்ணைகளை நடத்திவரும் பலர் வரி செலுத்தாமல் பண்ணைகளில் வைத்துக் கோழியிறைச்சியை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொதுச் சந்தைகளிலுள்ள கோழி இறைச்சிக் கடைகளில் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து சந்தைகளில் கோழி இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு எடுத்தவர்கள் இந்த நிலை குறித்துப் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பிரதேச சபை உறுப்பினர்கள் பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் கோழிப் பண்ணைகளில் வைத்து இறைச்சி விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்தும் நோக்குடனும் இதுவரை காலமும் 500 மீற்றர் தூரத்துக்குள் கோழியிறைச்சி விற்பனை செய்வதற்கான தடையை 1000 மீற்றராக அதிகரித்துள்ளனர். இதனால் 1000 மீற்றருக்குள் கோழிப் பண்ணைகளில் வைத்து இறைச்சி விற்பனையில் ஈடுபடுவோர் பிரதேச சபையிடம் பணம் செலுத்தி அனுமதி பெற வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர்.

இதேவேளை இந்தப் பிரதேசத்துக்குள் வீதிகளில் சைக்கிள்களில் அலைந்து திரிந்து மீன் விற்பனை செய்யும் வியாபாரிகளிடமும் வரி அறவீடு செய்ய முன்வந்துள்ள பிரதேச சபை அவர்களிடமிருந்து 3 மாதங்களுக்கு 600 ரூபாவை அறவிடவுள்ளது.

இதற்கான தீர்மானங்கள் பதில் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. (வ-115)

> "-"
> குடிசைக் கைத்தொழில் போல் கோழிப் பண்ணைகளை நடத்தி வரும் பலர் வரி செலுத்தாமல் பண்ணைகளில் வைத்துக் கோழியிறைச்சியை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பொதுச் சந்தைகளிலுள்ள கோழி இறைச்சிக் கடைகளில் வியாபாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது.

## நவீனமயமானது மாநகரசபை திட்டமிடல் பிரிவுக் கட்டடம்

யாழ்.மாநகரசபைக்கு ஆசிய மன்றத்தால் வழங்கப்பட்ட சேவைகளைப் பாராட்டும் முகமாக அவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நவீன வசதிகளுடன் கூடிய திட்டமிடல் பிரிவு கட்டடத் திறப்பும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.மாநகர சபையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய திட்டமிடல் பகுதியின் கட்டடம் ஆசிய மன்றத்தின் தவிசாளர் மைக்கல். எச். ஆர்ம கோஸ்ட் மற்றும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரால் நாடாவெட்டி திறந்து வைக்கப்பட்டதுடன் ஆசிய மன்ற பிரதிநிதிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிய மன்றத்தின் தவிசாளர் மைக்கல். எச்.ஆர்மகோஸ்ட், ஆசிய மன்றத்தின் தலைவர் டாக்டர் டேவிட் டி ஆர்னல்ட் உட்பட மன்றத்தின் உயர் மட்டக்குழுவினர், இலங்கை ஆசிய மன்ற பிரதிநிதிகள், மாநகர ஆணையாளர், மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-10-20)

## சாவகச்சேரி நகர சபையால் இருநேர சுத்திகரிப்புப் பணி

### விரைவில் ஆரம்பமாகும்

தென்மராட்சி ஜன.24
சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் இரு நேர சுத்திகரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

காலையில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட முன்னர் சுத்திகரிப்புப் பணிகள் இடம் பெறுவதால் அதன் பின்னர் வர்த்தக நிலையங்களால் வெளியே கொட்டப்படும் கழிவுகள் நகர்ப் பகுதியில் அதிகமாகக் காணப்படுவதால் மாலை வேளையிலும் நகர்ப் பகுதியில் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ள சுகாதாரக் குழுவினர் தீர்மானித்துள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்ஸன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நகரப் பகுதியில் மேலும் சில குப்பைத் தொட்டிகள் வைக்கப்படவுள்ளதால் வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுகளை கண்ட இடங்களில் வீசாமல் வீசாமல் தொட்டிகளில் போடு மாறும் கோரியுள்ளதாகத் தெரிவித்தார். (வ-9)

## ஒரு நாளில் 3 இடங்களில் திருடர் கைவரிசை



சங்கானை, ஜன.24
சங்கானை அராலி வீதியில் ஸ்ரீ சத்திய சாயிபாபா பஜனை மண்டபத்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்னர் திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மண்டபத்தின் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கு வைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கிப் பெட்டிகள் இரண்டைத் திருடியுள்ளனர்.

அதேவேளை குறித்த மண்டபத்துக்கு அண்மையில் உள்ள வைரவ கோயில் உண்டியல் உடைக்கப்பட்டு ஒரு தொகைப் பணம் களவா டப்பட்டுள்ளது.

அன்றிரவு இதே பகுதியில் உள்ள மாவடி ஞானவைரவர் ஆலய உண்டியலும் உடைக்கப்பட்டு ஒரு தொகைப் பணம் களவாடப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் சங்கானையில் அதிகமாக இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (வ-29)

## மணல் ஏற்றுவதை நிறுத்தக் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.24
தென்மராட்சி தெற்கு. தனங்களப்புப் பகுதிக் காணி ஒன்றிலிருந்து மணல் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல மேற்கொண்ட முயற்சியை தடுத்து நிறுத்துமாறு அந்தப் பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலருக்கு மனு கொடுத்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குறித்த பகுதியில் உள்ள அழிக்கப்பட்ட தென்னந் தோட்டக் காணி ஒன்றில் இருந்து 210 கியூப் மணலை தனிநபர் ஒருவர் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் அனுமதி பெற்று யாழ்ப்பாணத்துக்கு வாகனங்களில் ஏற்றிச் செல்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

210 கியூப் மணலை ஏற்றிவிட்டு அந்தப் பகுதியை வயலாக மாற்றுவதாக கூறியுள்ள போதிலும் குறித்த இடம் கடற்கரையிலிருந்து 500 மீற்றருக்குள் அடங்குவதால் மணல் ஏற்றப்படுவதால் பெரு வெள்ளம் ஏற்படும் வேளைகளில் கடல் நீர் கிராமத்துக்குள் வரக் கூடிய வாய்ப்பு அதிகமாக உள்ளது.

பிரிவில் உள்ள மக்கள் வீடு அமைப்பதற்குகூட வேறு இடங்களில் இருந்து மணல் பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தனங்களப்புப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பெருமளவு மணல் ஏற்றப்படுவது கிராமத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அந்தக் காணியிலிருந்து மணலை வாகனங்களில் ஏற்றி வெளியே கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ-9)

## அட்டவணைப்படுத்தாத பதவிகளுக்கு பிரதேச சபைகளே விண்ணப்பம் கோரலாம்

### போதிய விண்ணப்பம் கிடைக்காவிட்டால்

யாழ்ப்பாணம், ஜன. 24
அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காத விடத்து, அந்தந்த பிரதேச சபைகளே கல்வித் தகைமையைக் குறைத்து விண்ணப்பங்களைக் கோர முடியும் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் திணைக்களங்களில், வெற்றிடங்களுக்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது, கல்வித் தகைமை ஜி.சீ.ஈ. சாதாரணதரம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் ஏற்கெனவே அங்கு ஒப்பந்த அடிப்படையில் மிக நீண்டகாலம் கடமையாற்றிய ஊழியர்கள் வேலையிழக்கும் நிலைமை ஏற்பட்டது. இதனால் பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களிலும் பாதிக்கப்பட்ட சாரதிகள், சுகாதாரத் தொழிலாளிகள், வீதித் தொழிலாளிகள் போராட்டம் நடத்தியிருந்தனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாணசபையின் கடந்த அமர்வில் அவசரப் பிரேரணையும் கொண்டு வரப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையில் குறித்த ஊழியர்களது பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக கல்வித் தகைமையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கு போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்படாத விடத்து, அந்தந்த உள்ளூராட்சி சபைகளே கல்வித் தகைமையைக் குறைத்து விண்ணப்பங்களைக் கோர முடியும் என்று செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-5-9)

## இலவச மருத்துவ முகாம் ஞாயிறு

யாழ்ப்பாணம், ஜன.24
புங்குடுதீவு சர்வோதயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

தீவக லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் அன்றைய தினம் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ள மருத்துவ முகாமில் நீரிழிவு, இரத்தப் பரிசோதனைகள் உட்பட பொது மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெறும். (வ-7)

## திருடிய உபகரணங்களுடன் வசமாக மாட்டிய நபர்

கொழும்புத்துறை .ஜன.24
கொழும்புத்துறை கணக்கர் சந்தியிலுள்ள மரவேலைத் தொழிலகத்திலிருந்து திருடப்பட்ட மின்சார உபகரணங்களுடன் திருட்டுப் பேர்வழி ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்து மின்மோட்டர், துளை கருவி, அரிவு கருவி என்பன யாழ்.பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

நேற்றுமுன்தினம் அதிகாலை வேளையில் கொழும்புத்துறை குறுக்கு வீதி வழியாக கைகளில் சில பொருள்களுடன் சந்தேகத்துக்கு இடமான சிலர் வருவதை கடற்றொழிலுக்குச் சென்றுகொண்டிருந்த மீனவர்கள் அவதானித்தனர். அவர்களிடமிருந்தும் சிலர் தப்பி ஓட ஒருவர் மட்டும் மாட்டிக் கொண்டார்.

வசந்தபுரத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் அந்த நபரிடம் மின்மோட்டர்மற்றும்உபகரணங்கள் இருப்பது தெரியவந்தது.

குறிப்பிட்ட நபர் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப் பட்டபோது கணக்கர் சந்தியிலுள்ள மரவேலைத் தொழிலகத்தில் இருந்து குறிப்பிட்ட பொருள்கள் திருடப்பட்டதாகத் தெரியவந்தது. திருடப்பட்ட இடத்தில் வெற்று பியர் ரின்கள் பல காணப்பட்டன.

அதேவேளை சம்பவம் நடந்த இரவு இலந்தைக்குளம் வீதியிலுள்ள பலசரக்குக் கடையொன்றும் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலங்களில் பாண்டியன்தாழ்வு, கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் 25 இற்கும் மேற்பட்ட மின்மோட்டர்கள் திருட்டுப் போயுள்ளதோடு பல வர்த் தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான திருட்டுக்களை முற்றாக நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சியை தூக்கி எறியவேண்டும்

## வைகோ ஆவேசம்

சென்னை, ஜன.24

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தூக்கி எறியப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.



எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் கூட்டணி குறித்து பா.ஜ.கவுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

" நேதாஜியின் பிறந்தநாளான இந்தநாள் ஒரு பொன்னான நாள். இந்த நேரத்தில் பா.ஜ. மாநில தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளோம். தேர்தல் தொகுதி உடன்பாடு குறித்து மாசிலாமணி, கணேசமூர்த்தி உட்பட ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பேச்சு நடத்துவார்கள். காங்கிரஸ் கட்சியை நடைபெறவிருக்கும் தேர்தலில் தூக்கி எறிய வேண்டும் என்பதே எமது இலக்கு" என்று தெரிவித்துள்ளார்.

வைகோவுடனான சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த பா.ஜ.கவின் முக்கிய தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்,

"பா.ஜ.க . ம.தி.மு.க. உறவு கூட்டணியில் இல்லாமல் இருந்த காலத்திலும் தொடர்கிறது. தற்போது மீண்டும் கூட்டணி அமைக்க பேச்சை ஆரம்பித்துள்ளோம். பா.ஜ. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சென்னைக்கு வரும்போது ம.தி.மு.க. அமைத்துள்ள குழுவிடம் பேச்சு நடத்தி கூட்டணி குறித்து உறுதி செய்யப்படும். அந்தக் கூட்டணி மகத்தான வெற்றி பெறும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஆம் ஆத்மியுடன் சமரசம்; ராகுல் காந்தி அதிருப்தி



புதுடில்லி, ஜன.24

புதுடில்லியில் போராட்டம் நடத்திய ஆம் ஆத்மி கட்சியுடன் சமரசப் போக்கைக் கடைப்பிடித்தமை தொடர்பில் உள்துறை அமைச்சர் ஷிண்டேயிடம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி. புதுடில்லியில் தனது இல்லத்தில் கட்சியின் மூத்த தலைவர்களுடன் மேற்கொண்ட சந்திப்பின்போதே அவர் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்.

புதுடில்லிப் பொலிஸாருடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து அந்த மாநில முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் வீதியில் இறங்கி போராட்டம் மேற்கொண்டார். அவரின் போராட்டத்தால் புதுடில்லி முடங்கும் நிலை ஏற்பட்டது. அதையடுத்து மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டே சமரச நடவடிக்கைகளை மேற்கொண்டார். கெஜ்ரிவாலின் குற்றச்சாட்டுக்கு இலக்கான பொலிஸ் அதிகாரிகள் விடுமுறையில் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். அதன்பின்னர் கெஜ்ரிவால் தனது போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

இந்த விவகாரத்தில் ஷிண்டே மேற்கொண்ட சமரச நடவடிக்கைகள் தொடர்பாகவே காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி கடும் அதிருப்தி அடைந்துள்ளார். இந்தப் பிரச்சினையில் கெஜ்ரிவாலுடன் சமரசம் செய்வது குறித்து பிரதமர், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி என தலைவர்கள் யாருடனும் ஷிண்டே ஆலோசிக்க வில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் புதுடில்லியில் தனது வீட்டில் நடந்த கட்சியின் மூத்த தலைவர்களுடனான ஆலோசனை கூட்டத்தில், கெஜ்ரிவால் விவகாரத்தில் மத்திய அரசு சமரசம் செய்து கொண்டிருக்கக்கூடாது என ராகுல் காந்தி கூறியுள்ளார் என்றும் காங்கிரஸ் வட்டாரங்கள் கூறுகின்றன. (ற)

## மதிகெட்டவர் கெஜ்ரிவால் -ஷிண்டே

புதுடில்லி, ஜன.24

புதுடில்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால், மதி கெட்டவர் போல் நடந்து கொள்கின்றார் என்று மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"1970 ஆம் ஆண்டு நான் பொலிஸ் துறையில் பணியாற்றினேன். கோர்வாடிபொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த போது சிவசேனாவின் வன்முறை காரணமாக எனக்கு விடுமுறை மறுக்கப்பட்டது. அதே போன்று தற்போது மதிகெட்டவர் போன்று செயற்படும் புதுடில்லி முதலமைச்சரின் போராட்டம் காரணமாக பொலிஸாரின் விடுமுறையை நான் ரத்துச் செய்ய நேர்ந்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

ஊழலில் ஊறித் திளைப்பவர் என்றும், திறமையற்றவர் எனவும் ஷிண்டேவை, அரவிந்த் கெஜ்ரிவால் சாடியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அவர் இவ்வாறு விமர்சித்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற)

## ராகுலுக்கு எதிராக கறுப்புகொடி போராட்டம்

புதுடில்லி, ஜன.24

உத்தரப் பிரதேசத்தில் தாம் போட்டியிட்ட அமேதி தொகுதியில் மக்களைச் சந்திக்கச் சென்ற ராகுல் காந்திக்குக் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் ஆம் ஆத்மி கட்சியினர்.

அமேதி மக்களவைத் தொகுதிக்குச் சென்ற ராகுல்காந்தி, ஆங்காங்கே மக்களை சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார். அப்போது சாலையோரம் குவிந்திருந்த ஆம் ஆத்மி தொண்டர்கள், கைகளில் கறுப்புக்கொடி ஏந்தியவாறு ராகுல் காந்திக்கு எதிராக முழக்கமிட்டனர். ராகுல் வெற்றிபெற்ற அமேதி தொகுதியில் வீதி வசதி, மின்சார வசதி என எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லை என கூறிய அவர்கள், கல்வியிலும் பின்தங்கியிருப்பதாக கோஷம் எழுப்பினர். அமேதி மக்களை வாக்கு வங்கி அரசியலுக்காக காங்கிரஸ் கட்சி பயன்படுத்துவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம்சாட்டினர்.

இதுகுறித்து பின்னர் கருத்துத் தெரிவித்த ராகுல்காந்தி, "அமேதி தொகுதி மக்களை குடும்ப உறுப்பினர்களாகவே பார்க்கின்றேன். வளர்ச்சிப் பணிகளில் தொய்வு ஏற்படவில்லை. அனைத்து பகுதியிலும் அடிப்படை வசதிகளை மேற் கொள்ள முயற்சி செய்துவருகின் றோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)



புதுடில்லியில் தற்போது கடும் பனிப் பொழிவுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. கடும் குளிரின் மத்தியிலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்திய குடியரசுத் தினத்துக்கான முன்னேற்பாடுகள் நடத்து வருகின்றன. கடும் அணிவகுப்பு ஒத்திகையின் பின்னர் ஓய்வுவெடுக்கும் இந்திய இராணுவத்தின் ஒரு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள்.

## 'கூகுளில்' அதிகம் தேடப்பட்ட தமிழகத் தலைவர் ஜெயலலிதா

சென்னை, ஜன.24

உலகம் முழுவதிலும் இருந்து 'கூகுள்' வழியாகத் தேடப்பட்ட தென்னிந்திய அரசியல் தலைவர்களில் ஜெயலலிதாவுக்கு முதல் இடம் கிடைத்துள்ளது.

இணையத்தளங்களுக்குள் செல்வதற்கான சாவிகளாக 'கூகுள்', 'யாஹூ' உள்ளிட்ட தேடு இயந்திரங்கள் (சேர்ச் என்ஜின்) உதவுகின்றன. அவற்றில் 'கூகுள்' தேடு இயந்திரத்தில் ஏராளமான வசதிகள் இருப்பதால், உலகம் முழுவதிலும் உள்ள இணையதள பயன்பாட்டாளர்கள் கூகுள் வாயிலாகவே இதர இணையத் தளங்களுக்குள் நுழைகின்றனர்.

இணையத்தள பயன்பாட்டாளர்களில் யார், யார், எந்தெந்த இணையத்தின் பெயரை அதிகமாக தேடி பயனடைந்துள்ளனர் என்ற நுழைவுக் (லாக்-இன்) கணக்குகளை 'பெட்டா' என்ற நிறுவனம் தினந்தோறும் பதிவு செய்து வருகிறது.

அந்தப் பதிவுகளின் அண்மைய தொகுப்புகளின்படி உலகம் முழுவதிலும் இருந்து அதிகமாக தேடப்பட்ட இந்திய அரசியல் தலைவர்களின் பட்டியலில் குஜராத் முதலமைச்சரும் பா.ஜ.க. வின் பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடியின் பெயர் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

அவருக்கு அடுத்த இரண்டாவது இடத்தை காங்கிரஸ் துணை தலைவர் ராகுல் காந்தியும், மூன்றாவது இடத்தை காங்கிரஸ் கட்சி மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவரான சோனியா காந்தியும், நான்காவது இடத்தை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் பெற்றுள்ளனர்.



இந்த வரிசையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக முதல் அமைச்சருமான ஜெயலலிதா, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அடுத்த ஐந்தாவது இடத்தில் உள்ளார். அதே வேளை அதிகம் தேடப்பட்ட தமிழகத் தலைவர் என்ற வகையில் அவர் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எங்குமே போராட்டம்**

உக்ரைன் அரசுடனான பேச்சுக்களில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், போராட்டக்காரர்கள் தாக்குதலில் ஈடுபடுவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் வைடாலி கிலிட்ஸ்கோ எச்சரித்துள்ளார். முன் கூட்டியே தேர்தல் நடத்துவதன் மூலம் போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வர முடியும் எனவும் கிலிட்ஸ்கோ தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து உக்ரைனில் இரண்டு மாதங்களாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் கடந்த சில நாள்களாகப் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

# மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இனப்படுகொலை நிகழக்கூடும்

## *எச்சரிக்கை விடுக்கின்றது ஐ.நா.சபை*

நியூயோர்க், ஜன.24
மத்திய ஆபிரிக்கக் குடியரசில் இடம்பெற்றுவரும் வன்முறைகளால் அங்கு இனப்படுகொலை நிகழ்வதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் இனப்படுகொலை தடுப்பு ஆலோசகர் ஆடமா டைங்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

"வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நாம் பார்வையிட்டோம். இரு பிரிவினர் இடையே நிலவும் வெறுப்புணர்வு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அந்த வெறுப்புணர்வை நீக்காமல் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது சாத்தியமற்றது. பல இடங்களில் கிராமங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. சட்டம், ஒழுங்கு முற்றிலும் தடைப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.




அதேவேளை, இடைக்கால ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள கேத்தரின் சம்பா பான்ஸா தாம் ஆயுத குழுக்களுடன் பேச்சு நடத்த இருப்பதாகத் தெரிவித்துள்ளார். (ற)

# இஸ்ரேல் ரொக்கெட் தாக்குதல்; பலஸ்தீனர்கள் இருவர் சாவு

காஸா, ஜன.24
காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் பலஸ்தீனத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர். ஜிஹாத் அமைப்பை சேர்ந்த அஹ்மத் ஜானின் என்பவரும் அவரது உறவினர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று ஹமாஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவர்கள் இருவரும் காரில் இருந்த போது ரொக்கெட் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, அஹ்மத் ஜானின், இஸ்ரேல் முன்னாள் பிரதமர் ஏரியல் ஷேரோனின் இறுதிச் சடங்கின் போது ரொக்கெட் தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# மீண்டும் திறக்கப்பட்டது அலப்போ விமான நிலையம்



அலப்போ, ஜன.24
சிரியாவில் அலெப்போ சர்வதேச விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அதை அந்தநாட்டு அரசு பெரும் வெற்றி நிகழ்வாகக் கொண்டாடியுள்ளது.

கிட்டத்தட்ட ஓராண்டாக மூடப்பட்டிருந்த இந்த விமான நிலையம் தற்போது இராணுவத்தின் முயற்சியால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியைச் சுற்றிலும் சிரிய இராணுவத்தினர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியுள்ளனர். விமான நிலையம் திறக்கப்பட்டதை அடுத்து செய்தியாளர்கள் தலைநகர் டமாஸ்கஸிலிருந்து அலெப்போவுக்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்டனர். சோதனை ஓட்டமாக விமானங்களின் புறப்பாடும், தரை இறக்கமும் செய்து பார்க்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் நிகழ்த்தப்பட்ட இந்த சோதனை முயற்சியின்போது எவ்வித அசம்பாவிதங்களும் நிகழவில்லை என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2012ஆம் ஆண்டு அலெப்போ நகரைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர். அதன் பின்னர் அலப்போ நகர் மீது சிரிய இராணுவத்தினர் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். இந்தநிலையில் தற்போது அந்த நகரம் சிரிய இராணுவத்தின் வசம் வந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

# பார்வையாளரை அசத்தும் சீனக் காகிதச் சிற்பங்கள்

பீஜிங், ஜன.24
சீன கலைஞர் ஒருவரின் காகித சிற்பங்கள் நியூயோர்க் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. ஆயிரக்கணக்கான வெள்ளை தாள்களை கொண்டு வடிவமைக்கப்பட்ட அவரது சிலைகள் பார்க்கும்போது திடமாக தெரியும். ஆனால் அவற்றை இழுக்கும்போது வேறுவேறு வடிவங்கள் பெறுகின்றன. லீ ஹாங்போ என்ற 38 வயதுடைய சீனக் கலைஞர் இந்த மார்பளவு சிற்பங்களை வடிவமைத்துள்ளார். பார்ப்பதற்கு பிளாஸ்டர் (PLASTER) சிலைகளாக காட்சியளிக்கும் இந்த சிலைகள் இழுக்கப்பட்ட நிலையில் எலாஸ்டிக் (ELASTIC) போல நீள்வது பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.



சீனாவின் காகித பொம்மைகளிலிருந்து தனக்கு இந்த எண்ணம் உதித்தது என்று கூறிய கலைஞர் லீ, 500 காகிதங்கள் கட்டுக்களாக அடுக்கப்பட்டது என்று தெரிவித்தார். பசையை கொண்டு ஒட்டப்பட்ட தாள்களைப் பின்னர் சிற்பங்களாக செதுக்கினால் இதுபோன்ற வித்தியாசமான வடிவம் கிடைப்பதாக லீ கூறினார். கடந்த 9 ஆம் திகதி முதல் தனது கலையரங்கை மக்கள் பார்வைக்காகத் திறந்தார். தினமும் பலர் மிகுந்த ஆர்வத்துடன் இந்த சிற்பங்களைப் பார்வையிட்டுவருகின்றனர். (ற)

# ரஷ்ய நாட்டு உளவாளியா? மறுக்கின்றார் ஸ்நோடன்

மொஸ்கோ, ஜன.24
தன்னை ரஷ்ய உளவாளி என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளதை அமெரிக்க உளவுத் துறையின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடென் மறுத்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்பு (என்எஸ்ஏ) உளவு நிறுவனத்தில் பணியாற்றியவர் ஸ்நோடென். அமெரிக்காவில் இருந்து ரகசிய ஆவணங்கள் அடங்கிய கணினியுடன் ஹொங்கொங் தப்பி வந்த அவர், பல நாடுகளின் இணையதளங்களை ஊடுருவி பல தகவல்களை அமெரிக்கா திருடியமை தொடர்பான ஆவணங்களைப் பகிரங்கப்படுத்தினார்.

அதைத்தொடர்ந்து அவரை கைது செய்ய அமெரிக்க தீவிர நடவடிக்கையில் இறங்கியதால், ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார். இந்தநிலையில் ஸ்நோடென் விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் மைக் ரோகஸ், இது தற்செயலானது அல்ல என்றும், ஸ்நோடென் ரஷ்ய உளவு நிறுவனமான எஃப்.எஸ்.பி.யின் முகவராக இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். எனினும் மறுத்துள்ள ஸ்நோடென், ரஷ்யாவின் உளவாளி என்று சொல்வது அபத்தமான குற்றச்சாட்டு என்று தெரிவித்துள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Home 20+



# திருந்தாத ஜென்மங்கள் இவர்கள்

Follow | Message

Timeline | About | Photos | Friends | More ▾

'உதயனில்' வெளியாகி யிருந்த 'ஜில்லா' திரைப்படம் தொடர்பிலான விமர்சனத்துக்கு எதிராக விஜய் ரசிகர்கள் எனச் சொல்லப்படுவோரால் செவ்வாய்க்கிழமை உதயன் அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம் என்ற ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இது சமூக வலைத்தளம் மற்றும் இணைய ஊடகங்களில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. குறித்த இளைஞர்களுக்கு எதிராக மிக மோசமான கண்டனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவர்களை நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்கின்ற அளவுக்கு மிக மோசமான கருத்துக்களை பகிர்ந்துள்ளனர். அவற்றை இங்கு பிரசுரிக்க முடியாத அளவுக்கு கீழ் தரமாகவும் கண்டனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**சனத்**
*அன்று யாழில்.*
தமிழ் எங்கள் பேச்சு. தமிழ்த் தேசியம் எங்கள் மூச்சு
உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு.
*இன்று யாழில்.*
சினிமா எங்கள் பேச்சு. விஜய் தான் எங்கள் மூச்சு
உடல் விஜய்க்கு.உயிர் நமிதாவுக்கு....

**கண்ணா**
அந்த நாய்களைப் பிய்ந்த செருப்பாலை அடிக்க வேணும்.

**லோசன்**
'ஜில்லா' மனதில் பட்டதை எழுதலாம்னா, நல்லா (மட்டும் தான்) எழுதவேணும் போல கிடக்கே .. யாழில் விஜய், ரசிகர் ஆர்ப்பாட்டம்

**சஞ்சயன் சண்முகநாதன்**
நாலு பச்சை மட்டை எடுத்து வைச்சிட்டு எழுதுங்க, வந்தாங்கள் எண்டா எங்கட கணக்குலயும் நாலு சாத்து சாத்தி அனுப்புங்க..!

**தமிழ் சி.என்.என்**
யாழில் உள்ள ஊடகம் ஒன்றுக்கு முன்பாக இளைஞர்கள் சிலர் ஜில்லா படத்தின் விமர்சனம் தவறாக எழுதப்பட்டுள்ளது என்று போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். அப்போ இதுகளை என்ன செய்யலாம் நீங்களே கருத்துச் சொல்லுங்கோ?

**ஏரம்பு சோதிலிங்கம்**
உதயன் பத்திரிகையை விமர்சிப்பதற்கு முன்னர் உதயன் பத்திரிகை பட்டு வந்த துயரத்தை இவர்கள் எண்ணவில்லை. ஊரைவிட்டு எல்லோரும் ஓடியபோது அப்பியாசக் கொப்பியில் உயிரையும் பணயம் வைத்து வெளிவந்த பத்திரிகை உதயன். சினிமா ஒரு வியாபார மாயை. நாலு பேர் சேர்ந்துவிட்டால்(சேர்த்து விட்டால்) எதையும் செய்து விடலாம் என்ற நினைப்பு. ஏன் ஒருவரும் தீக்குளிக்க வில்லையா? அதையும் செய்வது தானே. செத்தவன் குடும்பத்தை சினிமா நடிகன் பார்த்துக்கொள்வானா?...

**பார்த்திபன் கோவிந்து**
இன்று திருந்தாத ஜென்மங்கள் என்றாவது ஒரு நாள் திருந்தும் அன்று அவை வருந்தும்.

**நவசோதன் நிரோஷாந்**
ஆர்ப்பாட்டம் செய்தது ஒரு விதத்தில் சரியானது.தனது மனம் புண்படும் போது அதற்கு ஏதிராகப் போராடுவது மனித இயல்பு. ஆனால் ஆர்ப்பாட்டம் செய்த காரணம் தான் முட்டாள் தனமானது. எங்கள் கலாசாரம் எங்கு போகிறது?

**பிரசாத் நிலவன்**
இவ்வாறான சிறு செயற்பாடுகள் தான் வன்முறையாக மாற்றம் பெற்று பாரிய விளைவுகளைக் கொண்டுவருபவை. இதனை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தாதுவிட்டால் யாழில் பல ஆவாக்குழுக்கள் உருவாகுவதைத் தவிர்க்க முடியாது.

**நியூமன்**
பத்திரிகையில்வெளியான ஜில்லா திரைப்படவிமர்சனத் துக்கு எதிராக விஜய்ரசிகர்கள் யாழில் ஆர்ப்பாட்டம்.....
... சமுதாயத்துக்கு ரொம்ப முக்கியம்...

**இளங்கோ**
உருப்பட்ட மாதிரித் தான்.. அடதறுதலைகளா..? ஒரு கூத்தாடிக்கு இவ்வளவு முக்கியத்துவமா?

**கிருத்திகன் யோகராஜா**
யாழ்ப்பாணத்து மாப்பிள்ளை விஜய்; உதயனே மன்னிப்புக் கேள்...!
போராடினவங்களை குறிச்சு வச்சுங்கப்பா அத்து மீறிய குடியேற்றம், கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யாமை, இராணுவத்தை வடக்கை விட்டு வெளியேற்றல் போன்ற போராட்டங்களை செய்வதற்கு நிச்சயம் இவர்கள் தேவைப் படுவார்கள்
"எதிர்கால செய்தி" விமல் வீரவம்ச-வடக்கிலே ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத் தியை மக்கள் ஏற்றுக்கொண்ட தன் வெளிப்பாடுதான் இளைஞர்களின் போராட்டம் என்று வந்தாலும் வரும்.

**ஆனந்தரட்ணம் லிங்கன்**
இதென்ன புதுக்கதையா இருக்கு. யாழ்ப்பாணத்து மாப்பிள்ளை விஜய் ஈழதமிழ் மக்கள் கொல்லப்படும்போது என்ன செய்தவராம், அகதி மக்களுக்கு காசேதும் தந்தவரே?

**நிசா நிசான்**
எப்போது கண் திறக்கும் இளைஞர் தமிழ் சமுதாயம் ....
உதயன் பத்திரிகையில் வெளியான ஜில்லா திரைப்பட திரை விமர்சனம் .....
உதயன் அலுவலகம் முன்பு விஜய் ரசிகர்கள் ஆர்ப்பாட்டம்....
எத்தனையோ உயிர்கள், உடைமைகளை இழந்தும் திருந்தவில்லை நம்மவர்கள்.....
படம் பொழுது போக்குக்கு மட்டும் தான் ...
நம்மவர் உயிர்கள் போய்க் கொண்டு இருந்தபோது கை கட்டி நின்ற தமிழ்நாட்டு சினிமா... அந்த நேரம் உங்கட விஜய் எங்கே போனாரு.... அவங்க தான் அப்படின்னா நம்ம ஆள்களும் திருந்தியபாடில்லை ..
கலாசாரச் சீர்கேடு கூட சகோதர இனத்தால் இல்லை...., எல்லாம் நம்ம ஆக்கள் தான் காரணம் ....

**அரி பெரி**
அட படிப்பறிவில்லாத பரதேசிகளே ... உங்களை எல்லாம் நடு ரோட்டில வைச்சு சுடனுமடா.. கழுதைகளே .. போய் அம்மா, அப்பா, தங்கச்சி, தம்பி, மனுசி, பிள்ளை குட்டிகள் என்ன செய்யுதுகள் சாப்பிடுதுகளா .. எண்டு பாருங்கடா.. உங்களை நினைக்க வெக்கமாகக் கிடக்குது நாய்கள்... செத்துபோங்கடா ...
யாழ்ப்பாணத்திலை இது தான் இல்லாமல் இருந்திச்சு இப்ப தொடக்கி வைச்சுட்டாங்கள்......


**விற்பனைக்கு**
நல்ல நிலையில் TATA 909 ரக பேருந்து விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 497 3057
(43110)(45.8.3)

**வீடு/அனெக்ஸ் வாடகைக்குத் தேவை**
மூன்று பேர் கொண்ட ஆசிரியர் ஒருவரின் குடும்பத்திற்கு யாழ். நகரை அண்டிய பகுதியில் வீடு/ அனெக்ஸ் வாடகைக்குத் தேவை.
தொடர்பு:078 818 4204
(43888)(4.8.3)

**வேலை ஆள்கள் தேவை**
யாழில் பிரபலமான புத்தக சாலைக்கு ஆண்,பெண் தேவை.
(மாநகரசபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:077 699 2917
(சி/11553)(4.8.3)


## பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 24
கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் நிகழ்வின் இரண்டாம் அமர்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.
இதேவேளை இரண்டாம் அமர்வு பிறிதொரு தினத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம், ஜன. 24
சிவ.மகாலிங்கம் எழுதிய 'தவ முனிவனின் தமிழ் மந்திரம்' நூல் அறிமுக விழா சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.
சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ரவி ராஜ் கலந்து கொள் வார். (ந)

## ஒன்றுகூடல் நிகழ்வு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் ஒன்று கூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வைத்தியசாலை வளாகத்தில் நடைபெறும்.
வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாஸன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ஒ-9)

## குழந்தையேசு திருவிழா

மந்திகை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள குழந்தை யேசு சிற்றாலய வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு பருத் தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ஜோன் மயூரன் அடிகளார் தலைமையில் நடைபெறும். (ந)





இன்று முதல்
MAJESTIC CINEPLEX AT
Cargills SQUARE யாழ்ப்பாணம் (Opposite Jaffna Teaching Hospital)
10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
சல்மான் கான், டெய்சி ஷா நடித்த



An Sohail Khan Production
CEYLON THEATRES
JAI HO
ஜெய் ஹோ
ஹிந்தி (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)
www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
Happy Birthday!



அரசரத்தினம் தவமணி
(சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை)
இன்று (24.01.2014)
வெள்ளிக்கிழமை தனது
50ஆவது பிறந்தநாளைக்
கொண்டாடும்
அரசரத்தினம் தவமணி
அவர்கள்
பல்லாண்டு காலம்
சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்..
வாழ்த்துபவர்கள்: மகள் - றமா,
மருமகன் - சங்கர்,
பேரப்பிள்ளைகள் - ஜாதவி, ஆதீஸ்
நண்பர்கள்.
கைதடி தெற்கு,
கைதடி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களில் காயங்களுக்கு இலக்காவோர் நாளாந்தம் அனுமதி

*கிளிநொச்சி பொது மருத்துவமனையில்*

கிளிநொச்சி.ஜன.24

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் தினமும் காயங்களுடன் அனுமதிக்கப்படுபவர்களில் குறைந்தது 20 பேராவது வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்தவர்களாக உள்ளதாக அறிய முடிகின்றது.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் தினமும் 30 பேராவது காயங்களுடன் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் 20 பேர் வீதி விபத்துக்களுடன் தொடர்புபட்டவர்களாகக் காணப்படுவதாக மருத்துவமனையின் புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

மருத்துவமனையின் காயங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் விடுதி எந்த நேரமும் நிரம்பி வழியும் நிலையில் காணப்படுகின்றது.

மேலும் விபத்துக்களில் சிக்கிக் காயம் அடைபவர்களில் அனேகம் பேர் இளைஞர்களாகவே உள்ளனர்.

வாகனங்களை வீதிகளில் வேகமாகச் செலுத்தும் போதே விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் மஞ்சள் கோடுகளை மதிக்காத வாகனச்சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நடந்து செல்பவர்களுக்கு பாதையைப் பாதுகாப்பாகக் கடப்பதற்காகவே மஞ்சள் கோடுகள் உள்ளதாகவும் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (க-18)




**கல்லூரி திறந்து வைப்பு**

கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள பண்டிதர் வீ.பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியின் பெயர்ப் பலகையை கிளிநொச்சி மேலதிக அரச அதிபர். செ.ஸ்ரீநிவாசன் திறந்து வைக்க, அவருக்கு அருகில் பண்டிதர் வீ.பரந்தாமன், த.ஜீவநாயகம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (க-55)

## மல்லாவியில் கூட்டமைப்பின் அலுவலகம்

முல்லைத்தீவு.ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாணசபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனின் ஏற்பாட்டில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அவர் உரையாற்றும்போது:

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவிப் பிரதேச மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வடமாகாண சபை உறுப்பினர்களையும் சந்தித்துத் தமது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதாயின் முல்லைத்தீவு அல்லது வவுனியா ஆகிய பகுதிகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த அலுவலகம் இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது, தவிர மல்லாவி மருத்துவமனையில் தமிழ் மருத்துவர்கள் இல்லாததால் தாம் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் இந்தப் பகுதி மக்கள் என்னிடம் தெரிவித்திருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 2 மணியில் இருந்து மாலை வரை இந்த அலுவலகத்தில் இலவச மருத்துவ சேவையை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## கல்விப் பணிப்பாளருடன் பட்டதாரிகள் 32 பேர் சந்திப்பு

*ஆசிரியர்களாக நியமிக்குமாறு கோரிக்கை*

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 32 பட்டதாரிகள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் வேளையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இது தொடர்பாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் என்னைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இங்குள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் தம்மை ஆசிரியர்களாக உள்வாங்குமாறும்.

**தம்மை ஆசிரியர்களாக உள்வாங்குமாறும். தாம் மாவட்டத்தின் எந்தப் பாடசாலையிலும் கற்பிக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர்.**

தாம் மாவட்டத்தின் எந்தப் பாடசாலையிலும் கற்பிக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் இவர்களில் எவரும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கான தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை - என்றார். (க-18)

## ஜெயபுரம் பாடசாலைக்கு இரு பட்டதாரிகள் நியமனம்

*பூநகரி பிரதேச செயலரின் முன்மாதிரி*

பூநகரி.ஜன.24

கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயத்தின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கையில் ஈடுபடும் பொருட்டு பூநகரிப் பிரதேச செயலர் இரண்டு பட்டதாரிகளை விடுவித்துள்ளார் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் இந்த இரண்டு பட்டதாரிகளையும் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆசிரியர்களாகப் பணிபுரியும் பொருட்டு அனுப்பி வைத்துள்ளார். புவியியல், தமிழ் ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்காகவே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரிப்பிரதேசசெயலர்போன்று ஏனைய பிரதேச செயலர்களும் பட்டதாரிகளைப் பாடசாலைகளுக்கு நியமித்து உதவ வேண்டுமென கிளி நொச்சிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்தார். (க-18)

# வவுனிக்குளம் புனரமைப்பில் மோசடி; பணிகள் சிறந்த முறையில் இல்லை

*குற்றஞ்சாட்டுகிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி*

அக்கராயன்.ஜன.24

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகளில் மோசடிகள் இடம்பெற்றதால் குளத்தின் புனரமைப்பு ஒழுங்காக இடம்பெற வில்லையென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற உழவர் பெருவிழாவில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

குளத்தின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாகச் சிறந்த முறையில் வேலைகள் இடம்பெற வில்லை.

இதனால் குளத்திலிருந்து நீர் வீணாக ஆற்றில் பாய்ந்து செல்லும் நிலை காணப்படுகின்றது.

குளத்தின் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பெடுத்தவர் மத்திய அரசின் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணிபுரியும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என விவசாயிகள் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பா.வி.கர்ணனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

குளத்தின் புனரமைப்பு வேலைகள் சிறந்த வகையில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஓர் ஒப்பந்தகாரரிடமும் வாய்க்கால்களின் புனரமைப்புக்கள் இன்னோர் ஒப்பந்தக்காரரிடமும் வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் ஊழல் நிகழ்ந்திருக்க முடியாது. பலர் குளத்தின் புனரமைப்புப் பணிகளில் தொடர்பு கொண்டிருக்கின்றனர். ஊழல் நடைபெற்றதாக நாடாளுமன்ற உறுப்பினர் கருதினால் இங்கு நேரில் வந்து குளத்தின் வேலைகளைப் பார்வையிட்டுவிவரங்களைஅறிய முடியும் - என்றார். (க-18)

## கல்வி நிலை தொடர்பாக கல்வி அமைச்சர் கலந்துரையாடல்

கிளிநொச்சி.ஜன.24

வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாஇன்றுகிளிநொச்சி கல்வி வலயத்துக்கு வருகை தந்து மாவட்டத்தின் கல்விநிலை தொடர்பாக ஆராய வுள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலய அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கலந்துரையாடலில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)

## மாட்டிறைச்சி வாங்க கிளிநொச்சி சந்தைக்கு வரவேண்டிய நிலை

கிளிநொச்சி, ஜன.24

கிளிநொச்சி மேற்குப் பகுதியிலுள்ள அக்கராயன், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், ஊற்றுப்புலம் ஆகிய இடங்களில் இயங்கி வந்த மாட்டிறைச்சிக் கடைகள் மூடப்பட்டுள்ளதால் இந்தப் பகுதி மக்கள் வேறு இடங்களை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மாட்டிறைச்சியை வாங்குவதற்கு கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு வரவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேற்படி இறைச்சிக்கடைகளை இந்த ஆண்டு நடத்துவதற்கு கோரப்பட்ட ஏலத்தின் போது எவருமே எடுக்காத நிலையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நா.வை.குகராசாவிடம் கேட்டபோது:-

இரண்டு தடவைகள் ஏலம் கோரப்பட்டபோதிலும் எவருமே கடைகளை எடுக்கவில்லை. மூன்றாவது முறையும் ஏலம் விடுத்து எவரும் கடைகளை எடுக்கவில்லை என்றால் வெளியாள்களும் பங்குபற்றக் கூடிய வகையில் பகிரங்க ஏலத்தில் கடைகள் விடப்படும்- என்றார். (க-18)

## படுத்திருந்த மாட்டின் மீது ஏறியது மோட்டார் சைக்கிள்

*நெடுங்கேணியில் இளைஞர் படுகாயம்*

கடந்த 20 ஆம் திகதி இரவு நெடுங்கேணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர், வீதியின் நடுவே படுத்திருந்த மாட்டின் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்தார்.

அவசரமான வேலை நிமித்தம் வவுனியாவில் இருந்து நெடுங்கேணியை நோக்கி, மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் நெடுங்கேணிப் பகுதியை அண்மித்த வேளையில் வீதி யின் நடுவே படுத்திருந்த மாட்டின் மீது மோட்டார் சைக் கிள் மோதியது. இதில் மோட் டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் மோட்டார் சைக் கிளில் இருந்து வீழ்ந்ததில் படுகாயம் அடைந்தார். இவருடன் சென்ற மற்றைய இளைஞர் சிறுகாயங்களுக்கு உள்ளானார். படுகாயம் அடைந்த இளைஞர் வவுனியா கல்நாட்டின குளம் பகுதியைச் சேர்ந்தமயில்வாகனம்வினோத் (வயது-17) எனத் தெரிய வருகின்றது. இவரின் வலது கரத்தின் முன் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில் கட்டாக் காலியாகத் திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு நகர சபை, பிரதேச சபை ஊடாக பொது மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த விபத்தை விட அண்மையில் கனகராயன் குளம் பகுதியில் வாகனத்தில் வந்த இருவர் மாட்டுடன் மோதிச் சாவடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-421)

# வவுனியாவில் பயிர் அழிவுகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு

*பயிர்க் காப்புறுதியை மேற்கொண்டவர்களுக்கு*

வவுனியா.ஜன.24

வவுனியாவில் பயிர்க் காப்புறுதியை மேற்கொண்டவர்களுக்கு பயிர் அழிவுகளுக்குரிய நட்டஈடு வழங்கும் நடவடிக்கையில் வவுனியா கமநல சேவைத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இம்முறை மழை பொய்த்ததால் நெற்பயிர்கள் அழிவடைந்து விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் இவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**இம்முறை மழை பொய்த்ததால் நெற்பயிர்கள் அழிவடைந்து விவசாயிகள் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில் இவர்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன**

விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையின்போது பெற்றுக் கொண்ட உரத்துக்குரிய பற்றுச்சீட்டை கமநல சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பித்து அழிவுகளைப் பதிவு செய்வதற்குரிய படிவங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பின்னர் படிவங்களைப் பூர்த்தி செய்து தமது பகுதிக்கான கமக்கார அமைப்பின் பரிந்துரையைப் பெறுதல் வேண்டும். பின்னர் கமநல அபிவிருத்திப் பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆகியோரின் கையொப்பங்களைப் பெற்று பிரதேச செயலரின் பரிந்துரையுடன் படிவத்தை மீண்டும் கமநல சேவைகள் திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்தத் தகவல்களை கோவில் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரஞ்சனா தெரிவித்தார். (க-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்புக்கு வருகை தந்தார். அவர் மாவட்ட ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் கிழக்கு மாகாண மதத் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச)

# வாழைச்சேனையில் கைக்குண்டு மீட்பு



வாழைச்சேனை.ஜன.24
வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள செம்மனோடை ஆர்.டி.எஸ். வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள், அந்த வீதியின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த மதகின் கீழ் பகுதியில் மர்மப் பொருள் ஒன்று தென்படுவதைத் கண்டு உறவினர்களிடம் தெரிவித்தனர்.

அதனையடுத்து பொலிஸுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இந்தக் கைக்குண்டை பொலிஸாரும், குண்டு செயல் இழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினரும் இணைந்து செயல் இழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# மழை இல்லாததால் நெற்செய்கை பாதிப்பு



மட்டக்களப்பு.ஜன.24
மட்டக்களப்பு, வாழைச்சேனை கமநல கேந்திர நிர்வாக எல்லைக்குள் இந்தமுறை செய்கை பண்ணப்பட்ட இருபத்தைந்தாயிரம் ஏக்கர் வயல்களில் மழை உரிய வேளையில் பெய்யாததால் சுமார் பத்தாயிரம் ஏக்கர் வயல் கைவிடப்பட்ட நிலையில், மீதமான வயல்களிலும் நோய் பரவி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்தமுறை பயிர் செய்யப்பட்ட பெரும் போக வயல்களில் வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தில் பதினையாயிரம் ஏக்கர் வயல்களும் மழை நீரை எதிர்பார்த்து செய்கை பண்ணப்பட்டது.

இதில் மழை நீரை எதிர்பார்த்து செய்கை பண்ணப்பட்ட வயல்கள் உரிய மழை வீழ்ச்சியில்லாததால் முற்றாக கைவிடப்பட்ட நிலையில், மீதப்பட்ட வயல்களிலும் நோய் பரவியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ச)

# மேய்ச்சல் தரைக் காணிகளில் பயிர்செய்தால் நடவடிக்கை

## காணி அபிவிருத்தி அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவு



மட்டக்களப்பு.ஜன.24
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் அத்து மீறி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

போருக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புற அரச காணிகளிலும், வன பரிபாலன காணிகளிலும் வெளி மாவட்டத்தை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் அத்து மீறிப் பயிர்ச் செய்கைகளில் கடந்த5 வருடங் களாக ஈடுபட்டு வருகின்றனர்.

அதனால் கால்நடைப்பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரை தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினையால் பருவ கால நெற் செய்கைக் காலங்களில் மேய்ச்சல் தரைகளில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துதல், கால்நடைகள் காணாமல் போதல் மற்றும் தடுத்து வைக்கப்பட்டு கப்பம் பெறுதல் போன்ற பிரச்சினைகளைத் தாம் எதிர்நோக்கி வருகின்றோம் என்று கால்நடை வளர்ப்போர் தெரிவித்தனர்.

இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சில் செவ்வாய்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்திலே அமைச்சர் இவ் வாறு உத்தரவிட்டுள்ளார்.

காணி அமைச்சு, காணித் திணைக்களம், வனத்துறைத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலர்கள் உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவும் கலந்து கொண்டார். (ச)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21.02.1953

மறைவு
24.01.2012

அமரர் கனகசபை விஜயரெத்தினம் (ஞானம்)

(உரிமையாளர்: கண்ணன் பெயின்ற் (ஞானம் பெயின்ற்))

ஞானத்தின் திருவுருவாய் ஞாலத்தில் அவதரித்து
வையத்துள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து - வானுறையும்
தெய்வத்துடன் ஒன்றாகிய - எங்கள் அப்பாவே!!

ஒன்றல்ல இரண்டல்ல எத்தனை ஆண்டுகள் - சென்றாலும்
உங்களுக்காய் நாம் உள்ளத்தில் - ஏற்றிவைத்த
நினைவின் ஒளிதீபம்
மண்ணோடு நாம் வாழும் காலம் வரையும்
மறையாமல் ஒளி வீசிக் கொண்டிருக்கும்
நீங்கள் எமக்குக் காட்டிய உங்கள் பாதையில்
என்றென்றும் நாம் சிறப்புடன் வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்



என்றும் உங்கள் பிரிவால் துயருற்று வாடும்
மனைவி,
பிள்ளைகள்.

ஞானம் பெயின்ற்,
558, 560, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.
(C/11535)(2.6.3)

# மின்சாரவசதி வழங்கக் கோரி பொதுமக்கள் படையெடுப்பு

## மட்டு.மின்சாரப் பொறியியல் அலுவலகத்துக்கு முன்னால்



மட்டக்களப்பு.ஜன.24
மட்டக்களப்பு, வெல்லாவெளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள திக்கோடை, வம்மியடி ஊற்று, தும்பங்கேணி, சின்னக்காந்திபுரம், பிலாலிவேம்பு உள்ளிட்ட ஒன்பதுக்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மின்சாரப் பொறியியல் அலுவலகத்துக்கு முன்னால் கூடி கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தக் கிராமங்களைத் தாண்டி வேறு கிராமங்க ளுக்கு மின்சாரவசதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் எமக்கு இதுவரை மின்சார வசதி வழங்கப்படவில்லை.

எனவே உடனடியாக மின்சாரவசதி எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எமக்கு மின்சாரவசதி வழங்காததால் காட்டு யானைகளின் தொல்லைகளால் பல பாதிப்புக்களை நாங்கள் எதிர்நோக்குகின்றோம்.

எனினும் பலவேண்டுகோள்களை நாங்கள் முன் வைத்தும் இதுவரை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லைஎன்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மின்சாரப் பொறியியல் அலுவலகத்துக்கு முன்பாக மக்கள் கூடி இருந்ததையடுத்து உடனடியாக மாவட்ட மின் பொறியியலாளர் அலுவலகத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா வருகை தந்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் விவகாரத்தை மூடி மறைக்கவே நட்டஈடு நாடகம்

## விக்கிரமபாகு குற்றச்சாட்டு



கொழும்பு.ஜன.24

காணாமற்போனோர் விவகாரத்தை மூடி மறைக்கவே அரசு நட்டஈடு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது என்று நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரட்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

காணாமற்போனோர் விடயத்திலும், மன்னார் புதைகுழி விவகாரத்திலும் அரசு நீதியான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவதற்கான அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டுகருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசு தற்போது பெரிய பிரச்சினையில் சிக்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையின் வளர்ச்சியை அமெரிக்காவால் பொறுத்துக் கொள்ளமுடியாதமையே இதற்கெல்லாம் காரணம் என்று அரசு கூறிக் கொண்டு வருகிறது.

அரசின் இந்தக் கருத்து மிகவும் வேடிக்கைக்குரியது. அமெரிக்கா எம்முடன் போட்டி யிடுவதற்கு அவசியமே இல்லை. அதற்கான தேவையும் இதுவரை ஏற்படவில்லை.

அவர்கள் இங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து வலியுறுத்தி வருகின்றார்களே ஒழிய இலங்கையை அடக்கியாளவோ, போட்டியிடவோ எண்ணவில்லை என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

அதே போன்று அவர்கள் கூறுகின்ற மனித உரிமை விவகாரங்கள் குறித்து அரசு செவிசாய்க்காவிடின் பெரிய பின் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும்.


அதுமட்டுமல்லாது, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழு தற்போது காணாமற் போனோரது விவரங்களை சேகரித்து வருகிறது.

ஆனால், இந்த விசாரணை இறுதி வரை நீதியாக நடைபெறுமா என்பதைக் கூற முடியாது. காரணம், காணாமற் போனோரது விவரங்களை மூடிமறைக்கவே அரசு தற்போது நட்டஈடு என்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது.

நட்ட ஈட்டை வழங்கி இந்தப் பிரச்சினையை அப்படியே மூடி மறைக்கவே அரசு தற்போது முயற்சித்து வருகிறது-என்றார். (ச)

# இலங்கைக்குப் பாப்பரசர் வருகை தருவது சந்தேகம்

## அரசின் திட்டம் தோல்வி



கொழும்பு.ஜன.24

பாப்பரசர் பிரான்சிசை இந்த ஆண்டு இலங்கைக்கு வரவழைக்கும் அரசின் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் மார்ச் மாதம் பாப்பரசரை கொழும்பு அழைக்க இலங்கை அரசு திட்டமிட் டிருந்தது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் பாப்பரசருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், இலங்கை வருமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார்.

இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்வது குறித்து பாப்பரசர் ஆலோசித்து வருகின்றார். ஆனால் இந்தப் பயணம் அடுத்த ஆண்டிலேயே இடம் பெற வாய்ப்பு உள்ளது என்று வத்திக்கான் பேச்சாளர் நேற்றுமுன் தினம் தக வல் வெளியிட்டார்.

இதேவேளை இந்த ஆண்டில் பாப்பரசரை கொழும்புக்கு அழைத்து, இலங்கையில் மதரீதியான பாகுபாடு காட்டப்படுவதான குற்றச்சாட்டுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கத் திட்டமிட்டிருந்த இலங்கைக்கு, வத்திக்கானின் இந்த முடிவு ஏமாற்றத்தை அளித்துள்ளது. (ச)

# வடபகுதியில் இன ஒழிப்பை ஆரம்பிக்கிறது அமெரிக்கா

## சாடுகிறார் விமல் வீரவன்ஸ



இலங்கையின் வடபகுதியில் இனஒழிப்பை அமெரிக்கா ஆரம்பித்து வைக்கின்றது என்று அமைச்சரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய சுதந்திர முன்னணியின் மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டு வரப்படவிருப்பதைத் தவிர்ப்பதற்காக அரசு மீது கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நிபந்தனைகளை விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அது அப்பகுதியில் வாழும் அனைத்து சிங்கள மக்களையும் வெளியேற்றுவதற்கான சூழலை உருவாக்கிவிடும்.

இனஒழிப்பு வடக்கில் இடம்பெறுறது. 1983 ஆம் ஆண்டில் கறுப்பு ஜூலை தென்னிலங்கையில் ஏற்பட்டது. எனினும் இன்னமும் இங்கு தமிழர்கள் வசிக்கிறார்கள். கறுப்பு ஜூலை காலகட்டத்தில் இருந்தவர்களை விட இன்று இங்கு பெருமளவில் தமிழர்கள் இருக்கிறார்கள்.

அரசும், இராணுவமும் போர்க் குற்றங்களை இழைத்துள்ளன என குற்றஞ்சாட்டுவதன் மூலமாக அமெரிக்கா இலங்கையில் இனச் சண்டையை மூட்டிவிட முனைகிறது-என்றார். (ச)

# சுற்றுச் சூழலைப் பாதிக்கும் பொருள்களைப் பாவிக்காதீர்

## அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்து

கொழும்பு. ஜன. 24

நடைபெறவுள்ள தென்மாகாண மற்றும் மேல் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையிலானபொருள்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபை சகல அரசியல் கட்சிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபைத் தலைவர் விமல் ரத்னாயக்கா விடுத்துள்ள அறிக்கையி லேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்காக தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளின் போது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனைப் பொருள்களைப் பயன்படுத்தி அலங்காரங்களை மேற்கொண்டு சூழலை மாசுபடுத்த வேண்டாம் என்று போட்டியிடும் கட்சிகளின் அனைத்து வேட்பாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் ஒலிச் செயற்பாடுகளையும் வேட்பாளர்கள் கவனத்தில் கொண்டு பரப்புரை நடவடிக்கைகளுக்காக சமூக வலைத் தளங்களை உபயோகிப்பது பொருத்தமானது-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)

சன்றைஸ் மெடி கிளினிக்கில் இலவச மருத்துவ முகாம்

யாழ் மக்களுக்கு உயர் தர வைத்திய சேவையை வழங்கி வரும் "சன்றைஸ் மெடி கிளினிக்" நிறுவனம் தனது 10 ஆவது அகவைப் பூர்த்தியை முன்னிட்டு 28.01.2014 அன்று 8 மணி தொடக்கம் மக்களின் சுகவாழ்வை மேம்படுத்துவதற்காக 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான (ஆண்/பெண்)

- சர்வதேச தரத்திலான கொம்பியூட்டர் மயமான இயந்திரத்தின் மூலம் இலவச இரத்தம், சிறுநீர் பரிசோதனைகளும்.
- யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் இலவச வைத்திய ஆலோசனையும்

இலவச இரத்த கொலஸ்ரோல் / Free Blood Cholesterol

இலவச இரத்த பிரிவு / Free Blood group

இலவச இரத்த குளுக்கோஸ் / Free Blood suger

இலவச சிறுநீர் குளுக்கோஸ் / Free Urine Suger

இலவச இரத்த வீதம் / Free Hemoglobin

இலவச பல் வைத்திய ஆலோசனை / Free Dental Consultation

இலவச வைத்திய ஆலோசனை / Free Consultation

குறிப்பு:

பயன்பெற விரும்புவோர் இன்றுமுதல் எமது நிறுவனத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொண்டு இலவச மருத்துவ அட்டையைப் பெற்றுக்கொள்ளவும். இலவச மருத்துவ அட்டை வைத்திருப்பவர்களுக்கு 2014ஆம் ஆண்டு முழுவதும் இரத்தம், சிறுநீர், X'ray, ECG போன்றவற்றிற்கு விசேட கழிவுகள் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

388, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலைய வைரவர் கோயில் முன்பாக, யாழ்ப்பாணம்). தொ.பே.இல 021 222 6069

(438611)(10.6.3)

தற்போது யாழ் நகரில்...




- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

Building Careers - Transforming Lives

Macro Ads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சீரிய குறிக்கோள் நாடி நிதம் மனச் செம்மையுடன் உழைப்போம்

இந்து ஆலயங்களின் புனிதத் தன்மையை பாதுகாப்பதற்கான இயக்கம் ஒன்று, இன்றைய நாள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் முகிழ்க்கிறது. அதற்கான ஆரம்ப முயற்சியில் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் இன்று காலடி எடுத்து வைக்கிறது.

ஒப்பீட்டளவில், ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களுக்கு தமது சமயங்கள் மீது உள்ள உள்ளகப்பற்று இந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மிகக் குறைந்த வீதத்திலேயே உண்டு என்பது கவலைக்கு உரிய ஒன்றாகும்.

எங்கள் மண்ணில், இந்து மதத்தின் கிரியைகள், விதிமுறைகள் குறித்த விளக்கங்கள் பெரும்பாலானோரிடம் போதிய அளவு இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இந்து சமயம் குறித்த அறிவூட்டல் ஆரம்பத்தில் குருகுலக் கல்வியாக இருந்த போதிலும், இப்போது அது பல்கலைக்கழக மட்டம் வரை கற்பிக்கப்படுகிறது. எனினும் அதன் பெருமைகளை சராசரி பக்தர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு, முழு அளவில், வேண்டிய வீச்சில் இல்லை என்பது பெரும் குறைபாடே.

ஆலய வழிபாடுகள், அவற்றோடு ஒன்றித்த அனுட்டானங்களைப் பேணுதல், பெரியோருக்கு மதிப்பளித்தல், ஆலயக் குருமார்களைக் கனம் பண்ணுதல் போன்ற மேன்மை நிலை அருகி வருதலும்-

ஆலயங்களின் நிர்வாக உரித்துக் குறித்த பிணக்குகள் அதிகரித்து, நீதிமன்றங்களை நாடும் போக்கு மேலோங்கி வருதலும்-ஒவ்வாத புதிய போக்கு வளர்தலும் கவலைக்கு உரியதாகும்.

எமது மண்ணில், ஆண்டாண்டு காலமாகப் பேணப்பட்ட தமிழர் கலாசாரத்தைத் தறுக்கணிக்கச் செய்யும் வகையில், ஒவ்வாத ஆடைகளுடன் பக்தர்கள் ஆலயத்துக்குச் செல்வதும் மிகப் பெரிய அளவில் அதிகரித்து, சமகாலச் சாபக்கேடாகி வருகிறது.

ஒட்டு மொத்தத்தில், ஆலயங்களின் புனிதத் தன்மை வேகவேகமாக அருகி வருகிறது.

மறுபுறத்தில் ஆலயங்களை உடைப்பது, அங்குள்ள விக்கிரகங்கள் உட்பட மற்றும் அணிகலன்கள், வாகனங்கள் திருடப்படுவதும் மனக் கூச்சம் தானும் இன்றி அதிகரித்து வருகின்றன. சமூக விழுமியங்களை காலால் மிதிக்கும் நடத்தைகளும் பல்கிப் பெருகுகின்றன.

இவற்றைத் தடுத்து நிறுத்தும் ஆரம்ப ஏற்பாடாக, இந்து, சைவ சமய விழுமியங்களை மக்கள், பக்தர்கள் ஊன்றி உணர்ந்து தம்மைத் தாமே திருத்திக் கொள்வதற்கு-

உரிய, உகந்த வழியில் தடம் பதிப்பதற்கு இன்றைய ஆன்மிகப் பேரணி ஓர் உந்து சக்தியாக அமையும். அதில் பங்கு கொண்டு, புதிய காலத்துக்கு அடித்தளம் இடுவது இன்றைய தேவையாகும்.

இன்றே செய்வோம், அதனை சீரிய குறிக்கோள் நாடி நிதம் பயிற்சி செய்வோம். அதுவே உடனடித் தேவையுமாகும்.

# நாடாளுமன்றமும் ஜனநாயகமும்

ர்ராஜராஜன்

ஜனநாயக நாடொன்றின் நாடாளுமன்றம் என்பது ஜனநாயக முறைப்படி இடம் பெறும் தேர்தல்கள் மூலமாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்டதொரு உயர்ந்த அமைப்பாக விளங்குகின்றது. மக்களின் ஜனநாயக உரிமைகள் இம்மியும் பாதிக்கப்படாத வகையில் பார்த்துக் கொள்வது இதன் முக்கிய கடமையாகும்.

இதில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கௌரவம் மிக்கவர்களாக மதிக்கப்பட்டு வருகின்றமை ஜனநாயக நாடுகளில் ஒரு மரபாகவே காணப்படுகின்றது. நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறும்போதும் அதனைத் தட்டிக் கேட்கும் அதிகாரம் இந்த நாடாளுமன்றத்துக்கு உண்டு என்பதுதான் பொதுவான ஜனநாயக மரபாகும். குறிப்பாகச் சொல்லப் போனால் ஒரு நாட்டின் ஜனநாயகம் என்னும் விருட்சத்தின் ஆணி வேராக இந்த நாடாளுமன்றமே விளங்குகின்றது.

சில நாடுகளில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை காணப்படுகின்ற போதிலும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் சக்தி மிக்கனவாக இந்த நாடாளுமன்றங்கள் விளங்குகின்றன. இதற்கு அமெரிக்காவில் அண்மையில் நிகழ்ந்ததொரு சம்பவத்தை உதாரணமாகக் கூறமுடியும். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தை அந்த நாட்டு நாடாளுமன்றமான காங்கிரஸ் சபை அங்கீகரிக்காது இழுத்தடித்து வந்த தால் அமெரிக்காவே ஸ்தம்பித்தது. பல்லாயிரக் கணக்கான அரச ஊழியர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுருக்கமாகக் கூறினால் அமெரிக்காவே ஆடிப் போய்விட்ட நிலையில் காணப்பட்டது. பின்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் மூலமாக சிக்கலுக்குத் தீர்வு கிடைத்தது. அமெரிக்காவில் நிலைநாட்டப்படும் ஜனநாயக விழுமியங்களுக்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

ஜனநாயக நாடுகள் எனக் கூறிக் கொள்ளும் ஒவ்வொரு நாட்டிலும் இந்த நிலை காணப்பட்டால் ஜனநாயகம் பட்டுப்போகாது. மேன்மேலும் துளிர் விட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் அது சாத்தியமில்லாது காணப்படுவதுதான் கவலை தருகின்றது.

### ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டத் தவறும் நாடாளுமன்றங்கள்

இன்று ஜனநாயகம் என்பதே கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் நாடாளுமன்றங்கள் அவற்றின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டத் தவறும் அவலத்தையே நாடுகள் பலவற்றிலும் காண்கின்றோம்.

உதாரணமாக எமது நாட்டை எடுத்துக் கொண்டால் வெறும் எண்ணிக்கையின் அடிப்படையில் பெரும் பான்மையாக உள்ளவர்களுக்குச் சார்பான முடிவுகள் எடுக்கப்படும் ஓர் இடமாகவே நாடாளுமன்றம் விளங்கு கின்றது. தேர்தல்கள் மூலமாகவும், வேறு கட்சிகளிலிருந்து ஆள்களை இழுத்து எடுத்துக் கொண்டதன் மூலமாகவும் மூன்றில் இரண்டு பங்குக்கும் மேலான உறுப்பினர் தொகையைக் கொண்ட ஆளும் தரப்பினர் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் இடமாகவே நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். சட்டங்களை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றங்களுக்கு உண்டு என்பதால் தமக்குச் சாதகமான வகையில் அரசியலமைப்பில் திருத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலமாகவே ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டு தடவைகள் என்பது நீக்கப்பட்டது. இவை ஜனநாயகத்துக்கு விழுந்த பலத்த அடியாகவே ஜனநாயகவாதிகள் கருதுகின்றனர். மேலும் தமக்கு வேண்டாதவர்களைத் தண்டிப்பதற்கும் இந்த நாட்டின் நாடாளுமன்றம் ஆளும் தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முன்னாள் உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு என்ன நடந்தது என்பதை இந்த நாடு மட்டுமல்ல முழு உலகமுமே அறியும்.

மேலும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே அங்கு பெரும்பான்மையாக அங்கம் வகிப்பதால் சிறுபான்மை இனத்தவர்கள் அலட்சியம்செய்யப்படும் நிலையேஎமது நாட்டு நாடாளுமன்றத்தில் காணப்படுகின்றது. குறிப்பாக சிறு பான்மையினரின் குறைகளை அங்கு எடுத்துச் சொல்வதில் கூட அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடர்களைஎதிர்கொண்டு வருகின்றனர். இவை யெல்லாம் ஜனநாயகத்துக்கு விழும் பலத்த அடி என்றே நாம் கொள்ள வேண்டும்.

### பெயருக்கு மட்டுமே நாடாளுமன்றம்

இறுதிப் போரின் போது பல்லாயிரக் கணக்கான சிறுபான்மைத் தமிழர்கள் பல்வேறு வகையிலும் அழிக்கப்பட்ட போது எமது நாட்டு நாடாளுமன்றம் மௌனம் சாதித்துக் கொண்டிருந்தது. அழிக்கப்படுபவர்கள் எமது நாட்டு மக்களே என்ற உணர்வு அங்கு காணப்படவில்லை. எதிரி நாட்டைச் சேர்ந்தவர்கள் அழிக்கப்படுவது போன்றதொரு எண்ணப்பாடு மட்டுமே அங்கு நிலவியது. அதன் பின்னரும் தமிழர்கள் இந்த நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வைப்பார்களென எவருமே எதிர்பார்க்க முடியாது.

மேலும் இலங்கையைப் பொறுத்த வரை நாடாளுமன்றம் பெயருக்கு மட்டுமே இயங்க அதிகாரங்கள் முழுமையையும் ஜனாதிபதி தம் வசம் கொண்டுள்ளார். அவரது ஆணைகளை அப்படியே நிறைவேற்றும் இடமாக நாடாளுமன்றம் மாறிவிட்டது. இந்த நிலையில் இதைப் போன்றதொரு அமைப்பு இருப்பதில் பயன் எதுவுமே மக்களுக்குக் கிடைக்கமாட்டாது. ஆகவே பெயருக்கு மட்டுமே இந்த நாடாளுமன்றம் இயங்குவதை விடுத்து மக்களுக்கு உகந்த வகையில் சேவையாற்றக் கூடியதொரு அமைப்பாகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வசைமொழிகளைப் பரிமாறிக் கொள்ளும் இடமாகவும் பல் வேறு நாடுகளிலும் இயங்கும் நாடாளுமன்றங்கள் காணப்படுகின்றன. சில வேளைகளில் மோதல்களிலும் ஈடு படுகின்றனர். மக்களுக்கு முன் மாதிரி யாகத் திகழ வேண்டியவர்கள் இவ்வாறு தரம் தாழ்ந்து நடந்து கொள்கின்றமை வெட்கக் கேடான செயலாகும்.

### ஜனாதிபதியின் கையில் அதிகாரம்

எமது நாட்டைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு அதிகாரங்கள் யாவற்றையும் நாடாளு மன்றத்துக்கு வழங்க வேண்டுமென காலத்துக்குக் காலம் குரல் எழுப்பப்பட்டுவருகின்ற போதிலும் அது சாத்தியப் படுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. அதிகாரத்தை அனுபவித்துச் சுவைத்தவர்கள் இதற்கு எளிதில் இணங்கு வார்களென எதிர்பார்ப்பதும் புத்திசாலித் தனமானதல்ல. இந்த நாட்டின் ஜனாதிப தியைப் பொறுத்த வரை சகலதையும் செய்யக் கூடிய அதிகாரங்கள் யாவும் அவரிடமே குவித்து வைக்கப்பட்டுள்ளன. நீதித்துறை கூட அவரின் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றது. நாடாளுமன்றம் அவரது சுண்டுவிரல் அசைவுக்காகக் காத்திருக்கின்றது. ஆகவே ஜனநாயக மரபுகள் அங்கு கடைப்பிடிக்கப்படுவதற்கான ஒளிக்கீற்று அறவே தென் படவில்லை.

முழுக்க முழுக்க கம்யூனிச சித்தாந்தங்களைக் கடைப்பிடித்த ரஷ்யா போன்ற நாடுகள் கூட தம்மை நாடாளுமன்ற ஜனநாயக முறைமைக்கு மாற்றிக் கொண்டன. இதுவொரு நல்ல மாற்றம் தான். ஆனால் அண்மையில் அங்கு நடைபெற்ற தேர்தல்களில் பெருமளவு ஊழல் நடந்த தாகக் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. ரஷ்யாவில் மட்டுமல்ல ஜனநாயக நாடுகள் பலவற் றிலும் இதுதான் அரங்கேறி வருகின்றது. பண பலம், ஆள் பலம், அதிகார பலம் ஆகியவற்றைக் கொண்டு மக்களை அச்சுறுத்தி வாக்குச் சேகரிக்கும் இழிவான செயல்கள் இந்த நாடுகளில் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றவர்கள் நாடாளு மன்றத்தில் நேர்மையாகச் செயற்படு வதில்லை. மாறாக தவறுகள் புரிபவர் களாகவே காணப்படுகின்றனர்.

ஆகவே உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டுமென்றால் நேர்மையான முறையில் தேர்தல்கள் இடம்பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். இவர்களைக் கொண்ட நாடாளுமன்றம் ஜனநாயக மரபுகளை இம்மியும் பிசகாது கடைப்பிடிக்க வேண்டும். இதன் மூலமாகவே மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். இதை விடுத்து பெயரளவில் அது இயங்குமாயின் ஜனநாயகத்துக்கு அடிக்கும் சாவு மணியாகவே அது மதிக்கப்படும்.

> அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தை அந்த நாட்டு நாடாளு மன்றமான காங்கிரஸ் சபை அங்கீகரிக்காது இழுத்தடித்து வந்த தால் அமெரிக்காவே ஸ்தம்பித்தது. பல்லாயிரக் கணக்கான அரச ஊழியர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். சுருக்கமாகக் கூறினால் அமெரிக்காவே ஆடிப் போயுள்ள நிலையில் காணப்பட்டது. பின்னர் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் மூலமாக சிக்கலுக்குத் தீர்வு கிடைத்தது. அமெரிக்காவில் நிலைநாட்டப்படும் ஜனநாயக விழுமியங்களுக்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக் காட்டாக விளங் குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒருமைப்பாடு

அருட்பணி இ.ராஜ்குமார்,
தலைவர் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.



கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒருமைப்பாட்டு வாரம் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உலகெங்கிலும் நினைவுகூரப்படுகின்ற தருணத்தில் இந்தக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. இந்தவருடமும் இலங்கையின் பல பாகங்களிலும் கிறிஸ்தவ திருச்சபைகளாக சபைப்பிரிவுகளைக் கடந்து தமக்குள் ஓர் ஒருமைப்பாட்டுக்காக ஆங்காங்கே தமது வழிபாட்டிலும் சிறப்புக் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்றைய சமகால சூழலில் மீளவும் ஒருமைப்பாட்டு வாரத்தை நாங்கள் அனுஷ்டிக்கின்றோம். இச்சூழலில் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டில் அல்லது ஐக்கியத்தில் ஒன்றிணைவதற்கு எவ்வாறு எம்மைக் கருவிகளாக்க முடியும் என்பது பற்றிச் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். அந்த வகையில் எமது வழிபாடுகளின் போது, நாம் கூறும் பற்றுறுதி அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடுகிறோம்.

"ஒரே அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கின்றேன். இதுவே நம்முடைய விசுவாசமாக பற்றுறுதி பிரமாணத்தில் மொழிகிறோம். Apostlic என்றால் ஆதி திருச்சபைகள் மற்றும் அப்போஸ்தலர்கள் போதித்த எல்லா நெறிமுறைகளையும் பின்பற்றும் சபையாகும். Catholic என்றால் கிரேக்க மொழியில் Universal(உலகளாவிய) என்று அர்த்தம். எனவேதான் இதை அப்போஸ்தலத் திருச்சபை என்று அழைக்கிறோம். ஆகவே நாம் எந்தப் பெயர் அல்லது வழக்கத்தைக் கொண்டிருந்தாலும் ஒரே போதனைகளையும் ஒன்றுபட்ட (உலகதிருச்சபையாக) கிறிஸ்துவின் விசுவாசத்தை உடையவர்களாக இருக்கிறோம்.

கிறிஸ்து விரும்புவது நாம் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே (யோவான் 17:20-23). ஒன்றாக இருப்பதால் உண்மையைத் தெளிவாகவும் மீட்பின் பணியை நிறைவாகவும் செயற்படுத்த உந்துதலாக இருக்கும். ஆகவே (Ecumenism) திருச்சபைகளின் ஒற்றுமை இன்றியமையாதது. Ecumenism என்பது கிறிஸ்தவர்களின் ஒற்றுமை. இது ஒரே திருச்சபையினாலே மட்டும் சாத்தியம்.

1.ஏற்றுக்கொள்ளுதல் : இடம் கொடுத்தல் அல்ல (2 நாளாகமம் 30:13 22) யூதர்களின் மூன்று புனித யாத்திரைப் பண்டிகைகளில் ஒன்று (உபா.16:16) புளிப்பில்லாத அந்தப் பண்டிகையின் கரு யூதர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றதை (பஸ்கா) நினைவு கூருவது. பாவத்தை உணர்ந்து கடவுளுடைய மன்னிப்பின் அடையாளமாகப் புளிப்பில்லாத அப்பத்தை உண்டு ஒன்று கூடி ஒப்புரவாகுவார்கள். புளிப்பு யூதர்களுக்குப் பாவத்தின் அடையாளம். ஆகவே அந்தப் புளிப்பில்லாத அப்பத்தை உண்பவர்கள் இதை ஏழு நாள்களுக்கு அனுசரிப்பார்கள். ஆனால் கொடுக்கப்பட்ட வசனங்களில் கூறப்படுவது என்னவென்றால் இப்பண்டிகையின்போது ஆசாரியார் லேவியரின் கையிலிருந்த இரத்தத்தை எடுத்துத் தெளித்தபோது யூதர்கள் மற்றும் அநேகர் (எப்பியிராயீம், மனோசே, இசக்கார், செபுலோன்) இந்த முறைகளையும் வழக்கத்தையும் பின்பற்றாதவர்களும் எசேக்கியா விண்ணப்பம் பண்ணியபோது கடவுள் அனுகூலம் செய்தார் என்றும் எல்லோரும் பரிசுத்தப்படுத்தப்பட்டனர் என்றும் பார்க்கிறோம் (17-20). ஆகவே இந்தச் சம்பவத்தில் நாம் அறிவது, நாம் ஒருங்கிணைந்து கடவுளின் நாமத்தினாலே வரும்போது, ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்போது எந்த ஒரு கலாசாரமோ, வழக்கமோ, திருச்சபைகளின் கோட்பாடுகளோ, முறைகளோ, கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு அல்லது வழங்குவதற்கு தடையாக இருப்பதில்லை. ஒருவரை ஏற்றுக் கொள்வதற்கு நாம் நம்முடையவர்களை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதில்லை. ஆகவே மற்றவர்களுக்கு நன்மை கிடைப்பதை நம்முடைய கொள்கை எந்த விதத்திலும் தடை செய்யக் கூடாது. மாறாக பயன ளிக்க வேண்டும்.

2.தேவை ஒன்றே. மாற்றுவேறு இல்லை (1 கொரி 1 : 10 - 18)

கிறிஸ்தவர்கள் பல காரணங்களால் வேறுபட்டிருந்தாலும் ஏதாவது ஒரு காரணம் இணையக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படி இணையக் கூடியது "கிறிஸ்துவே. இதை பவுல் ஆழமாக, அழுத்தமாக இந்தப் பகுதியில் விளக்குகிறார். கொரிந்து திருச்சபையில் பிரிவினைகளை அறிந்திருந்த பவுல் அவர்களுடைய பிரிவினைக்கான காரணங்களையும் புரிந்திருக்கிறார். அது என்னவென்றால் கொரிந்து சபை மக்கள் தங்களுக்கென்று ஒரு தலைவரையும், முறைகளையும், வழக்கங்களையும் கொண்டிருந்தனர். ஆனால் பவுல் கிறிஸ்து மட்டுமே நிலைத்திருக்க வேண்டும் என்பதை நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்துகிறார்.

3.உள்ளத்தில் ஒருவராக : உருவில் ஒருவராக அல்ல.

"I am saying's என்று சொல்லப்படுகிற முக்கியமான சிறப்பான நடைமொழிகளில் கிறிஸ்துவை யோவான் இரட்சகராகக் கூறுகிற பகுதிகளில் மிகவும் முக்கியமானது இந்த நற்செய்திப் பகுதி. இந்தப் பகுதியில் கூறுகையில் இரண்டு முக்கியமானவற்றை வலியுறுத்துகிறார். 1. பலர் கிறிஸ்துவின் பெயராலே ஏமாற்றுவார்கள் ஜாக்கிரதை யாக இருக்க வேண்டுமென்றும், 2. ஒரே மந்தையாக கிறிஸ்துவிலே நிலைத்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். கிறிஸ்து நானே வாசல், நானே மேய்ப்பர் என்று கூறுகிறார். ஆகவே நம்முடைய வழி கிறிஸ்துவின் வழி, நம்முடைய தலைவர் கிறிஸ்து. வேறு எந்த மனிதனோ கடவுளாக அல்லது கடவுளின் பிரதிநிதியாக இருக்க வேண்டாம். நாம் மந்தைகள். ஒருவருக்கு ஒருவர் சார்ந்து தெரிந்தவர்களாக புரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. ஆகவே நம்முடைய அனுபவங்கள், வரலாறு, பழக்கங்கள் மாறுபட்டாலும் ஒன்றுபட்டவர்களாக ஒரே சபையாக வேரூன்றியிருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் கண்டிப்பாக ஒருங்கிணைந்து இருக்க ஆசைப்படுகிறோம்.

ஆனால் அது ஒரு முடியாத காரியமாக இருக்கிறது. ஏன்? சேர்ந்திருப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் அது எப்படிப்பட்ட ஒருங்கிணைப்பு? இது ஒரு முடிவில்லாத தொடர். ஒரே ஒரு அடிப்படை. ஒருங்கிணைக்கப்பட சாத்தியம். அது திருமறையினால் திருமறையை அடிப்படையாகக் கொண்டு, கிறிஸ்துவை மையமாக வைத்து மற்றவர்களுக்கும் தேவையோடு இருக்கிற மக்களுக்காகவும், ஒருங்கிணையும் போது அது சாத்தியம். அது நிலைக்கும்.

வில்லவன்

# உருளைக்கிழங்கு செய்கையாளரின் கனவு மெய்ப்பட வேண்டும்



யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தமது கனவு நனவாகுமா அல்லது இலவு காத்த கிளிபோல மீண்டும் ஏமாற்றப்பட்டு விடுவோமா என்ற பெரும் தவிப்புடன் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலத்தில் உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் திட்டமிடப்படாத ஒரு வரம்பு முறை இன்றி உற்பத்தியில் ஈடுபடுவதால் உரிய விலை கிடைக்கப்பெறுவதில்லையென்ற குற்றச்சாட்டை விவசாயத் திணைக்களமும் அரசும் மற்றும் கமத்தொழில் திணைக்களமும் முன்வைத்திருந்தன.

இந்த நிலையில் கடந்த பல மாதங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஒருங்கிணைத்து உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கம் ஒன்றை விவசாயத்திணைக்களம் அமைத்தது. அந்தச் சங்கத்துடன் பல சந்திப்புக்களை நடத்தி விதை உருளைக் கிழங்குகள் கூட உரிய முறையில் மானிய அடிப்படையில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன.

கால நேரம் தப்பாது குறித்த நாற்றுக்களும் நடப்பட்டன.

இந்த நிலையில் இம்முறை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணத்தில் நல்ல விளைச்சலையும் தந்தது. இதனால் விவசாயிகள் அறுவடைக்கான நாளை எதிர்பார்த்து பெரும் மகிழ்ச்சியில் இருந்தனர் . தற்போது விவசாயிகளின் விளைச்சலின் அறுவடையும் உரிய விதத்தில் இடம் பெறத் தொடங்கியுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்ட முறையில் அரசினாலும் ஏனைய உயர் அதிகாரிகளினாலும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் அழைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட உருளைக் கிழங்கை சதொச நிறுவனம் கொள்வனவு செய்யும் எனக் கூறிக் கலந்துரையாடல் இடம்பெற்று விலை நிர்ணயம் செய்யப்பட்டதுடன், கொள்வனவுத் திகதியும் குறிப்பிடப் பட்டிருந்தது. இவை யாவுமே திட்டமிட்ட அடிப்படையில் நடைபெற்று முடிந்தன.

சதொச நிறுவனம் யாழ் மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் உருளைக்கிழங்கை விவசாயிகளின் தோட்டங்களுக்குச் சென்று எந்தவிதமான கழிவுகளும் இன்றி ஒரு கிலோ 70 ரூபா வீதம் கொள்வனவு செய்யும் என்றும் கொள்வனவு செய்யும் உருளைக்கிழங்குக்கான பெறுமதியை உடனடியாக வழங்கும் என்றும், தெரிவிக்கப்பட்டிருந்தது . இந்த நிலையில் இதனை நம்பி உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது உருளைக் கிழங்கை அறுவடை செய்த நிலையில் அதனைக் கொள்வனவு செய்ய சதொச நிறுவனம் வராது பெரும் ஏமாற்றத்துடன் காத்திருக்கத் தொடங்கியுள்ளனர் .

சம்பந்தப்பட்டவர்களுடன் விவசாய அமைப்புக்கள் தொடர்புகளை மேற்கொண்ட போதிலும் உரிய பதில்கள் கூட சரியாகக் கிடைக்கவில்லையென உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் பெரும் கவலையுடன் தெரிவிக்கின்றனர் .

ஜனாதிபதி முதல் விவசாய அமைச்சர் உயர் அதிகாரிகள் எனப் பலரும் விவசாயிகளுக்குஅளித்த வாக்குறுதியை நம்பி உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவென்று தெரியாது கேள்விக் குறியுடன் திண்டாடு கின்றார்கள். காலநிலைப் பாதிப்புகளுக்கும் கடன் தொல்லைகளுக்கும் இடையில் தத்தளிக்கும் விவசாயி களுக்கு மனநிறைவைத் தந்த உருளைக்கிழங்குச் செய்கையின் வெற்றி இப்போது பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கின்றது. உருளைக் கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளின் ஆதங்கத்தை, ஏமாற்றத்தைப் போக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கையை எடுப்பார்களா என்பதே இன்றைய கேள்வியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உதவி கேட்டு வருபவர்களுக்கு உங்களாலானவற்றைச் செய்து கொடுப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். வியாபாரத்தில் புது வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.



**இடபம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்துக் கொள்வீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்பை ஏற்பீர்கள்.



**மிதுனம்:** தடைகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் புதிய பங்குதாரரைச் சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.



**கடகம்:** மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உறவினர், நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.



**சிங்கம்:** சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.



**கன்னி:** முன்கோபத்தைக் குறையுங்கள். எளிதாக முடிக்க வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும். திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் வெற்றி பெறுவீர்கள்.



**துலாம்:** முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் நிதானித்துச் செயற்படுங்கள்.



**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.



**தனுசு:** எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.



**மகரம்:** கடந்த கால சுகமான அனுபவங்களெல்லாம் மனதில் நிழலாடும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.



**கும்பம்:** திட்டமிடாத செலவுகளும் பயணங்களும் குறுக்கிட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். செய்நன்றி மறந்த மனிதர்களை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்ப்புகள் அடங்கும்.



**மீனம்:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். எதிலும் கவன முடன் செயற்படுங்கள்.

## நாளை

**தை-12 சனிக்கிழமை | 25.01.2014**

திதி: நவமி பி.ப.04.42 வரை
நட்சத்திரம்: விசாகம்
மு.இ.11.45 வரை

சுபநேரம்: 03.36-05.06 வரை
இராகுகாலம்:09.36-11.06 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### குருவின் தேவை

ஒவ்வோர் ஆன்மாவும் முழு நிறைவை, பரிபூரணத்தை அடைய வேண்டும் என்பதே அதற்கு விதிக்கப்பட்ட நியதியாகும். ஒவ்வொரு மனிதனும் முடிவில் பரிபூரண நிலையை , முழு நிறைவை அடைந்து விடுகிறான். இப்போது எமக்கு அமைந்துள்ள வாழ்க்கை முந்தைய பிறவிகளில் நாம் செய்த செயல்களின் பயனாக, நாம் நினைத்த நினைப்புக்களின் பயனாக வந்ததாகும். அது போன்றே இனிமேல் வரப் போவதும், நாம் இந்தப் பிறவியில் செய்யும் செயல்களுக்கும், சிந்திக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்ப அமையும். இவ்வாறு நாமே நமது விதியை நிர்ணயித்துக் கொள்கிறோம். நமது விதிக்கு நாமே காரணமாக இருக்கிறோம் என்பதால் புற உதவி ஏதேனும் நமக்குக் கிடைப்பதாக இருந்தால் அதை நாம் ஒதுக்கித் தள்ளக் கூடாது. அது மட்டுமல்ல, பெரும்பான்மையான மக்களுக்கு இத்தகைய உதவி இன்றியமையாது தேவைப்படுகிறது. இந்த உதவியின் பயனாக, ஆன்மாவின் உயரிய ஆற்றல்களும் காரியங்களை சாதிக்கும் திறனும் ஒருவரிடம் கிளர்ந்தெழுகின்றன. ஆன்மிக விழிப்பு உண்டாகிறது. வளர்ச்சி வலுக்கிறது. முடிவில் மனிதன் தெய்வீகம் வாய்ந்தவனாக, நிறைவுற்றவனாக, பரிபூரணனாக ஆகிவிடுகிறான்.

விரைவில் செயற்படுத்தக் கூடிய இத் தூண்டுதலை நூல்களைக் கற்றுப் பெற இயலாது. ஓர் ஆன்மாவிடமிருந்துதான் மற்றோர் ஆன்மா இதைப் பெறமுடியுமே தவிர வேறு எதனிடமிருந்தும் பெற முடியாது. வாழ்நாள் முழுவதும் நூல்களைக் கற்கலாம்; மகா மேதைகளாக விளங்கலாம். ஆனால் முடிவில் நாம் உணர்வதெல்லாம், இறை வாழ்க்கை யில் நாம் ஒரு துளி கூட முன்னேற வில்லை என்பதைத்தான். மிக உன் னத அறிவாற்றல் வளர வளர , கூடவே ஆன்மிக வாழ்க்கையும் உயருகிறது என்று கூறுவதெல்லாம் உண்மையல்ல. நூல்களைக் கரைத்துக் குடிப்பதன் காரணமாக ஆன்மிக வாழ்விலும் முன்னேறியிருக்கிறோம் என்பதாக ஒரு பிரமை, தடுமாற்றம் சில சமயம் நமக்கு ஏற்படுகிறது. ஆனால். நூல்களைக் கற்பதால் வரும் பயன் என்ன என்று அலசிப் பார்ப்போமேயானால், அந்தக் கற்றறிவு முடிந்த வரையில் நமது மூளையைத் தான் ஓரளவுக்குக் கூர்மையாக்கியி ருக்கிறதே தவிர தமது ஆன்மிகத் துக்கு எந்த லாபத்தையும், வளர்ச்சி யையும் தரவில்லை என்பதை நன்கு அறிய முடியும். இதற்குக் காரணம் நூலறிவின் இயலாமையேயாகும்.

## தொடர்ச்சியாக ரீ.வி பார்த்து கின்னஸ் சாதனை

அமெரிக்காவில் தொடர்ச்சியாக தொலைக்காட்சி பார்த்து கின்னஸ் சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.



அமெரிக்க நெவாடாவின் லாஸ்வேகாஸ் மாநாட்டு மையத்தில் டான் ஜோர்டன், ஸ்பென்சர் லார்சன், கிரிஸ் லாப்லின் என்ற மூன்று பேர் கின்னஸ் சாதனைக்காக நீண்ட நாள்கள் தொடர்ந்து ரீ.வி பார்க்கும் போட்டியில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியானது நேரடி தொலைக்காட்சிகளாகவும் ஒளிபரப்பப்பட்டது.

கின்னஸ் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒரு மணிநேரத்துக்கு ஐந்து நிமிடங்கள் என ஓய்வு அளிக்கப்பட்டது. இதில் அவர்கள் பாத்ரூம் செல்வதற்காக அந்த நேரத்தை எடுத்துக் கொண்டனர்.

ரீவி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது அலைவரிசைகளை மாற்றிக்கொள்ளவும் சாப்பிட மற்றும் குளிர்பானங்கள் அருந்த மட்டும் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மூன்று பேரும் தொடர்ந்து 5 நாள்களில் 87 மணித்தியாலம் தூங்காமல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தனர்.

இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே அமெரிக்காவைச் சேர்ந்த கோரின் ஷரீவ்ஸ் மற்றும் ஜெரமியா பிராங்கோ என்ற இருவர் தொடர்ந்து 86 மணிநேரம் 37 நிமிடங்கள் தொலைக்காட்சி பார்த்ததே முன்னர் கின்னஸ் சாதனையாக இருந்தது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 9 | 4 | | 6 | 8 | 2 | |
| | | | 5 | | | 1 | 6 | |
| | | | | 7 | 8 | 5 | | |
| | | 8 | | 2 | 7 | | | 5 |
| 2 | | | | 9 | | | | 1 |
| 3 | | | 1 | 4 | | 6 | | |
| | | 1 | 7 | 6 | | | | |
| | 8 | 4 | | | 2 | | | |
| | 2 | 5 | 3 | | 1 | 7 | | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 3 | 4 | 5 | 7 | 2 | 9 | 8 |
| 4 | 5 | 8 | 6 | 2 | 9 | 1 | 7 | 3 |
| 2 | 7 | 9 | 3 | 8 | 1 | 5 | 6 | 4 |
| 5 | 9 | 4 | 2 | 6 | 3 | 7 | 8 | 1 |
| 8 | 3 | 2 | 7 | 1 | 4 | 9 | 5 | 6 |
| 7 | 6 | 1 | 8 | 9 | 5 | 3 | 4 | 2 |
| 9 | 2 | 6 | 5 | 3 | 8 | 4 | 1 | 7 |
| 1 | 8 | 7 | 9 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 3 | 4 | 5 | 1 | 7 | 6 | 8 | 2 | 9 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் 'எஸ்-5'

சாம்சுங் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள "கலக்ஸி எஸ்-5" ஸ்மார்ட் கைப்பேசிகள் தொடர்பான மேலும் சில தகவல்கள் கசிந்துள்ளன. இந்தக் கைப்பேசி தொடர்பாக வெளியாகும் தகவல்கள் பாவனையாளர்களிடையே பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. அடுத்த மாதமளவில் அந்தக் கைப்பேசி பாவனைக்கு விடப்படவுள்ளது என்றும் அவற்றில் 20MP கொண்ட அதி துல்லியமான கமரா உள்ளடக்கப்பட்டிருக்கும் எனவும் கூறப்படுகின்றது. இவற்றுடன் QHD எனும் நவீன தொழில்நுட்பதினைக் கொண்ட திரையையும் 2,900 mAh மின்கலத்தினை உள்ளடக்கியதாகவும் அது பாவனைக்கு விடப்படவுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# உடல் ஆரோக்கியத்தை பேண கூகுளின் சாதனம்



உடல் ஆரோக்கியத்தைப் பேணும் பல்வேறு இலத்திரனியல் சாதனங்கள் நாள்தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் கூகுள் நிறுவனமும் இந்தச் சாதன உருவாக்கத்தில் பங்கெடுக்க ஆரம்பித்துள்ளது.
தனது அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட உடல் ஆரோக்கியத்தைப் பேணும் API (Application Programming Interface) என்ற சாதனத்தை வடிவமைத்துள்ளது கூகுள்.
இந்த வருடத்தின் அற்புதமான தொழில்நுட்பத்தினை உள்ளடக்கிய இலத்திரனியல் சாதனமாகக் கருதப்படும் இச்சாதனத்தை அன்ரோயிட் ஸ்மார்ட் கைப்பேசிகளின் உதவியுடன் பயன்படுத்த முடியும் என்று கூறப்படுகின்றது.


## குறைந்த சக்தியில் ஒளிரும் மின்குமிழ்

தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஏற்படும் புரட்சியில் தற்போது குறைந்த மின் சக்தியை நுகரும் மின்குமிழ்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. Plumen 002 எனப்படும் இந்த மின்குமிழை Plumen 001 மின்குமிழை தயாரித்த குழுவே தயாரித்துள்ளது. இம்மின்குமிழ்கள் 30W வலுவுடைய மின்குமிழை விடவும் 25 சதவீதமான சக்தியை சேமிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது


# இன்ரெல் நிறுவனத்தின் அதிரடி நடவடிக்கை




மைக்ரோ புரோசசர், மைக்ரோ சிப்ஸ் போன்றவற்றினை உருவாக்குவதில் பிரபல்யம் வாய்ந்த நிறுவனம் இன்ரெல். அந்த நிறுவனம் தற்போது தனது பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவுள்ளதாக அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.
எதிர்வரும் ஆண்டுக்குள் தனது பணியாளர்களில் 5,380 பேரை குறைக்கவுள்ளோம் என்று தெரிவித்துள்ள அந்த நிறுவனத்தின் பேச்சாளர், "சுயமாக பணியில் இருந்து விலக விரும்புபவர்களுடன் மேலும் சில பணியாளர்களே பணிநீக்கம் செய்யப்படவுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.
உலகெங்கும் கிளைகள் கொண்டுள்ள இன்ரெல் நிறுவனத்தில் சுமார் 107,600 பணியாளர்கள் பணி புரிகின்றனராம்.




ஐபோனை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் துணைச்சாதனங்களின் வரிசையில் Star Wars Lightsaber என்ற சாதனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
ஸ்டார் வார் ரசிகர்களைக் கவரும் விதத்தில் உருவாக்கப்பட்ட இச்சாதனத்தை பயன்படுத்தி ஐபோன்களை மின்னேற்றம் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. USB இணைப்பானைக் கொண்டுள்ள இந்த சார்ஜரிலிருந்து 2,800 mAh மின்கலங்களை மின்னேற்றம் செய்ய முடியும். மேலும் சுவாரஸ்ய நோக்கம் கருதி ஸிசிம் மின்குமிழ் ஒன்றும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.



# குமிழ் கடிகாரம்

இலத்திரனியல் உலகில் தற்போது ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் பேசுபொருளாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.
இந்நிலையில் நவீன தொழில்நுட்பம் ஒன்றினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குமிழ் வடிவ கடிகாரங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. Blub Tube Clock என அழைக்கப்படும் இவை மின்குமிழ் ஒளிர்வதன் மூலம் நேரத்தை அறியத்தருகின்றன.
கண்கவர் வடிவத்தில் காணப்படும் இக்கடிகாரத்தின் மூலம் 12 மணித்தியால முறையிலும் 24 மணித்தியால முறையிலும் நேரங்களை அறிந்து கொள்ள முடியும்.




# மைக்ரோசொப்ட்டின் திடீர் அறிவிப்பால் திண்டாடும் வங்கிகள்




மைக்ரோ சொப்ட் நிறுவனம் தனது Windows XP இயங்கு தளத்திற்கான உத்தரவாதத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்தவுள்ளதாக அறிவித்திருந்துள்ளமை தெரிந்ததே. எனினும் தற்போது உலகெங்கிலும் அதிகளவான கணினிகள் Windows XP இயங்கு தளத்தில் இன்னும் இயங்கிக் கொண்டிருப்பதனால் அந்நிறுவனம் இக்கால எல்லையை 2015ஆம் ஆண்டு வரை நீடித்துள்ளது.
மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இந்த முடிவால் அதிகம் பாதிக்கப்படவுள்ளவை வங்கிகளே. ஏனெனில் தற்போது வெளியான ஓர் அறிக்கையின்படி உலகெங்கிலும் உள்ள வங்கி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படும் 95 சதவீதமான பண இயந்திரங்களில் Windows XP இயங்குதளமே பயன்படுத்தப்பட்டு வருவது அறியப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் மட்டும் 420,000 இற்கும் மேற்பட்ட இயந்திரங்கள் இவ்வியங்கு தளத்தினைக் கொண்டுள்ளன. அதனால் அவற்றை உடனடியாக மாற்றியமைக்க வேண்டிய இக்கட்டான நிலை வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அதேவேளை 15 சதவீதமான பண இயந்திரங்களில் தற்போது Windows 7 நிறுவப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## கடந்த ஆண்டின் மோசமான கடவுச்சொல்



இணையத்தளங்களில் பயன்படுத்தப்படும் கடவுச்சொற்கள் மிக உறுதியாக இருக்க வேண்டும் என்று பல்வேறு நிறுவனங்களும் பல தடைவைகள் அறிவுறித்தியுள்ளன.
எனினும் இன்றும் மில்லியன் கணக்கான பயனாளர்கள் வலிமை குறைந்த கடவுச்சொற்களையே பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி கடந்த வருடம் பயன்படுத்தப்பட்ட கடவுச்சொற்களில் மிகவும் மோசமான கடவுச்சொல்லாக 123456 காணப்படுகின்றது.
2012ஆம் ஆண்டின் மோசமான கடவுச்சொல்லாக password என்ற சொல் இடம்பிடித்திருந்தது. இதேவேளை அடோப் நிறுவனத்தில் கணக்கு வைத்திருக்கும் 130 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களில் 2 மில்லியன் வரையானவர்கள் adobe123, photoshop போன்ற கடவுச்சொற்களையே பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை SplashData என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வன்மைப் போட்டி

வவுனியா, ஜன.24
வவுனியா கற்பகபுரம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பாடசாலை அதிபர் வேத நாதன் தலைமையில் இடம்பெற வுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன் ரன் சோமராஜா, சிறப்பு விருந்தி னராக வவுனியா தெற்கு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.சுபைர், ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஆசிரிய ஆலோசகர்கள் கி.யூட் பரதமாறன், செ.விஜயகாந்தன், மருத்துவர் எஸ்.ராமச்சந்திரன், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய ஆசிரியர் ஸ்ரீகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி யின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ளது.
அதிபர் எம்.மகேந்திரன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வும் அவரது பாரியார் சித்திரா குருகுலராஜாவும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினராக யாழ்.வலய உடற்கல்வி கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் கலந்துகொள்வார். (ந)

## அன்னதான மண்டபத்தில் படிப்பகமும், வகுப்புகளும்

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னதான மண்டபத் தில் படிப்பகமும் மாலை நேர வகுப்புகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் குடும்பத் தினரால் அமைத்து வழங்கப்பட்ட அன்னதான மண்டபத் தில் உள்ள அறையொன்றில் 'பண்டிதர் படிப்பகம்' என்னும் பெயரில் தினமும் தினசரி நாளிதழ்கள் வைக்கப்படுகின்றன. அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு மாலைநேர வகுப்புகளும் மண்டபத்தில் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

**பெயர்மாற்றம்**

கைதடி நுணாவிலைச் சேர்ந்த
திருமதி கிறிஸ்டபெல் நிதர்சன்
என்னும் எனது பெயரை இன்றிலிருந்து
(24.01.2014) திருமதி சுதா நிதர்சன் என
பெயர்மாற்றம் செய்து கையொப்பம் இடுவேன் என
அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
**நி.சுதா**

## மீட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன.24
நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I இற்கான பரீட்சைகள் எதிர் வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடை பெற இருப்பதனால், இந்தப் பரீட்சைக்குரிய மீட்டல் வகுப் புக்கள் இலங்கை நூலகச் சங் கத்தின் யாழ்ப்பாண நிலையத் தினால் நாளை சனியும் மறு நாள் ஞாயிறும் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடத்தப்படவுள்ளன. இந்தப் பரீட்சைக்குத் தோற் றவிருக்கும் அனைத்து மாணவர்களும் இதில் பங்குபற்றலாம் என்று இலங்கை நூலகச் சங்கம் அறிவித்துள்ளது. (ஓ)

**வைத்திய அதிகாரி தேவை**

கோண்டாவில் கிழக்கில் அமையப்பெற்றுள்ள
**'தாயகம்'** மருத்துவமனைக்கு
ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி (Retired medical officer - MBBS) **தேவை.**
தொடர்பு: 077 663 1021

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல்வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)
5. தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பான ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா (100/=) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **"செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா.** என்ற முகவரிக்கு 07.02.2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
4. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்ற வரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னராகவோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

**பதவிகள் பற்றிய விவரம்**

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 01 | காரியாலய காரியா சகாயர் - தரம் III |
| 02 | நூலக பரிசாரகர் - தரம் III |
| 03 | வீதித்தொழிலாளி - தரம் III |
| 04 | சுகாதாரத் தொழிலாளி - தரம் III |
| 05 | இயந்திர இயக்குநர் - தரம் III |
| 06 | மயானத் தொழிலாளி – தரம III |

சம்பள அளவுத்திட்டம் - PL – 1-2006A(11730-10×120-10×130-10×145-12×160-17600)
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை**

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திற மைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து(5) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு – மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகளுடன் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் தரம் 8 சித்தி கவனத்தில் கொள்ளப்படும்.**

| பதவி இல | பதவிகள் |
|---|---|
| 07 | ஆயுள்வேத மருந்தாளர் - தரம் III |
| 08 | மின்னிணைப்பாளர் - தரம் III |

சம்பள அளவுத்திட்டம் - PL – 2-2006A(12210-10×130-10×145-10×160-12×170-18600)
அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப [illegible] யாத வகையில் அங்கீகரிக்கப்பட்டதொழில்சார் கல்வி நிறுவனத்திலிருந்து துறைசார்ந்த பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

(C/11551)(2.6.3) **- செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது நிலையத்தின்
முன்னாள் தலைவரும், சிறந்த சமூக
சேவையாளருமான ஓய்வுநிலை
பிராந்திய தபால் அத்தியட்சகர்
**அம்பலவாணர் துரைசிங்கம்**
அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்று
கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி
றிஸ்மி சிங்கப்புலி முன்னிலையில் சத்தியப்பிரமாணம்
செய்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன்,
அவர் தொடர்ந்து பல்லாண்டு காலம் சமூக சேவையாற்ற
இறையருள் கிடைக்க வேண்டுமெனப்
பிரார்த்திக்கின்றோம்.
Congratulations
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சனசமூக நிலைய அங்கத்தவர்கள்
தம்பசிட்டி, பருத்தித்துறை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2014.01.10இல்
நடைபெற்ற
29ஆவது பட்டமளிப்புவிழாவில்
முதுகலைமாணிப் பட்டம் பெற்ற
MASTER OF ARTS (M.A)
**நி. ஜெகானந்தசர்மா** அவர்கள்
(ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்)
கல்வித்துறையிலும், தொழில்துறையிலும்
மேன்மேலும் சிறப்புகள் பெற்று உயர்ந்திடவும்,
மேன்மைமிகு நல்வாழ்வினைப் பெற்றிடவும்
வாழ்க! வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்கள்:
சி.தனேஸ்வரலிங்கம்,
திருமதி யோகராணி தனேஸ்வரலிங்கம்
(குடும்பத்தினர்), செல்வி நா.விஜயராணி
செல்வி ஜெயராணி நாகலிங்கம் (அதிபர்)
யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்
சித்தன்கேணி.
தேவாலய வீதி, சங்கானை.
(45881)(7.6.3)




सत्यमेव जयते
**CONSULATE GENERAL OF INDIA JAFFNA**

INVITATION FOR 64th ANNIVERSARY OF INDIA'S REPUBLIC DAY IN JAFFNA

Consul General of India, Jaffna shall be holding a Flag Hoisting ceremony on the occasion of 64th Anniversary of India's Republic Day at the Consulate General of India, Jaffna's premises at 14, Maruthady Lane, Nallur, Jaffna beteween 9.00AM to 10.00 AM on Sunday, 26th January 2014 Indian National flag will be unfurled at 9.00AM.

All Indian nationals are welcome to attend. Only Indian nationals holding some identity document shall be allowed entry into the premises.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படவரைஞரின் வருமானத்தில் பத்து வீதம் பிரதேச சபைக்கு

வலி. தென்மேற்கு.ஜன.24

வலி. தென்மேற்கு பிரதேச சபையில் பட வரைஞராக பதிவு செய்பவர்கள் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தை பிரதேச சபைக்கு வழங்க வேண்டும். இந்த நடைமுறை 2014 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.


பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர் எஸ்.ஜே.செல்வராஜா இதுபற்றிச் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தேன்மேற்குப் பிரதேச சபையின் சிறப்புக் கூட்டம் உறுப்பினர் கே.கௌரிகாந்தன் தலைமையில் சபை மண்டபத்தில் நடை பெற்ற போது பட வரை செய்வது சம்பந்தமாக ஆராயப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் கட்டடம் அமைப்பதற்கு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட படவரைஞர்களினால் தயாரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களைப் பிரதேச சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தப் படங்கள் வரைவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தை படவரைஞர்கள் பிரதேச சபைக்கு வழங்க வேண்டும். இந்த நடை முறை ஏனைய சபைகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய உறுப்பினர் எஸ்.ஜே. செல்வராஜா, வலி.தென்மேற்கு பிரதேச சபை யும் ஏனைய சபை களைப் போல் 10 வீதத்தை அறவிட வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஓ-115)

# ஆஸ்திரேலியப் பிரதிநிதிகள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

## தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய்வு



திருகோணமலை.ஜன.24

இலங்கைக்கு வருகை தந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

திருகோணமலையிலுள்ள ஆளு நரின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரான கடந்த 5 வருடங்களில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட் டுள்ள பொருளாதாரம், கல்வி, சுகாதார, விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்திகள் தொடர்பில் ஆளுநர் ஆஸ்தி ரேலிய பிரதிநிதிகளுக்கு விளக்கி உள்ளார்.

போருக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் அரசு மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் அரசுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

போருக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்ள இந்த வருகை தமக்கு உதவியுள்ளது என்று ஆஸ்திரேலிய பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச)

# ரூ. 5,000 அபராதம்



அம்பாறை.ஜன.24

அம்பாறை தமண பிரதேசத்தில் சட்டவிரோதமாக உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவருக்கு அபராதமாக 5 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறும் அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி செல்வி எம்.எஸ். பிரிங்கி நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார்.

தமண பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து திம்பிரிக்கொல்ல பிரதேசத்தில் வீடு ஒன்றில் மறைத்து வைத்திருந்த போது சம்பவதினமான செவ்வாய்க்கிழமை மாலை குறித்த வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்ட வேளை மறைத்து வைத்திருந்த உள்ளூர் தயாரிப்பான துப்பாக்கி கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நேற்று முன்தினம் புதன்கிழமை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போது அவருக்கு 5ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிபதி தீர்ப்பளித்தார். (ச)

## கலகம் அடக்கும் பொலிஸாருக்கு ஆர்ப்பாட்டத் தடுப்பு வாகனங்கள்

கொழும்பு.ஜன.24

கலகம் அடக்கும் பொலிஸாருக்கு. ஆர்ப்பாட்ட தடுப்பு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் இவை பயன்பாட்டில் இருக்கும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதைத் தடையைச் சரி செய்வது உள்ளிட்ட தேவைகளுக்காகவே இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ச)

# இடமாற்றச் சபையை அமைக்கத் தீர்மானம்

கொழும்பு.ஜன24

சகல தேசிய பாடசாலைகளுக்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பில் ஆசிரியர் இடமாற்றச் சபை ஒன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலர் அநுர திசாநாயக்க. தேசிய பாடசாலை அத்தியட்சகர் ரஞ்ஜித் சந்திரசேகர ஆகியோருக்கும் ஆசிரியர் சங்கத்துக்கும் இடையே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரை யாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"-"

**கடந்த காலத்தில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பில் ஆசி ரியர் இடமாற்றசபை கவனம் செலுத்தவுள்ளது.**

தெவிநுவர, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தேசிய பாடசாலைகளில் 10 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியதாக குறிப்பிட்டு இடமாற்றம் பெற்றமைக்கு ஆசிரியர் சங்கம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கமைய கல்வி அமைச்சின் செயலரினால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பில் ஆசிரியர் இடமாற்றசபை கவனம் செலுத்தவுள்ளது. (ச)

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
29ம் ஆண்டில்
யாழ். கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

துரித 3 மாத கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

❊ **கேக் ஐசிங் வடிவமைப்புகளும் உணவு தயாரித்தலும்** : பட்டர், றோயல், Parchment, Frosting, Fondant, Water Icing வகைகள். Sugar Flowers. மற்றும் பலவகையான உணவுகள், 6 வகையான கேக், பீஸா (Pizza), சிற்றுண்டிகள், சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மற்றும் பல.

❊ **கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்** : 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல் (Hair Straightening) Re- Bonding, முடி சுருட்டுதல்,Perming, முடி நிறமூட்டுதல் (Hair Colouring), பலவிதமான முடி வெட்டுதல்கள், Oil Massage.



❊ **FACIALS** (முக அழகுக்கலை) பல வகை.

❊ கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure) nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), Waxing, தமக்குத்தாமே FACIAL செய்தல்.

❊ **BRIDAL DRESSINGS:** இந்து, கிறிஸ்தவ,இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் **Modern,** கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி. மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறையும் பயிற்றுவிக்கப்படும்.

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

❊(B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார். தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.



**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-01-2014**
**புதன் காலை 9.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 01-02-2014**
**சனி காலை 9.00 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
-இயக்குநர்-

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் மட்டக்களப்பு தமிழருக்கு தூக்கு

மட்டக்களப்பு.ஜன.24

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேசத்தைச் சேர்ந்த ரவீந்திரன் கிருஷ்ணபிள்ளை (வயது-32) என்பவருக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் நேற்றுமுன்தினம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சார்ஜா நகரில் வைத்து ரவீந்திரன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அந்தநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு ஒருவரை வாகனத்தால் மோதிக் கொன்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டி ருந்தது.

இறுதி நேரத்தில் தனது தம்பியை மீட்க, குறித்த நாட்டுக்குச் சென்ற அவரது சகோதரியின் முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

அதேவேளை, இலங்கை நபர் ரவீந்திரன் கிருஷ்ணபிள்ளைக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்ற முன்னர், ஐக்கிய அரபு இராச்சியத்தால் தமக்கு அறிவிக்கப்பட் டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

"-"

**2006 ஆம் ஆண்டு ஒருவரை வாகனத் தால் மோதிக் கொன்ற தாக அவர் மீது குற் றஞ்சாட் டப்பட்டி ருந்தது.**

தூக்குத் தண்டனையை நிறைவேற்ற முன்னர். குறித்த இளைஞரின் உறவினர்கள், அவரைச் சந்திக்க ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவிப் பொது முகாமையாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டார்.

இந்தநிலையில், ரவீந்திரனுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வன்மையாகக் கண்டித்துள்ளார். (ச)

## மரண அறிவித்தல்



திருமதி
**மகேஸ்வரி பரராசசிங்கம்**

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், பத்தமேனியை புகுந்த இடமாகவும் தற்போது வற்றாப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பரராசசிங்கம் நேற்று முன்தினம் (22.1.2014) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-அன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி-குட்டிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பரராசசிங்கத்தின் மனைவியும், பத்மினி (மலர்), காலஞ்சென்ற பிறைசூடி மற்றும் ரஜனி (சின்னக்கிளி-Canada), வனஜா (வதனி-Canada) ஆகியோரின் அன்புத் தாயும், பாலசிங்கம், பத்மபாஸ்கரன் (அப்பன்-Canada) ஆகியோரின் மாமியும், புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரி, ராஜேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி (Canada), பஞ்சநாதன் (Canada) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ரேவதியம்மா மற்றும் இராசமணி (Canada), இராஜேஸ்வரி, தம்பிநாதர், காலஞ்சென்ற சிவலோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், லக்ஷா (இந்தியா), கோஜிதன், அபிராமி (Canada), ஆரதி (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேதீஸ்வரன் (Londan) கஜேந்திரன், தவரூபன் (German) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணபதிப்பிள்ளை பாலசிங்கம்,
வற்றாப்பளை, முள்ளியவளை,
முல்லைத்தீவு.
T.P: 077 5226 552

(42194) (10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகற்றப்பட்டது சோதனைச் சாவடி

தென்மராட்சி, ஜன.24
மிருசுவில் சந்தையில் இயங்கி வந்த இராணுவப் பொலிஸாரின் சோதனைச் சாவடி அங்கிருந்து விலக்கப்பட்டுள்ளது.
இராணுவப் பொலிஸார், படையினர், கொடிகாமம் பொலிஸார் ஆகியோரால் பத்து வருடங்களுக்கு மேலாக சோதனைச் சாவடியாக இயங்கி, ஏ-9 வீதியில் வரும் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதுடன், பொலிஸாரால் ஏனைய வாகனங்கள் பரிசோதனைகளும் நடத்தப்பட்டு வந்தன.
பொலிஸாரின் பரிசோதனைகளால் வாகனங்களில் சட்ட விரோதமாகக் கொண்டு வரப்பட்ட காட்டு மரங்கள், அனுமதியின்றி கொண்டு வரப்படும் மணல் உட்பட்ட பல பொருள்கள் பொலிஸாரிடம் அகப்பட்டதால் இவ்வாறான சட்ட விரோத செயல்கள் குறைந்திருந்தன. தற்போது இந்தச் சோதனைச் சாவடி விலக்கப்பட்டதால் சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ந-9)

# பெண்கள் சாரணீய வருடாந்த பாசறை

யாழ்ப்பாணம், ஜன.24
வடமாகாண பெண்கள் சாரணீய வழிகாட்டுநர்களுக்கான வருடாந்தப் பாசறை நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் நடைபெறும்.
பெண்கள் சாரணீய வழிகாட்டுநர்கள் அனைவரையும் இன்று மாலை 4 மணிக்கு முன்னர் வருகை தருமாறு மாகாண பெண்கள் சாரணீய ஆணையாளர் திருமதி றூபா வசந்தகுமார் அறிவித்துள்ளார் (ஓ-9)

# தமிழின அழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணை அவசியம்

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புத் தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பிரிட்டன் வாழ் தமிழ் மக்கள் கோரிக்கை மனுவொன்றைக் கையளிக்கவுள்ளனர். அந்த மனுவில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது.
கடந்த நவம்பர் மாதம் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் தமிழர்களின் தாயகத்துக்கு வருகை தந்தபோது கடுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள வடபகுதிக்கும் சென்று அங்கு பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் தமிழ் மக்களைப் பார்வையிட்டார்.
இதனையடுத்து போர்க்குற்றம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக இலங்கை மீது சுதந்திரமான சர்வதேசவிசாரணை இடம்பெற வேண்டுமென கருத்து வெளியிட்டார்.
மேலும் இந்த ஆண்டு மார்ச் மாதத்தினுள் இவை தொடர்பாக நீதியான விசாரணைகள் இலங்கையில் இடம்பெற்று முடிவுக்கு வராது விட்டால் தமது நாடு முழுமையானதும் சுதந்திரமானது மான சர்வதேச விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடன் இணைந்து பணியாற்ற வேண்டி நேரிடும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.
கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த இறுதிப் போரின் போது 70 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் போர் இடம்பெற்ற கடைசி ஐந்து மாத காலப் பகுதியில் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.
ஆனால் 1 லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் இன்னமும் இந்த எண்ணிக்கையில் அடக்கப்படவில்லை.
மேலும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகவும் சுதந்திரமான சர்வதேச விசாரணை இடம்பெற வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.
தாங்கள் எமது பகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தின்போது ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசு வழங்கிய உறுதி மொழியின் பிரகாரம் சுதந்திரமான சர்வதேச விசாரணையொன்று இடம்பெறுவதை வலியுறுத்த வேண்டும் என அந்தக் கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# ஆவணக் காப்பகம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.24
றெக்கிங்லீவ்ஸ் அமைப்பினால் உருவாக்கப்பட்டு பேணப்படும் சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகம் நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.
இலக்கம் 199, கோயில் வீதியில் திறந்து வைக்கப்படும் இந்த ஆவணக் காப்பகம் யாழ்ப்பாணத்தில் கலை வளர்ச்சிக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இலங்கையின் முன்னணிக் கட்டடக் கலைஞர்களுள் ஒருவரான செல்லத்துரை அஞ்சலேந்திரனின் கருத்துரையுடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-10)

## பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் சங்க அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கச் செயலர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (ந)

★ ★ ★

மிருசுவில் கரம்பகம் கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரம்பகம் அ.த.க. பாடசாலையில் நடைபெறும்.
கரம்பகம் கிராம அலுவலர் (ஜே/336) பிரிவுக்குட்பட்ட அனைத்து மக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ஆ.இ.கபில்ராஜ் அறிவித்துள்ளார். (ந-9)

★★★

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய தலைவர் க.பாலசிங்கம் தலைமையில் சனசமூக நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக நிலையத்தின் செயலாளர் பொ.செல்வராஜா அறிவித்துள்ளார்.
இந்தப் பொதுக் கூட்டத்தில் கல்விக் கழக மாணவர்களின் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட இருப்பதனால் நிலைய அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ஓ-288)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான செ.சிறிஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தந்தை **வ.செல்லத்துரை**
கடந்த 24.12.2013 இறைபதம்அடைந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை. (43887) (12.3.6)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 05.04.1924
இறப்பு 27.12.2013

### அமரர் பொன்னையா சின்னத்தங்கம்

கடந்த (27.12.2013) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் (26.01.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

மருதடிச்சந்தி, முதலாம் மைல் வீதி,
கிராம்புவில், டச்சுறோட், சாவகச்சேரி. 077 444 7672 (33088)(2.6.3)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும்
சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

### சீனி கந்தசாமி

(கந்தசாமி மாஸ்ரர்)



தோற்றம் 31.03.1937
மறைவு 25.12.2013

எமது குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"சிந்து பவனம்"
சிவன் கோயில் வீதி,
சித்தன்கேணி.
குடும்பத்தினா.

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை பொன்னுத்துரை



தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், லவ்லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை பொன்னுத்துரை நேற்றுமுன்தினம் (22.01.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், மனோன்மணியின் பாசமிகு கணவரும், அருந்தவநாதன் (முன்னாள் விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி - கனடா), அருந்தவமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூங்கொடி (கனடா), தேவராசா (கிளி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமலன், தவரூபன் (தயா), ஆனந்தன், கீர்த்தனா (கனடா), வித்தகன் (கனடா), டிலக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும், அலக்சிகாவின் பாசமிகு பூட்டனும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் பராசக்தி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.01.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லவ்லேன், உடுவில்.
0774725301/0779398853 (43891) (12.3-6)
தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதி கிருஸ்ணன்



புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பார்வதி கிருஸ்ணன் நேற்றுமுன்தினம் (22.01.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - சீதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஸ்ணனின் அன்பு மனைவியும், கதிரன், செல்லக்கண்டு, அப்புலிங்கம், பூபதி, இளையபிள்ளை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. தவமணிதேவி (லண்டன்), காலஞ்சென்றவர்களான நேசமணி, ஸ்ரீமதி ஆகியோரின் அன்புத் தாயும், சீவரத்தினம், A.D. சில்வா (வைத்தியர் - லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், Dr. ரெரன்ஸ் மோகன் (லண்டன்), Dr. உப்புள் ஈயன் (நியூசிலாந்து), ஜீவநேசன், சஞ்சீவன், ஜீவிதன், சசிகலா, திருமதி ரெரன்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மேசிகா, ரெவிட்டாமாலினி, செரித்தா லசோக்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.01.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கௌடுதா இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் கிழக்கு,
மனைற்பகுதி, புத்தூர். (43883)(45.6.3)
தகவல்: குடும்பத்தினர்.
077 501 1661

### லோப்பையா மேரி யோசவ்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட லோப்பையா மேரி யோசவ் 21.01.2014 கனடாவில் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான லோப்பையா - மேரி மாகிறற் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப்பிள்ளை - ஆனாப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற லூட்ஸ் அன்ரோனியாவின் அன்புக் கணவரும், யூஜின் சுகுமாரின் (Engineer-UK) அன்புத் தந்தையும், ஷெறினின் மாமாவும், காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் மைக்கல், ஞானம்மா, திரேசா, றோஸ்மேரி, புஷ்பமேரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிலோமினா, இராஜேஸ்வரி, சிறீஸ்கந்தவேள், யேசுதாசன், அன்ரன், செபஸ்ரியன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், லூயிஸ், மேரி திரேசா ஆகியோரின் அன்பு மச்சானும், லேகா (MLT), வதனா, ஜொய்சி (ஆசிரியர்), கிறிஸ்ரி (Accountant), Dr.அன்ரோ ரஜீவ், சிறீகுமார், ஜெயக்குமார், ஜீன், அசோக்குமார், செல்வகுமார், யூடி, எறின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், எமில் அன்ரனி, வேஜின் பியூலா, கிறிஸ்ரி சுகுணானந் Dr. கிறிஸ்ரா நிஷாந்தினி, Dr. அன்று நிஷாந்தன், றெனா, ஜோய், டறன்,நொயல் ஆகியோரின் மாமனும், ஈவோன், ஷனோன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் கனடா (Ontario) இல் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.01.2014) சனிக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Mrs. Mary Theresa,
No.121,Trudelle st,
APT 312, Scarborough,
Ontario, M1J 3K4, Canada.
(43883)(45.6.3)

தகவல்: L.மைக்கல் (சகோதரர் - ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்),
S.அன்ரன் (மைத்துனர் -ஓய்வுபெற்ற அதிபர்),
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்,
தொ.பே. 021 300 8380

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2014
## நகரசபை மன்னார்

01. படவரைஞர்களை பதிவு செய்தல்

2014ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளுகின்றேன். மேலதிக தகவல்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

02. வியாபார உரிம அனுமதிப் பத்திரம் - 2014

மன்னார் நகரசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப் படிவத்தை எமது அலுவலகத்தில் 2014ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்று அதனைப் பூரணப்படுத்தி எமது அலுவலகத்தில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2014இற்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வ துடன் குறித்த திகதிக்குள் வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாதவர் கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

03. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், மதஸ்தலங்கள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் அமைத்தல், புதுப்பித்தல் மற்றும் திருத்த வேலைகள் செய்தலும்.

1987ஆம் ஆண்டின் நகரசபைகள் கட்டளைச் சட்டம் 255, 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும் மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அரச திணைக்களங்கள் அதிகார சபைகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் பொதுமக்கள் தங்களது ஆதனத்தில் புதிய கட்டடங்கள், மதில்கள், மலசல கூடங்கள் அமைக்கும்போது அல்லது பழைய கட்டடங்களின் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் கட்டட அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். உரிய முறையில் அனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாக ஆதன சொந்தக்காரர்கள் மீது குறித்த சட்டத்திற்கமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அனுமதி பெறப்படாது நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து கட்டடங்கள், மதில்களுக்கும் எதிர்வரும் 31.03.2014ஆம் திகதிக்கு முன்னர் முறைப்படியான அனுமதியினை நகரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் அதற்கெதிராக நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

04. ஆதனவரி செலுத்தல்

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்கள் தங்களது ஆதனங்களுக்குரிய ஆதனவரி நிலுவையை நகரசபை அலுவலகத்திலோ அல்லது சபையினால் நியமிக்கப்பட்ட நடுக்கட்டல் உத்தியோகத்தரிடமோ நிலுவையின்றி செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஆதனவரி செலுத்தாதோருக்கு எதிராக நகரசபை கட்டளைச்சட்டம் 255க்கு அமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

05. சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL 2014)

இந்த நகரசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் சிறிய நடுத்தர வியாபார/ தொழில் முயற்சியில் ஈடுபடும் சகலரும் சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். குறித்த அனுமதிப் பத்திரத்தை **20.02.2014**ற்கு முன்னதாக காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2014ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடும் பட்சத்தில் உரியவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன், தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

06. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம்

துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் **2014/03/31**இற்கு முன்னதாக நகரசபை, மன்னார் அலுவலகத்தில் உரிய கட்டணங்களை செலுத்தி 2014ம் ஆண்டிற்கான வாகன, மிருக உரிமங்களை பெற்றுக் கொள்ளவும். குறித்த திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன் வளர்ப்பு பிராணிகளை கட்டி வளர்க்க நடவடிக்கை எடுக்கவும். பொது இடங்களில் காணப்படும் வளர்ப்பு பிராணிகள் சபையால் பிடிக்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படும்.

07. நடைபாதை வியாபாரம்

மன்னார் நகரசபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வது முற்றாக தடைசெய்யப் பட்டுள்ளது. மீறி நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது நகரசபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அப்பொருள்களும் கையகப்படுத்தப்படும்.

08. வாகன தரிப்பிட உரிமம்

முச்சக்கர வண்டிகள், சிற்றூர்திகள், தனியார் பேரூந்துகள், கனரக வாகனங்கள், லான்மாஸ்ரர், கன்ரர்கள், ரிப்பர்கள் என்பன 2014ஆம் ஆண்டு தொடக்கம் தமது தரிப்பிட உரிமங்களை நகரசபையில் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

09. விளம்பரங்களை அமைத்தல், காட்சிப்படுத்துதல்.

மன்னார் நகரசபை நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு/ காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களை **28.02.2014**இற்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப்பலகைகளுக்கு நகரசபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/ நிறுவனங்கள்/ வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 01.03.2014 ஆம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்

கட்டண விவரம் பின்வருமாறு:

| | விவரம் | பிளாஸ்ரிக் (1 ச.அடி) | துணி (01 ச.அடி) |
|---|---|---|---|
| 01 | நகரசபைக்கு சொந்தமான உள்வீதி, தனியார் வளவுகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் பிரசார பலகைகள் | ரூ.50.00 | ரூ.25.00 |
| 02 | பிரதான பாதைக்கு தெரியக் கூடிய விதத்தில் உள்ள இடத்தைப் பயன்படுத்தி பிரதான பாதைக்கு அருகில் தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூ.150.00 | ரூ.50.00 |
| 03 | உள்ளூராட்சி மன்றங்களின் வளங்களைப் பயன்படுத்திய வண்ணம் நிர்மாணிக்கப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள் | ரூ.150.00 | ரூ.50.00 |

01. பொது இடங்களில் கழிவுகள் போடுதலும், சுற்றாடலை மாசுபடுத்தலும்

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருட்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தை பாதிக்கும் என கருத்தில் கொண்டு அவை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் அபிவிருத்தி செய்யப்படாமலும் நீர் தேங்கக்கூடிய பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொது சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறின் நகரசபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

02. குளங்களை பேணுதல்

நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள குளங்களை ஆக்கிரமித்தலும், அவற்றில் குப்பை கொட்டுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. தவறின் நகரசபை கட்டளைச் சட்டம் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

03. வடிகால்களை மாசுபடுத்துதல் :

மழைநீர் வழிந்தோடுவதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகால்களுக்குள் குப்பை கூழங்களை வீசி எறிதல் மற்றும் வீட்டு கழிவு நீரை வெளியேற்றுதல் என்பன முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதுடன், இவ்வாறான சூழல் மாசடைதல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது நகரசபை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு கட்டளைச் சட்டங்களின் கீழ் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு.எஸ்.ஞானப்பிரகாசம்
தவிசாளர்
நகரசபை, மன்னார்.

(C115மன்10.14)

---

### நவாந்துறைப் பகுதி பெண்களுக்கு நாளை சுகாதார கருத்தரங்கு

குருநகர், ஜன. 24

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான பணியகம் நாவாந்துறையில் வசிக்கும் பெண்களுக்கு சுகாதாரப் பழக்க வழக்கங்கள் சம்பந்தமான அறிவுறுத்தல் கருத்தரங்கை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை நடத்தவுள்ளது.

நாவாந்துறையில்உள்ள புனித நீக்கிலாஸ் தேவாலயத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் இந்தப் பகுதியைச் சேர்ந்த 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஓ-51)

### கழிவுப்பொருள்களை தனியான பைகளில் வைக்க அறிவுறுத்து

தென்மராட்சி, ஜன.24

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுப் பொருள்களை வீதி ஓரத்தில் வைப்போர் கண்ணாடிகள், பிளாஸ்ரிக் வகைகள், திண்மக் கழிவுகள் ஆகியவற்றைத் தனித்தனியாக பைகளில் வீதி ஓரங்களில் வைக்குமாறு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை அறிவித்துள்ளார்.

திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகள் விரைவில் நகர சபையால் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(வ-9)

---

**மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்**
**(நாவலர் பாடசாலை அருகில் கோப்பாய்)**

அழகுக்கலை டிப்ளோமா கேக் ஐசிங், தையல் ஹான்ட்வேர்க், சாறிவேக் ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன பயிற்சியில் இணைய விரும்பு வோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

பயிற்சிக்காலம் 3 மாதம்
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
மகளிர் மட்டும்

T.P : 077 9362642 பழைய வீதி, கோப்பாய்

---

**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்**
**(வ - து)**
**கூட்டுறவுக் கிராமியவங்கியின்**
**மீதிகளை உறுதிப்படுத்தல்**

*2014.01.23 ஆம் ஆண்டு திகதி பிரசுரிக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தல் விளம்பரத்தில் தவறுதலாக 01.01.2013 - 31.12.2013 எனத் திகதி குறிப்பிடப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இதனை 01.01.2012 - 31.12.2012 என திருத்தம் செய்யப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்*

பொதுமுகாமையாளர்
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்

---

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**யாழ்ப்பாணம்**

**வருடாந்த பொதுக் கூட்டம் - 2014**

காலம் : 08.02.2014
இடம் : கல்லூரி றொமைன் குக் மண்டபம்
நேரம் : மு.ப. 09.30 மணி

நிகழ்ச்சி நிரல்

- ★ அமைதி வணக்கம்
- ★ போசகர் உரை
- ★ தலைவர் உரை
- ★ கடந்த பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
- ★ செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
- ★ கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல்
- ★ புதிய நிர்வாக சபை தெரிவு
- ★ பிரேரணைகள் (இருப்பின்)
- ★ வேறுவிடயம்
- ★ நன்றியுரை
- ★ கல்லூரி கீதம்

குறிப்பு:
பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 05.02.2014 மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்க கூடியதாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

திரு. என். ஐங்கரன்
செயலாளர்

திரு. என்.இராஜதேவன்
தலைவர்

''மத்தியின் மணிக்கொடிநித்தியம் நிலைக்கும்''

---

**மணிவிழா காணும்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளரை**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




**உயர் திரு**
**கோவிந்தசாமி செல்வராசா**

பிரதிக் கல்விப் பணிப்பாளர் –
கல்வி முகாமைத்துவம் கிளிநொச்சி கல்வி வலயம்)

எமது பாடசாலைகளில் அதிபராகக் கடமைபுரிந்து அயராது உழைத்த பணிப்பாளரைப் பாராட்டி வாழ்த்து வதுடன், அவரது பணி எமது மாவட்டத்திற்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமெனவும், அவர் தமது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் வாழ வேண்டு மெனவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி
கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்
கிளி/கல்வெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம்
கிளி/தருமபுரம் இல:1 அ.த.க. பாடசாலை
பாடசாலைச் சமூகத்தினர்.

[29745] [7.6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் பிரபல்யமான தொழிற்சாலைகளான Tea, Paint, Rubber, கோழி இறைச்சி, Plasticbag, Gaju போன்றவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல் போன்ற பிரிவுகளில் 18-48 வயதுடைய ஆண், பெண் இருபாலாரும் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் 18,000/=, 32,000/= வரையான சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு.

(43111) (10..6) தொடர்பு: 076 6975069

## பணியாளர் தேவை

நிறுவனமொன்றிற்கு கணினியில் கணக்குகள் செய்யக் கூடிய அனுபவமுள்ள ஒருவர் தேவை

தொடர்பு : 077 6729641

## கடைகள் வாடகைக்குண்டு

பருத்தித்துறை நகரின் மத்தியில், பிரதான வீதியில் கடைகள் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 129 8201 (சிவா)
077 756 1341


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி தம்பிராசா

### (ஓய்வு பெற்ற இ.போ.ச. சாரதி)



82/15 பருத்தித்துறை வீதி 3 ஆம் ஒழுங்கை ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும் மின்சாரநிலைய ஒழுங்கை ஓடக்கரை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தம்பிராசா நேற்று (23.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - மாணிக்கம் தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற பாலசுந்தரம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும் சறோஜாவின் (தங்கப்பழம்) அன்புக்கணவரும் சுதாகரன் (அனு) காலஞ்சென்ற தயாபரன் (ருக்கு) மற்றும் சுயாதா (லண்டன்), பிரபாகரன் (பாபு), சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருஞானரூபி, முகிலன் (லண்டன்), நொபிலா, சுரேன் ஆகியோரின் பாசமிகு மாமனும் அபிசன், பாதுசன், மதுசன் (லண்டன்), கிசான் (லண்டன்), வைஷ்ணவி, அஸ்வின், சுகன்ஜன், சாகித்தியன், சுஜானி ஆகியோரின் பாசமிகு பேரனும் நாகேஸ்வரி, கந்தசாமி, மகாலிங்கம் (பட்டு) கமலாதேவி, இராசமணி, தியாகராஜா (சண்டி - லண்டன்), சந்திரராசா (சந்திரா), சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவலிங்கேஸ்வரனின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

மின்சாரநிலைய ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்

## சபாரெட்ணம்சரவணபவன் (கண்ணன்)



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது 69, 2ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சரவணபவன் நேற்று (23.01.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா மற்றும் இலட்சுமி (கனடா) தம்பதியரின் பாசமிகு மருமகனும், நேசம்மா, அன்னலெட்சுமி ஆகியோரின் பெறா மகனும், தங்கேஸ்வரியின் (தங்காள்) பாசமிகு கணவரும், நிலோஜினி (கிளிநொச்சி), சுவஸ்திகா (பிரான்ஸ்), கீர்த்தீபன், டயானா, கிருஷாந் (மாணவன்-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன் (ரவி லேணர்ஸ் -கிளிநொச்சி), அஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் திருப்பரன், திருவிதுரன், கிருபாகரன் (ரகு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பேரம்பலம் (கனடா), காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் மனோராணி (கனடா), பேரின்பநாதன் (ஜேர்மனி), மனோரஞ்சினி (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), குகநாதன் (இந்திரன்- இராஜலெட்சுமி ஹாட்வெயார், யாழ்ப்பாணம்), கோகிலநாதன் (டென்மார்க்), காலஞ் சென்ற கமலநாதன் (கண்ணன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கதிர்காமநாதன் (ஜேர்மனி), பாலசிங்கம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மருமகனும், சந்திராதேவி (கனடா), கனகலிங்கம் (கண்ணையா), அமிர்தலிங்கம் (கனடா), யோகநாயகி (ஜேர்மனி), நல்லையா (வர்த்தகர்-யாழ்ப்பாணம்) முத்துலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரெட் ணேஸ்வரி (விஜி) மற்றும் ரமணி (ரமா), மரியா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**69, 2ஆம் குறுக்குத்தெரு,**
**மணியந்தோட்டம், கொழும்புத்துறை.**
077 4949320,
001 416 9138946 (கனடா)

தகவல்:
**குடும்பத்தினர்.**

(43916)(10.14)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் சுப்பிரமணியம்



உடுவில் பலகாடு காரைநகரைப் பிறப்பிடமாகவும், தற்போது இல.11 வவசற்பிளேஸ் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சுப்பிரமணியம் நேற்று (23.01.2014) வியாழக்கிழமை சிவபதம்அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ராமுகந்தை - செல்லம்மா தம்பதியரின் மகளும் காலஞ் சென்ற கந்தர்முருகேசு - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் சகோதரியும் ஓசியானிக் இம்பெக்ஸ் ஸ்தாபனத்தின் உரிமை யாளர்களாகிய சண்முகநாதன், சோதிநாதன் ஆகியோரின் அன்புத்தாயும் அன்புமலர், அஞ்சலிதேவி ஆகியோரின் அன்புமாமியும் பிரசாத், - சுபத்திரா, பிரதீஸ் (UK), சைலாஜினி - மயூரன், வத்சலா, அபர்ணா - Dr.சசிகுமார், அம்புஜன், மனோஜ்குமார், பவித்திரா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சங்கவி, சயிந்தவி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

சு. சோதிநாதன் (ஓசியானிக் இம்பெக்ஸ்) 190, 192 மெயின் வீதி கொழும்பு - 11

T.P : 011 2503789, 011 2360336, 077 2328682, 077 7769260

# மரண அறிவித்தல்



## வைரமுத்து சண்முகம்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனை வாழ்விடமாகவும் கொண்ட வைரமுத்து சண்முகம் (21.01.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சடாசிவம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூரணத்தின் பாசமிகு கணவரும் திருமதி சிவகாமிப் பிள்ளை, காலஞ்சென்ற மீனாட்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆனந்தர் காலஞ்சென்ற கார்த்திகேசு ஆகியோரின் அன்புமைத்துனரும் காலஞ்சென்ற நாகேஸ்வரன் (நாகராசா) மற்றும் நகுலேஸ்வரி (சரசாலை), நாகேந்திரராணி (கனடா), நகுலேஸ்வரன் (ஜேர்மனி), நந்தினி (தேவி - குமரபுரம்), நந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாரதாதேவி(குமரபுரம்), கந்தசாமி (சரசாலை), கனகசபை (கனடா), மங்களசெளந்தரி (ஜேர்மனி), சேமசேகரம் (கரன் - அஞ்சலர் கண்டாவளை), சுகிர்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனும் சிந்துஜன், விஜுசியன், சுதர்சன், பிரபாகர், சுசித்திரா காலஞ்சென்ற சகிலா மற்றும் கவிதா, சுஜந்தன் காலஞ்சென்ற கார்த்தீபன் மற்றும் யதுசன், நிவேதா, நிருஜா நிரோஜி, தட்சணன், தரணியா, சுகாசன், சுபாகர், சாருஜா ஆகியோரின் அன்புப்பேரனும் நிருபன், லக்ஷா, தர்மியா, வியாஷிக் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (24.01.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரபுரம், பரந்தன்

தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி குணரட்ணம்



வேலணையைப் பிறப்பிட மாகவும் கிளிநொச்சி 154ஆம் கட்டை, இந்துபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி குணரட்ணம் நேற்று முன்தினம் (22.01.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், புங்குடுதீவு மடத்துவெளி 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் இராஜேஸ்வரன், யோகேஸ்வரன் (அப்பன்), குணபூஷணி, ஜெகதீஸ்வரன் (ஈசன்), குமுதாதேவி, புவனேஸ்வரன் (ராசன்), கமலேஸ்வரன் (குகன்), குணாநிதி, சதீஸ்வரன் (சதீஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், றஞ்சி தமலர், குகனேஸ்வரி, யோகராணி, சத்தியவேல் நாதன் (ஆனந்தன்) மதிவதனி, சுரேஸ்குமார் (சபா) விமலாலெட்சுமி (தயா), அஞ்சனா, இராஜசேகர் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாரதிபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(29747)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாருடனும்

அமர்வுகளின்போது யாருடனும் பேசக்கூடாது என்ற நிபந்தனையுடன் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள வடமாகாண சபை அமர்வில் கமல் கலந்துகொள்வார் என்று தெரிகிறது.

றெக்ஷயன் கொலை வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கந்தசாமி கமலேந்திரன், அவரது உதவியாளர் லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவி அனித்தா ஆகியோர் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கமல் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி சர்மினி விக்னேஸ்வரன், வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலும் உறுப்பினர் பதவியிலும் உள்ள கமலை வடமாகாண சபை அமர்வில் பங்கேற்க நீதிமன்று அனு மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மூன்றாவது தடவையும் அவர் அமர்வில் பங்குபற்றத் தவறின் அவரது உறுப்பினர் பதவி செயலிழந்துவிடும் என்றும் மன்றில் தெரிவித்தார்.

கமலேந்திரன் வடமாகாண சபை அமர்வில் பங்குபற்றுவதற்குப் பொலிஸார் நீதிமன்றில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. அவரை அழைத்துச் செல்வதற்கு ஆயுதம் தாங்கிய பொலிஸார் முழுப் பாதுகாப்பு வழங்குவார்களாயின் வடமாகாண சபை அமர்வில் கமல் பங்கேற்பதற்குத் தாம் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று யாழ்.சிறைச்சாலைத் தரப்பினரால் நீதிமன்றத்துக்குக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றைப் பரிசீலித்த நீதிமன்று சபை அமர்வில் கமல் பங்கேற்க நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியது. அமர்வுக்குச் சென்று திரும்பும் வரை கமல் யாருடனும் கதைக்கக் கூடாது. தனது வழக்குத் தொடர்பில் எதுவும் பேசக் கூடாது, வழக்கின் முறைப்பாட்டாளர்கள், சாட்சிகளுடன் தொடர்பு படக்கூடாது, சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் அல்லது இடையூறு ஏற்படுத்தக்கூடாது ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. நீதிமன்றை அவமதிக்கும் வகையில் ஏதாவது செயலில் ஈடுபடுவாராயின் அமர்வில் பங்கேற்பதற்கான அனுமதி நீதிமன்றினால் இரத்துச் செய்யப்படும் என்றும் கமல் அறிவுறுத்தப்பட்டார்.

அவர் அமர்வுக்குச் செல்வதற்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு யாழ்.பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிமன்று உத்தரவிட்டதோடு அதில் ஏதாவது சிக்கல் இருக்குமாயின் அது தொடர்பில் மன்றுக்கு அறிவிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தவிர இந்த வழக்கில் சந்தேக நபர்களான கமல், யசிந்தன் மற்றும் அனித்தா ஆகிய மூவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தருமான தானியேல் றெக்ஷயன் 2013 நவம்பர் மாதம் 26ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். டிசம்பர் 3ஆம் திகதி கமல் கைது செய்யப்பட்டார். அதற்கு முதல் நாள் யசிந்தன் மற்றும் அனித்தா ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-4)

### பேராற்றுக்கு

கள் அமைக்கப்படாதமையே இதற்குக் காரணம் என்று மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால் தமது மீன்பாடுகள் குறைவடைவதாக நாவாந்துறை, காக்கைதீவு மற்றும் சாவற்கட்டு மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் அடுத்த கட்ட வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன்போது மீனவர்கள் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக அவர்களையும் இணைத்துக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பேராற்றுக்குக் குறுக்காகப் புதியதொரு பாலம் அமைக்கும் முடிவு எட்டப்பட்டுள்ளது. (த-5)

### இலங்கை

கள் ஆக்கப் பணிகளுக்கு எதிரிடையானவை; குந்தகமானவை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"போருக்குப் பின்னர் நிலவும் சூழ்நிலையில் குறுகிய காலத்திற்குள் கடினமான காரியங்களை நிறைவேற்றிவிடுமாறு நிர்ப்பந்திப்பது ஏற்பு டைய ஒரு செயலாகாது. ஆக்கப் பணிகளின் பெறுமானங்களையும் மனதில் கொள்ளவேண்டும். அதனால் கால அவகாசம் தேவை.

பங்குதாரராக இருக்கும் ஒரு தரப்பினரை உணர்வுபூர்வமாகவும், புரிந்துணர்வோடும், ஆவலோடும் அணுகுவதே நேரிய முறைமையாகும். அந்நாட்டின் கௌரவம் மதிக்கப்படவேண்டும். இதை விடுத்து, கட்டாயப்படுத்தும் சக்திகள், நீண்டகால உறவில் தேவையற்ற மனஉளைச்சலை ஏற்படுத்துகின்றன.

அமெரிக்காவுடனான இலங்கையின் உறவுகள் பன்முகத் தன்மை கொண்டவை. பாதுகாப்பு, உயர்கல்வி, அநேக தொழில்துறைகளில் மேற்கொள்ளப்படும் முதலீடு ஆகியவை உட்பட பல்துறைகளிலும் நல்ல ஒத்துழைப்பே நிலவிவருகிறது.

இலங்கையிலுள்ள அமெரிக்க நிறுவனங்கள், அவற்றின் வர்த்தக செயற்பாடுகளை விஸ்தரித்து வருகின்றன. இந்த நாட்டில் தற்போது குடிகொண்டுள்ள அமைதி, ஸ்திரப்பாடு, நிலைவரங்கள் ஆகியவற்றை தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு இந்நிறுவனங்கள் செயற்படுகின்றன.

அமெரிக்காவுடன் தான்கொண்டுள்ள நட்புறவை இலங்கை மதிக் கின்றது. அதேவேளை, தற்போதைய விவகாரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டுவருகின்றது.

அமெரிக்க சமூகத் தலைவர்களுடனான சம்பாஷணைகளும் அவசியமானவை. மக்களுக்கும், மக்களுக்குமிடையிலான தொடர் பாடல்கள் இரு தரப்பு நல்லுறவில் முக்கிய அம்சங்களாகும். சமூகத் தலைவர்கள் பொருத்தமான - பயனுள்ள பங்களிப்பை நல்குவதற்கு இத்தருணத்தில் அனைத்து வாய்ப்புகளும் உள்ளன" - என்று குறிப்பிட்டுள்ளார்.

### கமலை

றெக்ஷயன் இறப்பதற்கு முன்னர் எழுதி வைத்த கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தவர் இவரே. றெக்ஷயன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஈபிடிபியின் யாழ். மாவட்ட முன்னாள் அமைப்பாளர் கமல் எனப்படும் கந்தசாமி கமலேந்திரனை வெளியே நடமாட விட்டால் தனக்கும் குடும்பத்தினருக்கும் அது ஆபத்தானதாக மாறிவிடும் என்றும் அவர் அச்சம் வெளியிட்டார்.

றெக்ஷயன் கொலை வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அங்கு றெஜீனா வந்திருந்தார். விசாரணைகளின் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார். தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் அதற்குக் கமல் தான் பொறுப்பாக இருப்பார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

"கமல் மாகாண சபை அமர்வுகளில் பங்கேற்றாலோ அல்லது பிணையில் விடுவிக்கப் பட்டாலோ அவர் அல்லது அவரது ஆள்கள் மூலமாக எமக்கு எதிராகச் சதி செய்வார் என்றே எனது உள் மனம் எச்சரிக்கை செய்கிறது" என்றும் றெஜீனா கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தானியேல் றெஜீனா மேலும் தெரிவித்ததாவது:

நாரந்தனை மத்தியில் நான் வசிக்கும் வாடகை வீட்டின் மீது கடந்த டிசெம்பர் 25ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் யாரோ கல் வீசித் தாக்கினர். அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு தொலைபேசி மூலமாகத் தெரியப்படுத்தினேன். அவர்கள் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர்.

மறுநாள் அது தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தேன். ஆனால் கல் எறிந்தவர்கள் யார் என்று தெரியாமல் முறைப்பாடு செய்ய முடியாது என்று கூறிப் பொலிஸார் எனது முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லை. அதனால் பயத்தின் மத்தியில் திரும்பிச் சென்றுவிட்டேன். வீட்டை அண்மித்து நள்ளிரவில் மோட்டார் சைக்கிள்கள் நடமாடுகின்றன. இரவில் நாய்கள் குரைத்துக் கொண்டிருக்கின்றன. பயமாக உள்ளது. வீட்டில் இருப்பதற்குப் பயமாக இருக்கிறது. எமக்கு ஏதாவது துன்பம் விளைவித்து விடுவார்களோ என்ற அச்சத்தினாலேயே சாகிறோம்.

தானியேல் றெக்ஷயன் நவம்பர் 26ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். ஆனால் அதற்கு முன்னரான நவம்பர் 4ஆம் திகதி அன்று தனது சகோதரியிடம் அவர் கொடுத்திருந்த கடிதத்தில் தனக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதற்கு தனது மனைவியும் மாமியாருமே காரணம் என்று தெரிவித்திருந்தார்.

"தனது உயிருக்கு ஏதும் அபாயம் ஏற்பட்டால் இந்தக் கடிதத்தை நீதிபதியிடம் கொடு" என்று அண்ணா என்னிடம் கூறி இருந்தார். அவர் சுட்டுக் கொல்லப்பட்டதும் அந்தக் கடிதத்தை தம்மிடம் தருமாறு வேறு ஆள்கள் என்னிடம் வற்புறுத்திக் கொண்டிருந்தனர். நான் மறுத்து விட்டேன். அதனாலேயே தற்போது எனக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவர்களால் பாதிப்புவரும் என்றே உள் மனம் கூறுகிறது. எனக்கு தொழில் வாய்ப்பும் இல்லை. அதனால் வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கிறேன்" என்று றெஜீனா மேலும் தெரிவித்தார். (உ-4)

### போர்

வர் மிச்செல் ஜே. சிசன்.

நாகர்கோவிலில் நேற்று இடம்பெற்ற மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மீள் குடியேறிய நாகர்கோவில் கிழக்கு, மேற்குக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 40 இயந்திரப் படகுகள் 80 மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் வழங்கும் திட்டத்தை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேற்று ஆரம் பித்து வைத்தார்.

நாகர்கோவில் பொது மண்டபத்தில் ச.சந்திரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த மாத ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென நடத்திய கூட்டத்தில் மக்களுக்காக நாம் என்ன செய்கின்றோம் எதைச் செய்கிறோம் எனக் கேள்வியெழுப்பியிருந்தார். அமெரிக்க ஜனாதிபதியின் வேண்டுதலை இங்கே நிறைவேற்றியுள்ளோம்.

அழகான இடம் இது. அழகைப் போல மக்களின் வாழ்க்கை இல்லை. 2002 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்க அணியோடு நானும் இங்கு வந்திருந்தேன். மோசமான பாதைகள் வழியே இங்கிருந்து சாவகச்சேரி ஊடாக மீசாலைக்குச் சென்று கண்ணிவெடி அகற்றுவதைப் பார்வையிட்டோம். முகமாலை முன் அரங்குக் குச் சென்று பார்வையிட்டோம். பின்னர் யாழ்ப்பாணம் சென்று யாழ். ஆயரையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியிருந்தோம். அந்த நிகழ்வுகள் பசுமையானது. யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து துன்பப்பட்டுக்கொண்டிருந்த மக்களையும் மற்றும் பாதிக்கப்பட்ட தாய்மார்கள், தந்தையர்களைச் சந்தித்ததை மறக்க முடியாது.

2009 ஆம் ஆண்டு போர் முடிந்தாலும், தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்து வருகின்றன. தொழில்கள் இல்லை. சொந்த வீடுகளுக்குச் செல்ல முடியாத வகையில் மக்கள் உள்ளார்கள். கலவரங்களில் சிக்குண்ட மக்களுக்கு இது போன்ற தொழில் உதவிப்பணி முக்கியமானது. விவசாயிகள், மீனவர்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டும். மக்கள் வீடு திரும்பும் நடவடிக்கைக்கு யு.எஸ்.எயிட் நிறுவனத்துடன் அரசு, சேவாலங்கா நிறுவனம் என்பன எம்முடன் இணைந்து பணியாற்றுகின்றன. சேவாலங்கா, யு.எஸ்.எயிட் என்பன மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிப் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையான திருப்பத்துக்கு உதவுகின்றன என்றார்.

நேற்றைய தினம் முதல் கட்டமாக 10 இயந்திரப்படகுகளை 20 மீனவர்களுக்கு அமெரிக்க தூதுவர் கையளித்தார். எஞ்சிய 30 இயந்திரப்படகுகள் 60 மீனவர்களுக்கு கடற்றொழிலாளர் சங்கம் மூலமாக அடுத்த வாரத்தில் கையளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இரு மீனவர்களுக்கு ஒரு இயந்திரப்படகு என்ற அடிப்படையில் கூட்டுத் தொழில் புரியும் பொருட்டு இவை வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இயந்திரப் படகும் 4.5 இலட்சம் ரூபா பெறுமதியானவையாகும். படகில் இணைக்கப்பட்டுள்ள வெளி இணைப்பு இயந்திரம் 9.9 குதிரைச் சக்தி கொண்டது. (த-173)

### ஆலயங்களின்

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆலயங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாக்குமாறு வலியுறுத்தி இன்று முற்பகல் 11 மணிக்கு ஆன்மீகப் பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

பேரணிக்கு ஆதரவு தெரிவித்து சிவதொண்டர் அமைப்பு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாடு உட்பட தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள ஆலயங்களில் அண்மைக்காலமாக மத நிந்தனைச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன. இளைஞர் யுவதிகளிடம் ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளும் குறைவடைந்து செல்கின்றன.

எனவே இவற்றைத் தடுக்க இளைஞர், யுவதிகள் முன் வர வேண்டும். இந்துக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஓம் நமசிவாய என்ற ஆன்மீக ஊர்வலத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றுள்ளது.

இன்று காலை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் ஆரம்பமாகும் இந்தப் பேரணி கீரிமலை நகுலேஸ்வரன் ஆலயத்தில் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-400)

### கொக்கிளாய்

படகுகள் சேதமடைந்த நிலையில் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கிளாய் கடல்நீரேரியில் புல்மோட்டை முஸ்லிம்கள் பயன்படுத்திய தடைசெய்யப்பட்ட வலைகளைக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் கைப்பற்றியதைத் தொடர்ந்தே, இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதனால் புளியமுனைக் கிராமத்தில் நேற்றுப் பெரும் பதற்றநிலை தோன்றியுள்ளது.

புல்மோட்டையைச் சேர்ந்த முஸ்லிம்கள் கொக்கிளாய் கடல்நீரேரியில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பாவித்தும் தடைசெய்யப்பட்ட மீன்பிடிமுறைகளை உபயோகித்தும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் கடற்றொழிலாளர் தடைசெய்யப்பட்ட முறைகள் மற்றும் வலைகளைப் பாவிப்பவர்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

புதன்கிழமை இரவு மீனவர்கள் தொழில் முடிந்து வீடுதிரும்பும்போது அவர்கள் தங்களது படகுகள், வலைகள் என்பவற்றை வழக்கம் போல கடல் நீரேரியில் நிறுத்திவிட்டு வந்துள்ளனர்.

நேற்றுக் காலை சென்று பார்த்த போது 3 படகுகள், 3 இயந்திரங்கள், குல்லாப் படகு மற்றும் வலைகள் என்பன களவாடப்பட்டிருந்தன. இவற்றின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமாலை குறித்த பகுதிக்குச் சென்ற வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மீனவர்களுடன் சென்று கடலில் தேடுதல் நடத்திய போது, சேதமாக்கப்பட்ட நிலையில் இரண்டு படகுகளை மீட்டுக் கரைக்கு கொண்டு வந்தனர். அத்துடன் பற்றைக்குள் இருந்து ஒரு குல்லாவும் மீட்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (த-5)

### யாழ்.

வனம் ஒன்றைச் சேர்ந்தவர்களே வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரும் (இவர் சில வாரங்களுக்கு முன்னர் தான் கடமையேற்றார்) வைத்தியசாலையுடன் தொடர்புபட்டிராத ஒருவருமே வைத்திய சாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டத்தின் மொட்டை மாடியில் அமர்ந்து கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த போது பிடிபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரிடமும் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். பல மாதங்களாக இந்தச் செயற்பாடு இடம்பெற்று வந்த நிலையில் அது தொடர்பில் கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு கஞ்சாப் போதைப் பொருளை விநியோகித்து வந்தவர்கள் யார் என்பது உள்ளிட்ட விடயங்கள் விசாரணையின் மூலமே தெரியவரும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-4 -17)

### இந்திய

அதிபர் திணைக்கள அறிவுறுத்தலுக்கு அமைய ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சட்டவிரோத றோலர் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டால் பல நாள்களுக்குத் தடுத்து வைக்கப்படுவதுண்டு. ஆனால் படகு பழுதடைந்ததனால் உயிர் பிழைப்பதற்காக நீந்திக் கரை சேர்ந்த போதும் இவ்வளவு நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு இன்று (நேற்று) விடுதலை செய்யப் பட் டுள்ளமை கவலையளிக்கிறது என்று அந்த மீனவர்கள் தெரிவித்தனர். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவரையாளி, நெல்லியடி, உடுப்பிட்டி அணிகள் வடமராட்சி வலய உதைபந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன.24
வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் 15 வயதுப் பிரிவில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும், 17 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய கல்லூரியும், 19 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆகின.
நேற்று முன்தினம் புதன்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.
முதலில் இடம்பெற்ற 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி மோதிக் கொண்டது.



இதில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 2:1 என்ற கோல் கணக்கி ல் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.
17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் விக்னேஸ்வராக் கல்லூரிஅணியை எதிர்த்துவிளையாடிய கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.
19 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி, தோல்வி தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

## முல்லைத்தீவு லீக் நடத்தும் உதைபந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜன.24
முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
முதல் நாள் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதிக்கும் திசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு உதயசூரியன் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23-288)

* * *


யாழ்ப்பாணம்,ஜன.24
சுன்னாகம் சூராவத்தை நியூ வொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் காந்தன் நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூ வொரியஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன.24
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நியூ பைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம் தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜன.24
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று ஆரம்பமாகும் இரண்டாவது சுற்றுக்கான ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



பிரிட்டன் தமிழ்ப் பாடசாலைகள் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் மூன்றாமிடத்தைப் பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணித் தலைவரிடம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெற்றிக்கிண்ணத்தை வழங்குகிறார். (த-23)

## தேவரையாளியின் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜன.24
கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் விளையாட்டுக்களில் முதல் நிகழ்வான மரதன் ஓட்டப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு கல்லூரி முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.
மரதன் ஓட்டப் போட்டியில் 100 மாணவர்களும், 25 மாணவிகளும் பங்கு கொள்ளவுள்ளனர் என்றும் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் கல்லூரி அதிபர் நவநீதமணி தெரிவித்துள்ளார். (த-23)

## நெடுந்தீவு உதைபந்தாட்டத்தில் கிண்ணத்தை வென்றது உதயசூரியன்



யாழ்ப்பாணம், ஜன.24
நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான [illegible] போட்டியில் ஆண்களுக்கான உதை பந்தாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு சிக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் இடம்பெற்றது.
இறுதியாட்டத்தில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஐக்கிய தீபம் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## பளு தூக்கும் போட்டி பெப்ரவரி 4 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன.24
யாழ்.மாவட்ட பளு தூக்கும் சங்கத்தினால் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் பளு தூக்கும் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள், வீரர்கள் போட்டிக்கான விண்ணப்பங்களைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

## புதிய பாரதி சம்பியன்

கிளிநொச்சி. ஜன.24
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
கடந்த திங்கட்கிழமை மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மலையாளபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌஷல் சில்வா சிறந்த வீரர்

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகச் செயற்படுவதற்கு கௌஷல் சில்வா மிகச்சிறந்த தெரிவு என இலங்கை அணியின் விலகிச் செல்லும் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை அணியில் கௌஷல் சில்வா ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இடம்பெற்றிருந்தார்.

இதற்கு முன்னர் 3 டெஸ்ட் போட்டிகளில் அவர் பங்குபற்றியிருந்தாலும், நீண்ட இடைவெளிக் குப் பின்னர் அவர் மீண்டும் இலங்கை தேசிய அணியில் இடம்பெற்றிருந்தார். இத்தொடரில்



ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய கௌஷல் சில்வா, 307 ஓட்டங்களை 51.16 என்ற சராசரியில் பெற்றிருந்தார். சிறப்பான துடுப்பாட்ட இயல்பையும் வெளிப்படுத்தியிருந் தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த கிரஹம் போர்ட், இதற்கு முன்னர் கௌஷல் சில்வாவின் மன இயல்பு பற்றித் தெரிந்திருக்கவில்லை எனவும், ஆனால் இத்தொடரில் அவரோடு பணியாற்றும் போது அவர் மிகச்சிறந்த மனத் தெளிவைக் கொண்டிருப்பதை உணர்ந்ததாக வும் தெரிவித்தார்.

கௌஷல் சில்வா உறுதியான மனநிலையைக் கொண்டவர் எனக் குறிப்பிட்ட கிரஹம் போர்ட், அதேபோல் சிறப்பான துடுப்பாட்ட நுட்பங்களை [illegible] கொண்டிருக்கிறார் எனவும், திலகரட்ண டில்ஷான் ஓய்வுபெற்றுள்ள நிலையில், அவரின் இடத்துக்கு மிகச்சிறப்பான தெரிவாகக் கௌஷல் சில்வாவை இலங்கை பெற்றிருப்பது சிறப்பா னது எனக் குறிப்பிட்டார்.

2012ஆம் ஆண்டு இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்ற கிரஹம் போர்ட், பாகிஸ்தானுக்கெதிரான தொடரோடு இலங்கையின் பயிற்றுவிப்பாளர் பதவியிலி ருந்து விலகிக்கொள்வது குறிப்பிடத்தக்கது. (த)



# முதல்நிலை அணியாக ஆஸி.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளின் தரப்படுத்தலில் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி யின் பின்னரே ஆஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, இந்தத் தொடரை உலகின் முதல்நிலை ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியாக ஆரம்பித்தது.

ஆனால், முதலாவது போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்திருந்தது.


மறுபுறத்தில் இங்கிலாந்துக்கெதிரான தொடரில் ஆஸ்திரேலிய அணி 3-0 என்ற கணக்கில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியி ருந்தது.

2ஆவது போட்டி நேற்று முன் தினம் இடம்பெற்ற நிலையில், தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொள்ள இந்திய அணி அந்தப் போட்டியில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நிலை காணப்பட்ட போதிலும், இந்திய அணி தோல்வியடைந்திருந்தது.

இதன் காரணமாக ஆஸ்திரேலிய அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான 5 போட்டிகள் கொண்ட தொடரை ஆஸ்திரேலிய அணி 5-0 என்ற கணக் கில் வெற்றி கொள்ளுமாயின், இந்திய அணி நியூசிலாந்துக்கெதிரான தொடரை 3-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டாலும் ஆஸ்திரேலிய அணி முதலிடத்தை வகிக்கும். (த)

# ஆஸ்திரேலிய சுழற்பந்து பயிற்சியாளராக வோர்ன்



ஆஸ்திரேலிய அணியின் சிறப்புச் சுழற்பந்து வீச்சுப் பயிற்று விப்பாளராக அவ்வணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் நியமிக்கப்பட்டுள்ளார். உலக 20/20 தொடருக்கான தயார்ப் படுத்தல்களில் ஷேன் வோர்ன் பங்குபெறவுள்ளார்.

மார்ச் மாதம் பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக 20/20 தொடரில் சுழற்பந்து வீச்சு அதிக பங்கை வகிக்குமென எதிர்பார்க் கப்படுகிறது.

இந்நிலையிலேயே ஆஸ்திரேலி யாவின் சிறப்புச் சுழற்பந்து வீச் சுப் பயிற்றுவிப்பாளராக ஷேன் வோர்ன் உலக 20/20 தொடருக்காகச் செயற்படவுள்ளார். அவர் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கும் ஆலோசகராக டெரன் லீமனுக்குப் பங்களிப்புகளை வழங்குவார் என ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை குறிப்பிட்டது.

ஆஸ்திரேலியாவின் தேசிய அணிகள் சிறப்புத் தகுதிவாய்ந்த விசேட பயிற்றுவிப்பாளர்களின் பயிற்சிகளின் உதவியுடன் சிறந்த பலனைப் பெற முடியுமெனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, அதன்படி உலக 20/20 தொடருக்கு முன்னதாக ஷேன் வோர்ன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதன்படி, ஆஸ்திரேலியாவின் தென்னாபிரிக்கச் சுற்றுலாவில் அவ்வணியோடு இணையவுள்ள ஷேன் வோர்ன், பங்களாதேஷ் உலக 20/20 தொடரிலும் பணியாற்றவுள்ளார். (த)

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள்

# சிறப்பாக ஆடியிருக்க வேண்டும்

நியூசிலாந்து அணிக்கெதிரான 2ஆவது ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என இந் திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, 5 போட்டி கள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் ஏற் கனவே தோல்வியடைந்திருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டா வது போட்டியிலும் தோல்வியடைந்திருந் தது.

42 பந்துப்பரிமாற்றங்களில் 297 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி மெதுவான ஆரம் பத்தைப் பெற்றுக் கொண்டிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் 7.4 பந்துப்பரிமாற்றங் களில் 22 ஓட்டங்களை மாத்திரமே பகிர்ந் திருந்தனர்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மகேந்திரசிங் டோனி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரத்துக்குத் துடுப்பெடுத் தாடியிருக்க வேண்டும் எனவும், அவ்வாறு நீண்ட நேரத்திற்குத் துடுப்பெடுத்தாடியிருந் தால் அவர்களால் அடித்தாடியிருந்திருக்க முடிந்திருக்கும் எனக் குறிப்பிட்டார். அவ் வாறு இருந்திருந்தால் இந்தியாவின் மத்திய வரிசையின் மேல் அழுத்தம் ஏற்பட் டிருக்காது என அவர் குறிப்பிட் டார்.

ஆனால், அவ்வாறு நடந்தி ருக்கவில்லை எனக் குறிப் பிட்ட மகேந்திரசிங் டோனி, எப்போதும் எல்லாம் திட்ட மிட்டபடி இடம்பெறுவ தில்லை எனவும் குறிப்பிட்டார். எனி னும் வழங்கப்பட்ட இலக்கை நெருங்கிச் செல்லுமளவுக்கு இந்தியாவின் மத்தியவரிசை சிறப்பாகச் செயற்பட்டிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (த)

# நியூஸிலாந்துக்கு வெற்றி

நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இந்திய அணிக்கும் நியூஸி லாந்து அணிக்குமிடையிலான 05 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது போட்டி யிலும் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

ஹமில்ற்றனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 33.2 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்கு களை இழந்து 170 ஓட்டங்களுடன் காணப்பட்ட போது மழை குறுக்கிட்டது. அதன் பின்னர் போட்டி 42 பந்துப்பரிமாற்றங்களாக மாற்றப்பட்டு மீண்டும் ஆரம்பித்தபோது, அவ்வணி 42 பந்துப் பரிமாற்றங் களில் 07 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக கேன் வில்லியம்சன் 87 பந்துகளில் 77 ஓட்டங்களையும் றொஸ்ரெய்லர் 56 பந்துகளில் 57 ஓட்டங்களையும் கொரே அன்டர்சன் 17 பந்துகளில் 44 ஓட்டங்களை யும் மார்ட் டின் கப்ரில் 65 பந்துகளில் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக மொஹமட் ஷமி 03 இலக்குகளையும் புவனேஷ்வர் குமார், இஷாந்த் சர்மா, இரவீந்திர ஜடேஜா, சுரேஷ் ரெய்னா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

டக்வோர்த் லூயிஸ் முறையில் 42 பந்துப்பரிமாற்றங்களில் 297 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.3 பந்துப்பரிமாற்றங்களில் 09 இலக்குகளை இழந்து 277 ஓட்டங்களுடன் காணப்பட்டபோது மழை மீண்டும் குறுக்கிட்டது. மீண்டும் டக் வோர்த் லூயிஸ் முறையில் போட்டியின் முடிவு கணிக்கப்பட, இந்திய அணி 15 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. முதலாவது இலக்குக்காக 22 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, 02 இலக்குகளை இழந்து 37 ஓட்டங்களுடன் தடுமாறியபோதிலும், 3ஆவது இலக்குக்காக விராட் கோஹ்லி, அஜின்கியா ரஹானே இருவரும் 90 ஓட்டங்களையும் 5ஆவது இலக்குக்காக மகேந்திரசிங் டோனி, சுரேஷ் ரெய்னா இருவரும் 62 ஓட்டங்களையும் பகிர்ந்தனர். ஆனால், அதன் பின்னர் இலக்குகள் வீழ்த்தப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் கோஹ்லி 65 பந்துகளில் 78 ஓட்டங்களையும் மகேந்திரசிங் டோனி 44 பந்துகளில் 56 ஓட்டங்களையும் அஜின் கியா ரஹானே 42 பந்துகளில் 36 ஓட்டங்களையும் சுரேஷ் ரெய்னா 22 பந்துகளில் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக ரிம் சௌதி 04 இலக்குகளையும் கொரே அன்டர்சன் 03 இலக்குகளையும் கைல் மில்ஸ், மிற்சல் மக்லநகன் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.



இப்போட்டியின் நாயகனாக கேன் வில்லியம்சன் தெரி வானார். 05 போட்டிகள் கொண்ட இத்தொடரில், 02 போட்டிகளின் நிறைவில் நியூஸிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலைவகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் செல்லும் இலங்கை அணி அறிவிப்பு




பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கை டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த வீரர்களில் 13 வீரர்கள் இக் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

அதில் இடம்பெற்றிருந்த சச்சித்திர சேனநாயக்க, லஹிரு திரிமன்ன இருவரும் இக் குழாமில் இடம்பெறவில்லை. சச்சித்திர சேனநாயக்கவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதோடு, லஹிரு திரிமன்னவுக்கு உபாதை காரணமாக இடம் கிடைக்கவில்லை.

சச்சித்திர சேனநாயக்கவுக்குப் பதிலாக அஜந்த மெண்டிஸ் இக்குழாமில் இடம்பெற்றுள்ளதோடு, காயமடைந்துள்ள லஹிரு திரிமன்னவுக்குப் பதிலாக கித்துருவன் விதானகே இடம்பெற்றுள்ளார்.

2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, கௌஷல் சில்வா, திமுத் கருணாரத்ன, கித்துருவன் விதானகே, பிரசன்ன ஜெயவர்தன, நுவான் குலசேகர, சுரங்க லக்மால், ஷமின்ட எரங்க, நுவான் பிரதீப், அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, விஷ்வா பெர்னாண்டோ. (த-400)

### அரையிறுதிக்குள்
# நடால், பெரடர்



ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரபெல் நடால், ரோஜர் பெரடர் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினார்கள்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடந்து வருகின்றது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முன்னிலை வீரர் ரபேல் நடால்(ஸ்பெயின்), 22ஆம் நிலை வீரர் டிமித் ரோவை(பல்கேரியா) எதிர் கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ரபேல் நடால் 3 - 6, 7 - 6, 7 - 6, 6 - 2 என்ற செற் கணக்கில் தனக்கு கடும் சவால் அளித்த 22 வயதான டிமித் ரோவை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறினார்.

**பெடரர் வெற்றி**

மற்றொரு காலிஇறுதி ஆட்டத்தில் 6ஆம் நிலை வீரர் ரோஜர் பெரடர்(சுவிட்சர்லாந்து), 4 ஆம் நிலை வீரர் ஆன்டி முர்ரேயை(இங்கிலாந்து) சந்தித்தார்.

18ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை குறிவைக்கும் பெடரர் 6 - 3, 6 - 4 -7 -6 (8 -6) 6 -3 என்ற செற் கணக்கில் முர்ரேயை சாய்த்து 11ஆவது முறையாக ஆஸ்திரேலிய ஓபன் அரையிறுதிக்குள் நுழைந்தார். (த-400)


## மரண அறிவித்தல்

### அருட்தந்தை S.J. பிரான்சிஸ் (அ.ம.தி)



மாதகலைப்பிறப்பிடமாகக் கொண்ட அமலமரிதியாகிகள் சபைக்குருவாகிய அருட்தந்தை S.J பிரான்சிஸ் (அ.ம.தி) அவர்கள் நேற்றைய தினம் (23.01.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்

அருட்தந்தையின் உடலம் கொழும்புத்துறை புனித இயூஜின் டீ. மசனட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.01.2014) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :

அருட்தந்தை ம. போல் நட்சேதிரம் அ.ம.தி

முதல்வர் அமலமரிதியாகிகள் சபை

தொடர்பகம் 657/1 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்



## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.

4½ டிராக்டர் 19,000/=

தொடர்பு: கண்ணா, 077 759 0792

(43774)(4.6.3)



SAAMSON Language School

SPOKEN ENGLISH

அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

3 மாதங்களில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 25.01.2014 சனிக்கிழமை

பிரிவு 1: 08.00-10.00 பிரிவு 2: 10.00-12.00 பிரிவு 3: 11.30-01.00

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 27.01.2014 (திங்கள்,புதன்)

1. காலை 9.00-11.00 2. முற்பகல் 11.00-01.00

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். 077 021 4567


# சிறப்பான நிலையில் பங்களாதேஷ் அணி




பங்களாதேஷ் அணி முன் னெப்போதுமில்லா தளவு சிறப்பான நிலையில் உள்ளதாக அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தமிம் இக்பால் தெரிவித்துள்ளார்.

அணியில் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்கள் காணப்படுவ தாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

இலங்கை அணி பங் களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வுள்ளதோடு அதனைத் தொடர்ந்து ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளும் அவற் றைத் தொடர்ந்து உலக 20/ 20 தொடரும் பங்களாதே ஷில் இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள தமிம் இக்பால், புதிய வீரர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். சிரேஷ்ட வீரராக இருந்தாலும் புதிய வீரர்களுடன் கருத்துக் களைப் பரிமாறும் போது சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

புதிய வீரர்களோடு இணைந்து செயற்படுவதை தான் விரும் புவதாகக் குறிப்பிட்ட தமிம் இக்பால், புதிய வீரர்கள் கடினமாகப் பயிற்சிகளில் ஈடுபடும் போது அவர்கள் உடற் தகுதி குறித்து அதிக கவனமெடுக்கும் போது தானும் அவ்வாறு காணப்பட வேண்டுமென்ற உந்துதல் காணப் படுவதாக அவர் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ் அணிக்கு முக் கியமான போட்டிகள் வரவுள்ள நிலையில் அனைத்து வீரர்களும் உடற் தகுதியுடன் காணப்படுவது முக்கிய மானது எனக் கருதுவதாகத் தெரிவித்த தமிம் இக்பால், இந்தக் காலங்களில் போதியளவு ஓய்வுகிடைக்கப்பெறாது எனவும் அவர் தெரிவித்தார். (த-400)


## மரண அறிவித்தல்

### சரவணை முருகேசு
(வன்னி சின்னத்தம்பி)

வெள்ளாங்குளம் மன்னாரைப் பிறப்பிடாவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை முருகேசு நேற்று (23.01.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.01.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வெள்ளாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

மு. விக்கினேஸ்வரன் (விக்கினா)

(மகன்) 0775327172



Physics Group Class
Thanchi Lane, Arasadi Road Jaffna

A/L 2015 அலைகளும் அதிர்வுகளும்

ஆரம்பம் : 25.01.2014 சனி (4.00 Pm)

Batch: சனி, ஞாயிறு 04-5.30 Pm; திங்கள், புதன் 6.30-7.30 Am

By : K. Selvan BSc (Hons)



போட்டிப்பரீட்சை கருத்தரங்குகள்

Feb - 01இல் நடைபெறவுள்ள

சட்டமாணி தெரிவு
சனி ஞாயிறு 10.00 - 4.00 மணி

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (பட்டதாரிகளுக்கு)
ஞாயிறு 1.00 மணிவரை

விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்
சனி 1.00 மணி

இப்பரீட்சைகளுக்கான தவசேகர் ஆசிரியரின் வழகாட்டி நூல்களை வகுப்பிலும் புத்தக நிலையங்களிலும் பெறலாம்

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள்பிரிவு
யாழ்.நகர் 075 4164564



## தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம்-10.02.2014 நிறைவு-25.02.2014

திருச்சி, திருப்பதி, மதுரை, இராமேஸ்வரம், 9 நவக்கிரக கோயில், மேல் மருவத்தூர், கும்பகோணம், தஞ்சாவூர், பஞ்சபூதத் தலங்கள் உட்பட 40இற்குக் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். மேல் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்க.

தொடர்பு : கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்

077 768 0102

()(7.6.3)



கணனி வகுப்புக்கள்...

IT Project தொடர்பான வழிகாட்டல் கற்கை நெறி

ஆரம்பம் 25.01.2014 4.00 மணிக்கு

Programming Course: VB 6.0, VB.Net, C#

Web Develop Course: HTML, CSS, Java Script, PHP, My SQL



Computer Hardware Course

Office Management Course

Multimedia Course

Call Now - 077 2487082, 0212256165

Micro System Development Centre

Alady Junction, Jaffna Road, Manipay.



## கட்டடப்பொருள் விற்பனைக்கு

தரநிர்ணய சான்றிதழ் பெற்ற கட்டட வேலைகளுக்குரிய கருங்கற்சல்லியில் அறுக்கப் பட்ட சகலவிதமான Block கற்கள், கிணற்று கட்டுக்கல், பூக்கற்கள் மற்றும் கட்டட நிர்மாணத்துக்குரிய சகலவிதமான தீராந்தி கள், பலகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

(43872)(7.6.3)

விநாயகர் கட்டடப்பொருள் வாணிபம்

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

077 774 8989, 077 301 9945



மாபெரும் இறுதிக்கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி (L.L.B) போட்டிப்பரீட்சை

விரிவுரையாளர்கள் P- உமாசங்கர் P-கமல்தாசன்

காலம்: சனி 9.00 - 3.00 வரையும்

நாவலர் கல்விநிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

0774696695



## ஓம் நமசிவாய ஆன்மீக பவனி 24.01.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி முதல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

(C/11084)(7.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.